# நன்றி சொல்லும் நேரம்



திக்குவல்லை கமால்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி சொல்லும் நேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் ஏனைய சிறுகதைத் தொகுப்புக்கள்

1. கோடையும் வரம்புகளை உடைக்கும் - 1984
2. குருட்டு வெளிச்சம் - 1993
3. விடை பிழைத்த கணக்கு - 1996
4. விடுதலை - 1996
5. புதிய பாதை - 1997
6. வரண்டுபோன மேகங்கள் - 1999
7. நோன்புக் கஞ்சி - 2007
8. முட்டைக் கோப்பி - 2010
9. கனவுத் தாரகை - 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NL/BRL/ 3313

# நன்றி சொல்லும் நேரம்

## திக்குவல்லை கமால்

வெளியீடு:

ஃபரீதா பிரசுரம்
104 அதுலுகம, பண்டாரகமை,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினது அனுசரணையுடன் அச்சிடப்பட்டது. இதன் உள்ளடக்கக் கருத்துக்கள் சபையின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை என்பதை கவனத்திற் கொள்ளவும்.

நன்றி சொல்லும் நேரம் - Nanri Sollum Nearam

(Short Stories)

© திக்குவல்லை கமால் - Dickwelle Kamal

முதற் பதிப்பு 2020

ISBN 978-955-7301-01-3

தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ள வெளியீட்டு பட்டியல் தரவு

கமால், திக்குவல்லை
நன்றி சொல்லும் நேரம்/ திக்குவல்லை கமால். -
பண்டாரகமை: ஆசிரியர், 2020.
ப. x, 105 ; செமீ. 21.
ISBN 978-955-7301-01-3
i. 894.8113 டிவி 23 ii. தலைப்பு
1. தமிழ் சிறுகதை

| | | |
|---|---|---|
| கணினி அச்சமைப்பு மற்றும் அட்டை வடிவமைப்பு | : | சோ. நளாயினி |
| வெளியீடு | : | ∴பரீதா பிரசுரம்<br>104 அதுலுகம, பண்டாரகமை, இலங்கை. |
| அச்சமைப்பு | : | மில்லேனியம் கிர∴பிக்ஸ்<br>30/7- 5th லேன், அம்பகஹபுர, மஹரகம. |
| விலை: | : | 300 /= |

| | | |
|---|---|---|
| Page Typesetting & Cover design by | : | S. Nalayini |
| Published by | : | Fareedha Publication,<br>104, Atulugama, Bandaragama, Sri Lanka. |
| Printed by | : | Millennium Graphics<br>30/7- 5th Lane, Amphagapura, Maharagama |
| Price | : | 300/- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

எனது ஆசிரியர்

**இர. சந்திரசேகர சர்மா**

அவர்களுக்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறவுகோல்

எனது முதலாவது சிறுகதை 1968ல் வெளியாகியது. அன்று முதல் இன்று வரை குறைந்தது ஒரு வருடத்திற்கு கதையாவது எழுதாமல் விட்டதில்லை. காலத்துடனான வாசிப்பிலும் பின் நிற்கவில்லை.

அப்போதெல்லாம் பெரிய எழுத்தாளர்களென்று கொண்டாடப்படுபவர்களெல்லாம் நாலோ ஐந்தோ புத்தகத்திற்கு மேல் எழுதியதில்லை. பெரும்பாலும் சொந்தப் பணத்தில் நூல் எழுதி, அச்சிட்டு, விநியோகிக்கும் சூழ்நிலையே காணப்பட்டது.

அப்போது எனக்கிருந்த மிகப் பெரிய கனவு நானும் பத்துக் கதையாவது கொண்ட ஒரு சிறுகதைத் தொகுதி வெளியிட வேண்டும் என்பதுதான்.

இப்பொழுது 'நன்றி சொல்லும் நேரம்' என்ற பத்தாவது சிறுகதை நூலை வெளிக் கொணர்வதென்பது பெரும் பிரமிப்பாகவே உள்ளது.

கதைக் கருக்கள் சமூக - கலாசாரப் பின்புலத்தில் தோற்றம் பெற்றாலும் அவை வெளிப்படுத்தும் செய்தி முழு மனிதகுலத்திற்குமானதாக அமைய வேண்டுமென்பதில் மிகக் கவனமாக இருந்து வருகிறேன்.

எனினும் பலதரப்பட்ட விமர்சனங்களுக்கும் என் கதைகள் உள்ளாவதை நான் விரும்பாமலில்லை. அவற்றைப் படித்து என்னைப் புடம் போட்டுக் கொள்ள நான் தயங்கியதுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் புதுப்புதுப் பிரச்சினைகளுக்குள் எம்மைத் தள்ளி வருவதால் மென்மேலும் புதிதுபுதிதாக சிந்திக்கவும் எழுதவும் வேண்டி நேர்ந்துள்ளது. எழுத்து எம் பணி. அது என்றும் தொடரும்.

இக்கதைகளை வெளியிட்ட பத்திரிகை, சஞ்சிகைகளுக்கும், அனுசரணை வழங்கிய தேசிய நூலக ஆவணவாக்கல் சபைக்கும் பல வழிகளிலும் துணை நின்றோர்க்கும் மிக்க நன்றி.

இலக்கிய தாகமே இமயதாகம்.

திக்குவல்லை கமால்
**15.02.2020**

**dickwellekamal @ gmail.com**
**0716386955, 0382292118**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மூக்குக் கண்ணாடி | 11 |
| 2. | பேய்கள் | 18 |
| 3. | வீரத்தாய் | 30 |
| 4. | நன்றி சொல்லும் நேரம் | 38 |
| 5. | ஊற்றுக் கண்கள் | 43 |
| 6. | இறுதி மரியாதை.... | 49 |
| 7. | அத்தர் வாசம் | 58 |
| 8. | உழைப்பு | 64 |
| 9. | வாழை மரங்கள் | 71 |
| 10. | தகுதிகாண் காலம் | 77 |
| 11. | தொடரும் சுவடுகள் | 84 |
| 12. | பொது மனிதன் | 90 |
| 13. | ஸாலிஹான புள்ள.... | 96 |
| 14. | இரண்டு வரம் | 103 |
| 15. | பெரியவர்கள் | 109 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூக்குக் கண்ணாடி

அழகாக இருந்ததா? அல்லது புதுமாற்றம் எனக்கு அழகு போல் தெரிந்ததா? தங்க ஃபிரேம் மூக்குக் கண்ணாடியோடு என் முகத்தை நான் மீண்டுமொருமுறை தளவாடியில் பார்த்தேன். பார்த்து இரசித்தேன்.

என்றோ ஒருநாள் முதன்முதலாக எமது பணிப்பாளர் விக்ரமரத்னாவை பார்த்தபோது, இப்படியொரு தங்க ஃபிரேம் கண்ணாடிதான் அணிந்திருந்தார். அன்றே எனக்கும் தங்க ஃபிரேம் ஆசை வந்துவிட்டது.

என்னெதிரே மேசையில் கடந்த மூன்று மாதமாக எனக்குக் கைகொடுத்த பிளாஸ்திக் கண்ணாடி கிடந்தது. பெறுமதி குறைந்ததென்பதைவிட இலவசமாகக் கிடைத்தமையே அதை ஓரம்கட்டிவைக்க காரணமாக இருந்தது. இக்கட்டான கட்டத்தில் துணைநின்ற அதற்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும்.

இருநூற்றைம்பது ரூபாகூட வராது என்று நண்பர் நந்தசேன சொன்னாலும் எனக்கென்றால் பெறுமதி சொல்ல முடியாத உதவியை அது செய்திருந்தது.

நான் சின்னப் பையனாக இருந்தபோது எங்களூரில் 'கண்ணாடியப்பா' என்றொரு கிழவர் இருந்தார். அக்காலத்தில் வேறு எவரும் அங்கு கண்ணாடி அணிந்தவர்களாகத் தெரியவில்லை. வட்டவட்டமான தடித்த இரு வில்லைகள். கழன்று விழாதபடி தாங்கிகள் இரண்டையும் நூல் போட்டு பின்னால் கட்டியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மெதுமெதுவாகத் தடியூன்றியபடி ரோட்டில் வரும்போது ஒருவித மரியாதைப் பயத்தோடுதான் நான் பார்த்துக் கொண்டிருப்பேன்.

அதற்குப் பின்பெல்லாம் எங்கெங்கு கண்ணாடிக் காரர்களைக் கண்டாலும் ஒரு தடவை 'கண்ணாடியப்பா' தோன்றி மறைவார்.

காலப் போக்கில் எக்கச்சக்கமான கண்ணாடிப் பாப்பாக்கள் கூட முளைத்து விட்டபோது மெல்லமெல்ல 'கண்ணாடியப்பா' மறைந்தே போய்விட்டார்.

படிக்கும் காலத்திலேயே என் கண்கள் ஆரோக்கிய மானவையென்ற நினைப்பு எனக்கு. எல்லா நோய்களுக்கும் பரம்பரைப் பாதிப்புண்டு என்று, பின்நாளில் தெரிந்து கொண்டபோது எனக்கு பயம் வந்துவிட்டது.

எங்கள் வாப்பாவிடமும் ஒரு கண்ணாடி இருந்தது. பேப்பர் வாசிக்கும் போதும் குர்ஆன் ஓதும்போதும் மாத்திரமே அவர் அதை அணிந்து கொள்வார். அது எனக்கும் தொற்றி விடுமோ என்ற பயந்தேன்.

இருபத்தொரு வயதிலேயே கிளறிக்கல் சேவைக்கு எடுபட்டபோது ஃபைல்களோடு மாரடிப்பதே வேலையாகி விட்டது. திணைக்களம் மாறித் திணைக்களமாக அதே வேலைதான்.

'கிளாக்கருக் கழகு ஓவர்டைம் என்பார்களே!' ஓய்வொழிச்சல் இல்லாத வேலையில் மூழ்கிப்போய்விட்டேன்.

"இப்பிடி வேலசெஞ்சி கண்ண அசடாக்கிக் கொள்ளாதே" அவ்வப்போது நண்பர்களும் உறவினர்களும் எச்சரிக்கத்தான் செய்தார்கள்.

பென்ஷன் வயதிலும் கண்ணாடியின்றி வேலை செய்யும் அப்புஹாமியிடம் இதுபற்றி விசாரித்தேன்.

"பதினெட்டு வயஸிலிருந்தே எனக்கு இதுதான் வேல" சிரித்தபடியே அவர்சொல்லி எனக்கு தைரியமூட்டினார்.

சரியாக முப்பத்தெட்டு முடியும்போது கண்களிலே சிற்சில கஷ்டங்கள் தெரிய ஆரம்பித்து விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாப்பது வயஸில எல்லாருக்கும் இப்பிடி வாரதான், பொறகு சரியாகிடும்" இப்படிப் பலபேர் சொன்னாலும் என்மனம் திருப்திப்படவில்லை.

கண் ஸ்பெஷலிஸ்டிடம் போய்விட்டேன். "கண்ணில ஒரு நோயுமில்ல. பார்வையில கொஞ்சம் வித்தியாசமிருக்கு. வேல செய்றப்போ இந்த லென்ஸப் பாவிங்க. பார்வை வழமபோல வந்திட்டா தொடர்ந்து பாவிக்க வேணாம்" என்றார்.

அப்படியே செய்துவந்தேன். இரண்டு வருடம் தாண்டியும் எதிர்பார்த்த மாற்றம் எதுவும் தென்படவில்லை. பதிலாக மேலும் தெளிவின்மை ஏற்படுவது போலிருந்தது.

"என்னடா இது கிளாஸ் டூ கிளாக்கர் போடுற கண்ணாடியா இது"

ஒருநாள் நந்தஸேன நாலுபேர் முன்னிலையில் எனது கண்ணாடியைக் குறைத்துப் பேசிவிட்டான். அவன் அப்படிப் பேசாவிட்டாலும் வெள்ளி ஃபிரேமில் ஒன்று செய்து கொள்ள வேண்டுமென்ற தேவை எனக்கு இருக்கவே செய்தது. அதற்காக ஒரு ஆயிரம் ரூபா தேறும்வரை பார்த்திருந்தேன்.

அந்த நாளும் வந்துவிட்டது. கண்களை மீண்டும் பரிசோதித்து தேவைக்கும் விலைக்குமேற்ப ஃபிரேமைத் தெரிவுசெய்து கொடுத்தேன். மூன்றே நாளில் முடித்துத் தந்துவிட்டார்கள்.

எழுத்து வேலைக்கு மட்டுமன்றி தூரப்பார்வைக்கும் பாவிக்கக்கூடிய விதத்தில் அதைத் தெரிவுசெய்ததால் ஒருபடி லேசாகிவிட்டது. வெள்ளி ஃபிரேம் வேறு எடுப்பாகவிருந்தது. வெய்யில் நேரத்தில் அணிந்தாலும் மெல்லிய கபில நிறத்தோடு கண்ணுக்கு இதமாக இருந்தது.

நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ஒரு பிரச்சினையுமில்லாமல் அந்த வெள்ளி ஃபிரேம் கண்ணாடியை பாவித்து வந்தேன். ஆண்டுதோறும் கண்ணைப் பரிசோதித்துக் கொள்வது நல்லதென்று ஆலோசனை சொல்லப்பட்டிருந்த போதிலும் அதையெல்லாம் நான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

அப்படியிருக்கும் போது ஒருநாள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையில் தேநீர் குடித்தால் நேரே கலாசார நிலையத்துக்குப் போய் பத்திரிகை படிப்பதும் வழக்கம். அங்கு போய் எல்லாப் பைகளையும் தொட்டுத் தொட்டுப் பார்த்தேன். கண்ணாடியைக் காணவில்லை. ஒருவேளை தேநீர் கடையில் வைத்துவிட்டேனோ என்று திரும்பிப்போய்ப் பார்த்தேன் காணவில்லை.

பள்ளிவாசலுக்கு ஓடோடிச் சென்றேன். டொய்லட்... ஹவுலடி... தொழுத இடமெல்லாம் தேடிப்பார்த்தேன். காணவில்லை. பிறகெங்கே? ஒ.்.பீஸில்தான் தேடவேண்டும். இனி நாளைக்குத்தான்.

வழக்கமாக ஒ.்.பீஸ் விட்டால் நேரே பள்ளிவாசலுக்குத்தான் வருவேன். இடையில் எங்கும் ஏறி இறங்குவதில்லை. நன்றாக நினைவு மீட்டிப் பார்த்தேன் அன்றும் அப்படித்தான்.

கல்விக் கந்தோர் படித்தவர்கள் கூடுமிடம். பள்ளிவாசல் பக்தர்கள் சேருமிடம். எனவே தவறி எங்கும் வைக்கப்பட்டிருந்தாலும் நிச்சயமாக இரண்டொரு நாளில் கைக்குவந்து சேர்ந்துவிடுமென்று எனக்கு திடமான நம்பிக்கையிருந்தது. கண்ணாடிக் கேஸில் பெயர், முகவரியை வேறு எழுதி ஒட்டியிருந்தேன்.

பள்ளிவாசலில் ஹஸ்ரத்...மோதினாரிடமும் காரியாலயத்தில் கென்ரீன்காரன்... காவலாளி வரையிலும் சொல்லிவைத்து, மூன்று நான்கு நாட்களாகி விட்டபோதும் எந்தவிதமான தகவலும் கிட்டவில்லை. வேறெங்கும் விடுபட்டுப் போயிருந்தால் இவ்வளவு கவலை ஏற்பட்டிருக்காதுதான்.

“எனத்தியன் போட்டுக்கொண்டு பெரட்டிய?” குசினிக்குள்ளிருந்து மனைவி சத்தமிட்டாள்.

நான் பதில் சொல்லவில்லை. மேசைலாச்சு, கபட், ராக்கை, புத்தகப்பெட்டி, சூட்கேஸ்... இப்படி எல்லாம் புரட்டிப் பார்த்தும் கிடைத்தது தோல்விதான்.

“எனத்தியனிது வந்தத்திலீந்து தேத்தண்ணியாலும் குடிக்காம...” மீண்டும் மனைவிதான்

“கண்ணாடி தேடிய” நான் சொன்னேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒபீஸுக்கு கொணுபெய்த்திட்டு... ஊட்டுக்கு வந்து தேடினாச் சரிவாரா?"

காலி கச்சேரியில் எனக்கு வேலை. திங்கள் அதிகாலையில் புறப்பட்டுச் சென்றால் வெள்ளி பின்னேரம் வீடுவந்து சேர்வேன்.

"அந்தக் கண்ணாடி இல்லாப் பெய்த்தேன்" நான் வேதனையை வெளிக்காட்டிச் சொன்னேன்.

"ஹ்ம்... ஒங்கட மொகத்துக்கு பஸிந்தான கண்ணாடி... எப்பவன் இல்லாப்போன?"

"நாலஞ்சி நாளாகிய... இனி அது கெடக்கிய வாக்கில்ல... இனுமொரு கண்ணாடீந்தேன். அதத்தான் தேடிய"

"ஆ... அந்த தாரோ வந்து தந்ததா?"

"ஓ... ஓ... அதுதான்"

"நீங்க சும்மா வீசிவெச்சீந்த... அன்ன நானெடுத்து அல்மாரி ஒசக்க வெச்ச"

"நல்ல காலம்... தேடித் தாங்கோ"

அப்போதே யாருக்காவது கொடுத்து விடுவோமா என்று யோசித்துவிட்டும் அவள் கொண்டுவந்து வைத்தது நல்லதாகப் போயிற்று.

"ஆ... இந்தாங்கோ"

எனக்கு கண்கிடைத்தது போலிருந்தது.

போட்டுப் பார்த்தேன் எழுத்துக்கள் தெளிவாகத் தெரிந்தன. என்றாலும் கண்களுக்குள் ஏதோ உருளுவது போல... கழற்றி கண்களைக் கசக்கிக் கொண்டேன்... கொஞ்ச நாளைக்கென்றாலும் இதனைப் பாவிக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

ஒருநாள் சில நண்பர்கள் வீடுதேடி வந்தார்கள். சமூகசேவைச் சங்கமொன்று வசதி குறைந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்க இருப்பதாகவும், அந்த முகாம் நடைபெறும் போது ஏற்பாட்டு ஒழுங்குகள் செய்ய வருமாறும் என்னைக் கேட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நல்ல விஷயம். லீவு நாள்தானே” என்று சம்மதம் தெரிவித்தேன்.

அதேபோன்று கணிசமான பங்களிப்பு செய்ய வேண்டியிருந்தது. கடைசி நேரத்தில், ஒத்துழைப்பு நல்கியவர்களும் தேவையாயின் கண்களைப் பரிசோதித்துக் கொள்ள சந்தர்ப்பம் கிட்டியது. அந்த வகையில் நானும் பரிசோதித்துக் கொண்டேன்.

இரண்டொரு வாரங்களில் கண்ணாடி வழங்கும் வைபவம் நடைபெற்றது. அதில் கலந்து கொள்ள முடியாத போதும் கண்ணாடி வந்து சேர்ந்திருந்தது. அதில் திருப்திப்படாததால் ஒரு பக்கமாகப் தள்ளி வைத்தேன்.

எப்படியோ அதற்கும் ஒரு காலம் வந்து விட்டது. நாலைந்து நாள் பாவிக்கும் போதே அதன் வலப்பக்கத் தாங்கி கழன்று விட்டது. ஆணி எங்கு விழுந்ததோ தெரியவில்லை. ஸ்டெப்ளர் பின் ஒன்றைப் புகுத்தி நுனியை மடித்து விட்டேன். அடுத்த பக்கம் எப்போது கழன்று விழுமோ என்ற எதிர்பார்ப்புடன் தொடர்ந்து பாவித்து வந்தேன்.

எப்போதோ இடையில் ஒருநாள் ஒ.்.பீஸ் பியோன் ஒருவன் சிங்கப்பூர் .்.பிரேம் என்று நாலைந்து தங்க .்.பிரேம்கள் கொண்டு வந்திருந்தான். உள்மன ஆசை விடுமா என்ன!

“வெளியால வாங்கியென்டா ஆயிரத்துக்கு மேல... பொய்யென்டா கேட்டுப் பாருங்கோ... இத ஐநூறு ரூவா போட்டுத்தாரன்”

ஆளுக்கொன்றாக எடுத்து புரட்டிப் புரட்டிப் பார்த்தோம். ஏற்கனவே தங்க .்.பிரேம் பாவிப்போரிடமும் காட்டி அபிப்பிராயங்களைச் சேகரித்தோம். இறுதியாக ஏகமனதான முடிவின்படி ஆளுக்கொன்றாக எடுத்துக் கொண்டோம்.

அது ஒரு வகையில் உதவியாகப் போய்விட்டது. அந்த .்.பிரேமையும் கொடுத்து, இந்த மூன்று மாதமாக கஷ்டப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிச்சம் பிடித்து ஐநூறு ரூபாவையும் கொடுத்து ஒரு ஒப்டீசியனில் கண்ணாடி வாங்கிவிட்டேன்.

"எனத்தியன் கண்ணாடியப் போட்டுப் போட்டு பஸிந்து பாக்கிய?"

வேலைகளை முடித்த நிலையில் மனைவி வந்து என்னுடைய சந்தோஷத்தில் பங்கு போட்டாள்.

"எப்பிடியன் எனக்கு பஸிந்தா ஈக்கா?" நான் கேட்டேன்.

"வெள்ளிக் கண்ணாடியே பஸிந்து... தங்கக் கண்ணாடியெண்டா கேக்கோணுமா... ம்... இப்ப பொடியன் மாதிரி" - பிள்ளைகள் இல்லாத நேரமென்பதால் கொஞ்சம் வாய்விட்டுச் சொன்னாள்.

இக்கட்டான இடைக்காலத்தில் எனக்குக் கைகொடுத்த அந்த இருநூறு ரூபாகூட பெறுமதியில்லாத இலவச பிளாஸ்திக் கண்ணாடி என்முன்னே மேசையில் அனாதையாகக் கிடந்தது.

"ம்... இப்ப அந்தக் கண்ணாடிய வீசிவெச்சீக்க. இது இல்லாப் போனாத்தான் மறுபேணம் நெனவு வரும்" மனைவி குத்திக் காட்டினாள்.

"மெய்தான் நெனவோட நீங்களே இத எடுத்து வைங்கோ"

மிருதுவான கேஸில் இட்டு அவளிடம் நீட்டினேன்.

அவள் அதனை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

மீண்டும் தளவாடியில் நான். தங்க ஃபிரேம் கண்ணாடி பளபளத்து என் முகத்துக்கு ஒளி பாய்ச்சியது.

(தினகரன் 03.06.2001)

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேய்கள்

ஸ்கூல் போவதற்கு பாண் தயார்பண்ணிக் கொண்டிருந்த உம்மா, எல்லாம் அப்படி அப்படியே வைத்துவிட்டு, வாயைப் பொத்திக்கொண்டு பின்பக்கமாக ஓடியபோது ஸில்மியா ஒருகணம் கலங்கித்தான் போனாள்.

ஓக்காளமும் வாந்தியுமாய்க் குந்திக் கொண்டிருந்த உம்மாவின் கண்கள் கலங்கி முகம்வாடிச் சுருண்டு விட்டது. இடைக்கிடை அடிவயிற்றைத் தடவியபடி அவதிப்படுவதைப் பார்த்தபோது அவளது கலக்கம் மெல்லமெல்லத் தெளிவடைந்தது.

"ஆ... மொகத்தக் கழுவிக்கொண்டு பெய்த்துச் சாஞ்சிக்கோ" தண்ணீர்க் கோப்பையை உம்மாவின் அருகே வைத்துச் சொன்னாள் உம்மும்மா.

"புள்ளயளுக்கு ஸ்கூலுக்குப் போக பாண்கறியள போட்டுக் குடுங்கோ" சோர்வுதட்டிய நிலையில் உம்மாவின் சொற்கள்.

"எனக்குப்பாண் எனக்குப்பாண்" தங்களது பேக்குகள், தண்ணீர்ப் போத்தல்களைத் தயார்பண்ணிய படியே, தம்பிமார் இருவரும் உம்மும்மாவுக்குத் தொல்லை கொடுத்தனர்.

"கொஞ்சம் நில்லுங்கொடா ரெடியாக்கித் தரங்காட்டீம்" உம்மும்மா சற்றே கோபத்தோடு கத்தினாள்.

ஸில்மியா காலைச்சாப்பாட்டை சுற்றி தம்பிமாருக்குக் கொடுத்துவிட்டு தன்னுடைய பங்கையும் புத்தகப்பையில் திணித்துக் கொண்டாள். கட்டிலிலே சாய்ந்திருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மாவுக்கருகே கடைக்குட்டி ஒன்றும் புரியாமல் திருதிருவென விழித்துக் கொண்டிருந்தான்.

நேரம் ஏழு மணியைத் தாண்டியிருந்தது. பிள்ளைகள் பாடசாலை போக ஆரம்பித்திருந்தார்கள். அவளும் தம்பிமாரைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டாள்.

"நாங்க போற உம்ம்ம்மா"

"அல்லாட காவல்"

இன்று வேண்டுமென்றே உம்மாவோடு சொல்லிக் கொள்ளாமல்தான் ஸில்மியா புறப்பட்டாள். கவலையும் கோபமும் அவளுக்குள் சங்கமமாகி.... கடைசித்தம்பி பிறந்தபோது கூட அவளுக்கு ஆசையாகத்தான் இருந்தது. அதற்கிடையில் என்னதான் நடந்தது? இன்னொரு குழந்தை கிடைக்கப் போவதை அறிந்ததுமே அவள் ஆத்திரம் ஆத்திரமாக வெடித்தாள்.

சிலவேளைகளில் தங்களுக்குள் நாலைந்துபேர் கூடினால் பல விஷயங்களையும் பேசுவார்கள். புதிது புதிதாகச் சிந்திப்பார்கள். கேள்விகள் தொடுப்பார்கள்.

ஒருநாள் பேச்சுவாக்கில் குடும்ப விஷயங்களையெல்லாம் அலசி சகோதர சகோதரிகள் எத்தனைபேர் என்பதில் வந்து நின்றது. எல்லோருமே ஒன்று இரண்டு என்று மாறிமாறிச் சொல்லிக்கொண்டு வந்து, அவள் மாத்திரமே நான்கு என்றபோது இனந்தெரியாத வெட்கம் அவளைப் பிடுங்கித் தின்றது. இப்பொழுது இன்னுமொன்று...! இதை எப்படி எதிர்கொள்வதென்றே அவளுக்குப் புரியவில்லை.

"வாப்பா வாப்பா" என்று தொங்கிக் கொண்டிருந்த காலம் அவளுக்குள்ளிருந்து விடைபெற்றிருந்தது.

எடுத்ததற்கெல்லாம் ஏச்சு, யாருமே ஒருவார்த்தை மீறிப்பேச முடியாது. இட்டதுதான் சட்டம். குடும்பத்தைக் கட்டுப்பாடான முறையில் வழிநடத்துவது தான் மாத்திரமே என்ற மமதை. இத்தியாதி காரணிகள் அவளை வாப்பாவிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸில்மியா இப்பவா வார... தெரீமா செய்தி?" வழிபார்த்துக் காத்திருந்த அவளது சகபாடி மர்லியா கேட்டாள்.

"எனத்தியன்டீ" புதிய செய்தியை அறியும் ஆவல்.

"பேக்க வெச்சிட்டு வா" அவள் வகுப்புக்குச் சென்று பேக்கை வைத்துவிட்டுச் சட்டென்று திரும்பினாள். காலைக் கூட்டத்துக்கு மணியடிக்கும் வரை குழுக்குழுவாக கதைபரிமாறி மகிழ்ந்திருக்கும் வேளை.

"தெரீமாடீ... ரிஸ்வான கொமராகீட்டாம். அந்திக்கு நாங்க பாக்கப்போற. நீயும் வரோணும் சரியா" மர்லியா அங்குமிங்கும் பார்த்து ரகசியமாகச் சொன்னாள்.

"நான் வராமீக்கியாடீ"

இன்னொரு பங்காளி கிடைத்துவிட்ட துள்ளாட்டம் மர்லியாவுக்கு.

"டன... டன... டன..."

காலைக் கூட்டத்துக்கு மாணவர்கள் அணிவகுத்துச் செல்லத் தயாராகினர்.

❖ ❖ ❖

பாடசாலைவிட்டு வரும்போது ஸில்மியா எதிர்பார்த்தது போல் உம்மா சோர்ந்துபோய்க் கிடக்கவில்லை.

வழமைபோல் சாப்பாடு தயாராக வைக்கப்பட்டிருந்தது. தம்பிமார் இருவரும் முன்கூட்டியே வந்து சாப்பிட்டிருந்தார்கள். அவளும் முகம் கைகழுவிக்கொண்டு சாப்பிட வந்தாள்.

உம்மாவின் முகத்தை நிமிர்ந்து பார்க்க அவளுக்கு கூச்சமாக இருந்தது. உம்மாவுக்கு ஏன் இப்படி புத்திகெட்டுப்போய் விட்டதென மனதுக்குள் குமைந்தாள்.

அவள் அறிந்தவரையில் உம்மும்மாதான் சுறுசுறுப்பாக இயங்கி வீட்டுக் காரியங்களையெல்லாம் கவனிப்பாள். வயதையும் மீறிய செயற்பாடென்றே சொல்லவேண்டும். எதிர்பாராத விதமாக ஒரேயடியாய் நோயில் விழுந்தபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் ஓர் அதிர்ச்சி. சீனி... சளி இப்படி எத்தனையோ நோய்க்கலப்பு. ஒருமாதத்துக்கு மேல் ஆஸ்பத்திரியும் கையுமாக அலைந்துவிட்டு இப்பொழுதுதான் கொஞ்சம் அங்குமிங்குமாக நடமாடுகிறாள்.

துணைக்கு இனி ஆளில்லை என்பது தெட்டத் தெளிவாகத் தெரிந்த பின்பும் உம்மா இப்படி இன்னொரு குழந்தைக்குத் தாயாகப் போவதை அவளால் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை.

ஸில்மியா அவசர அவசரமாகச் சாப்பிட்டாள்.

"எனத்தியன் அவசரம்? அதுக்கெடேல எங்கியாலும் பறக்கப் போறா?" உம்மாவுக்கு விளங்கியது.

"அஸருக்குப் பொறகு ரிஸ்வானாங்கட ஊட்டுக்குக் கொஞ்சம் போகோணும்"

எஞ்சிய கறிகளை சட்டியில் போட்டு பீங்கான் கோப்பைகளை கழுவிக் கவிழ்த்தாள். பாயைச்சுருட்டி ஒரு பக்கமாக வைத்து விட்டு வாசலைப் பெருக்கினாள். இன்னும் அரைமணி நேரமே இருந்தது. அதற்கிடையில் தொழுதுகொள்ளவும் வேண்டியிருந்தது.

"ரிஸ்வானட ஊட்டுக்கென்டா அந்தத் தொங்கலுக்கே பொகோணேன். வாப்பாக்குத் தெரீமானா நல்ல ஏச்சித்தான் புழும்" தனக்கு இஷ்டமில்லை என்பதற்கு இப்படி வடிவம் கொடுத்தாள்.

"வாப்பாக்கு ஏசத்தானே தெரிஞ்ச. நாங்க எந்தநாளும் ஏச்சிக் கேட்டுக் கேட்டுத்தான் நிக்கோணும்"

அதற்குமேல் உம்மாவின் பதிலுக்குக் காத்திராமல் வாளியை எடுத்துக்கொண்டு கிணற்றடிப்பக்கமாக நடந்தாள் ஸில்மியா.

"வாயட நீள்பத்தப் பாரே... வரவர பேச்சிவாத்த மிச்சம் மோசம்"

உம்மா சொன்ன எதுவும் அவளுக்குக் கேட்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுஹர் தொழுதுவிட்டு அஸருக்கு பாங்கு சொல்லும்வரை அதே பாயில் காத்திருந்தாள் அவள்.

'வாப்ப அஸரு தொழுதிட்டு கோப்பி குடிக்க வரமுந்திப் பெய்த்திரோணும்' இதைத்தவிர வேறெந்த யோசனையும் அப்போதைக்கு அவளுக்கு இருக்கவில்லை.

அவள் எதிர்பார்த்தது போல் தொழுத பாயைச் சுருட்டும்போதே வெளியே கலகலப்புக் கேட்டது.

"ஸில்மியா ஸில்மியா"

"வாரவார" என்று உள்ளேயிருந்து பதில் சொன்னவள். செருப்பை மாட்டிக்கொண்டு "உம்மா நான் போற" என்று ஓரேயடியாக வெளியே பாய்ந்தாள்.

அவள்தான் கடைசிஆள். எல்லாமாக ஆறுபேர். பின்வளவால் ஸன்டிஸ் ரோட்டுக்குப் போய்... நேரே நடந்து ரதம்பல ரோட்டுக்குத் திரும்பி இன்னும் கொஞ்சதூரம் சென்றால் ரிஸ்வானாவின் வீடு வந்துவிடும்.

எல்லோரும் சேர்ந்து வாங்கிய பரிசுப்பொதி, இனிப்புகளோடு போய்ச்சேர்ந்த போது ரிஸ்வானா வெட்கம் ஒருபக்கமும் மகிழ்ச்சி மறுபக்கமுமாக வரவேற்றாள்.

அவளுக்கென்றொரு அறை... அழகிய பெட்ஷீட் விரிப்போடு கட்டில்... சுழலும் மின்விசிறி... மேசையிலே பூச்செண்டும் பரிசுப் பொருள்களும்.... கும்மென்று கொலோன் மணம்.... இதற்கு மத்தியில வீட்டாரின் உபசரிப்பு வேறு.

'எங்கட ஊட்டில இப்படியொரு ரூம்... இப்பிடியொரு கட்டில்... என்னப் பார்க்க எல்லாரும் இப்பிடியொரு நாளக்கி வரச்செல்லே...' அவள் ஏங்கிப் போனாள்.

'ஸில்மியா எனத்தியன் பேசாமீக்கிய' ரிஸ்வானாதான் கேட்டாள்.

"அடுத்தது அவள்தான் அதுதான் யோசின"

எதிர்பார்க்காதபடி குறுக்கிட்டு எல்லோரையும் சிரிக்க வைத்து அந்த வீட்டைக் கலகலப்பின் உச்சிக்கே கொண்டுவந்து சேர்ந்தாள் மர்லியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சும் சிரிப்பும்... கொஞ்சநேரம் டீவி நிகழ்ச்சி... அப்புறம் பின்வளவால் கொய்யா மரத்தடியிலே கூத்து... இப்படியிப்படியே ஆறுமணியை நெருங்கியது எப்படியென்றே அவர்களுக்கு விளங்கவில்லை.

எல்லோருக்கும் வீடு ஞாபகம் வந்துவிட்டது போலும், அதனால் அவசரம் தலைகாட்டியது. விடைபெற வேண்டிய நிர்ப்பந்தம்.

“சரி சரி போம்” ஸில்மியா எல்லோரையும் அவசரப் படுத்தினாள்.

அவளுக்குத்தான் எத்தனை பொறுப்புக்கள்! விடைபெற்று வெளியேறி மிக அடக்கமானவர்களாக நடைநடந்தனர்.

❖ ❖ ❖

மூன்றுமாத இடைவெளிக்குப் பின்பு உம்மும்மாவின் மீது பழைய வியாதிகளின் படையெடுப்பு ஆரம்பித்திருந்தது.

“கண்டிப்பா ஓய்வா இருங்க” டாக்டர் உறுதியாகவே சொல்லி விட்டார்.

இந்த வீட்டில் எப்படி ஓய்வாக இருக்க முடியும் என்பதுதான் எல்லோரதும் கேள்வி.

கிழவிக்கு நான்கு பிள்ளைகள். இரண்டு மகனும் இரண்டு மகளும். இவள்தான் எல்லோரிலும் இளையவள்.

இளையவளுக்கு திருமணம் நடப்பதற்கிடையில் அவளது கணவன் மௌத்தாகி விட்டார். இருந்தவர்கள் சேர்ந்துதான் கல்யாணத்தை நடத்தி வைத்தார்கள். அந்த மகளோடேயே கிழவியும் இருந்து விட்டாள்.

மருமகன் உழைத்து முன்னேற வேண்டுமென்ற தேவை இல்லாதவர். தனது சோம்பல், மடமை எல்லாவற்றையும் பக்திப் போர்வையால் மூடிமறைத்துத் திரிபவர். எப்படியோ காலம் கடந்து கொண்டிருந்தது. போதாக்குறைக்கு பரக்கத்தாகப் பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்மா... நீங்க இங்கநின்டு சரிவாரல்ல. இங்க ஒங்கள பாக்கக்கேக்க தாரனீக்கிய வாங்க எங்கடூட்டுக்கு" மூத்தமகள் வந்து ஒரேபிடியாக நின்றாள்.

மகன்மாரும் கூடவந்து பார்த்துவிட்டு, தங்கச்சி வீட்டுக்குப் போகுமாறு சொல்லிவிட்டுப் போயிருந்தார்கள்.

"உம்மா சொல்லுங்கொ... ஆட்டாவொன்டு எடுத்துக்கொணு வரவா?"

"இவள நான் எப்பிடியன் உட்டிட்டுப் போற. புள்ள குட்டியோட அவளுக்குக் கொண்டாடேலுமா... ம்... அது போதாதத்துக்கு புள்ள பொகுத்துக்காரி" நெஞ்சு பொறுக்கவில்லை கிழவிக்கு.

வெளியே சொல்லமுடியாத இன்னொரு கவலையுந்தான் அவளுக்கு. அவளுடைய மற்றப் பிள்ளைகள் மூவரும் சுமாரான வசதி வாய்ப்புள்ளவர்கள். அவ்வப்போது உம்மாவுக்கென்று சாமான்கள் அனுப்பி வைப்பார்கள். பார்க்கவரும் போதெல்லாம் காசு கொடுத்துவிட்டுச் செல்வார்கள். இந்த வரும்படி எல்லாவற்றையும் அந்தக் குடும்பத்துக் காகத்தான் அவள் அர்ப்பணித்தாள். இங்கிருந்து அவள் சென்றுவிட்டால், அந்த இடைவெளியை இந்தக்குடும்பம் எப்படி ஈடுசெய்யும்? முடியாமல் போகும்போது ஏற்படும் முரண்பாடுகளையெல்லாம் அவள் எண்ணிப் பயந்தாள். ஆனாலும் என்னதான் செய்வது?

"உம்மா நீங்க ஒன்டும் யோசிக்கவாணா... அல்லா ஒரு வழிய வெப்பான்... தாத்தூட்டுக்குப் போங்கும்மா சொகமானப் பொறகு வரேலுந்தானே"

மீண்டுமொரு முறை சுறுசுறுப்பாக இயங்கக் கூடிய அளவுக்கு சுகம்பெற்று எழக்கூடுமென்று அவள் அடிமனதில் கூட எண்ணவில்லை. ஆனாலும் அப்படிச் சொல்லாவிட்டால் உம்மாவை அந்த இடத்தைவிட்டு அசைக்க முடியாதென்று அவளுக்குத் தெளிவாகவே தெரியும்.

முன்வாசலில் விளையாடிக் கொண்டிருந்த சின்னதுகள் ஆரவாரமாகக் கூத்தாடிக் கைதட்டுவது கேட்டு, வெளியேவந்து எட்டிப் பார்த்தாள் ஸில்மியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டின் முன்னே ஆட்டோ ஒன்று நின்றது.

உம்மும்மாவின் உடுபிடவைகள், மருந்துப் புட்டிகளை யெல்லாம் ஏலவே தயார்படுத்தியே வைத்திருந்தார்கள். பெரியம்மா ஒவ்வொன்றாகக் கொண்டுவந்து ஆட்டாவினுள் வைத்தார்.

பிள்ளைகளையெல்லாம் அணைத்தணைத்து முத்தம் கொடுத்தாள். அவளுடைய மடியில் வளர்ந்த பிள்ளைகள் அல்லவா?

"ஸில்மியா புள்ளயள பாத்துக்கோ... ஊட்டு வேலயளப் பாத்துப் பாத்துச் செய்... உம்மாக்கும் இப்ப ஏலா... வெளங்கினா மகள்" என்று மிக உருக்கமாகவே சொன்னாள்.

அவளுக்கு விளங்காமலா இருக்கும். அவள் தலையாட்டி அத்தனை கடமைகளையும் பொறுப்பேற்றுக் கொண்டு உம்மும்மாவுக்கு விடை கொடுத்தாள்.

பெரியம்மா பிடித்துச்சென்று உம்மும்மாவை ஆட்டாவிலே ஏற்றி தானும் ஏறிக்கொண்டாள்.

ஆட்டோ புறப்பட்டபோது சின்னதுகள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

ஆட்டோ மறையும்வரை வைத்தவிழி வாங்காமல் நின்ற ஸில்மியாவால் அசைய முடியவில்லை. உம்மும்மா சொல்லிச் சென்றது மீண்டும் அவள் காதிலே தெளிவாக ஒலித்தது.

❖ ❖ ❖

இரவுச் சாப்பாட்டுக்குப் பின்பு சட்டிமுட்டியெல்லாம் கழுவி முடிக்கும்போது வீடு நிசப்தமாக இருந்தது. பாயிலே கரணம் போட்டுக் கொண்டிருந்த தம்பிமார் மூவரும் ஆளுக்கொரு திக்காகத் தூங்கிப் போயிருந்தார்கள்.

காம்பராவிலே, வாப்பா ஏதோ செய்துகொண்டிருப்பது போல் தெரிந்தது. உம்மாவின் வேலைகள் முடியும்வரை அவர் அப்படி ஏதாவது செய்தபடியிருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸில்மியா போர்வையோடு வந்து பாயிலே புரண்டாள். முன்பென்றால் பாயில விழுந்தவுடன் தூக்கம் அவளைத் தேடிக்கொண்டு வந்துவிடும். இப்பொழுதெல்லாம் தூக்கத்தை அவள் தேடிக்கொண்டிருப்பாள். அப்படி இலேசாகப் பிடிகொடுக்காமல் அது விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்கும்.

விளக்கை அணைத்துவிட்டு உம்மாவும் தூங்கிவிட்டாள் போலும். ஸில்மியா தன் வகுப்புத் தோழிகளை ஒவ்வொருவராக நினைத்துப் பார்த்தாள்.

எல்லோருந்தான் புதுப்புது டிசைன்களிலே ஆடையணிகள் உடுத்திக் கொள்ளப் போட்டி போடுகிறார்கள். புதியபுதிய செய்திகளைக்கூட காவிக்கொண்டு வருகிறார்கள்.

புதியபுதிய சந்தேகங்களையெல்லாம் எழுப்புகிறார்கள். சிலபோது விடை தெரியாமல் தடுமாறவும் செய்கிறார்கள். இதென்ன இது...

அவளுக்கும் அழகாக உடுக்கத்தான் வேண்டும் போலிருக்கிறது. அப்படி எத்தனை உடுப்புகள்தான் அவளிடமிருக்கிறது? ஏதோ இருப்பதைத் துவைத்துத் துவைத்து அவள் போடுகிறாள். உம்மா துவைப்பதுகூட இப்பொழுதெல்லாம் அவளுக்குப் பிடிப்பதில்லை.

அடிக்கடி நிலைக்கண்ணாடி முன்நின்று தன்னைப் பார்த்துக் கொண்டாள். தன்னையே ரசித்தாள். கழுத்திலே ஒரு மாலையும் தொங்கு காதணியும் இருந்தால் எப்படியிருக்குமென கற்பனை செய்தாள்.

மனையியல் மிஸ் சொல்லித் தருகின்ற உணவுப் பண்டங்களை எல்லாம் வீட்டிலே செய்துபார்க்க அவாக்கொண்டாள். ஒரு அவன், ஃபிரிஜ் ஏன் இல்லையென்று வேதனைப்பட்டாள்.

தொலைக்காட்சி நாடகங்கள் பற்றியெல்லாம் கருத்தாடல் செய்வார்கள். அதுகுறித்த எதுவுமே தெரியாமல் தடுமாறினாள். கிரிக்கட் மெச் பற்றியெல்லாம் தர்க்கம் செய்வார்கள். அவளுக்கும் ஆசைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் வேல்ட்கப் இறுதியாட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது... ஸ்ரீலங்கா வெற்றிக்கம்பத்தை நெருங்கி நிற்கும் வேளை... எங்கும் ஆகாவென்றெழுந்த ஆரவாரத்துக்கு மத்தியில்... அவளும் ஈர்க்கப்பட்டுப்போய் பின்னளவு ரமீஜா வீட்டு ஜன்னலில் தொங்கிப் பார்த்தாள். பார்த்துக் கொண்டே இருந்தாள். இறுதிக்கட்டம் விடுபட முடியவில்லை. வெற்றி ஆரவாரத்துக்கும் பட்டாசு வெடிகளுக்கும் மத்தியில்தான் வீட்டுக்கு ஓடிவந்தாள்.

“எங்கியன்டீ போன?” வாப்பா கர்ச்சித்தார்.

“மெச் பாத்த” பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் சொன்னாள்.

“சைத்தான் கூத்த நீயும் பாக்கப் போனாடீ? பொம்புளப் புள்ள மருவாரியா நடந்துக்கோ”

பாய்ந்து விழுந்ததோடு நின்றுவிடவில்லை. கையில் அகப்பட்ட நைலோன் கயிற்றால் மாறிமாறி அவளது முதுகில் விழுந்தது. வீறிட்டு ஒப்பாரிவைத்த அவளை யார்வந்து காப்பாற்றினார்களோ தெரியவில்லை. முதுகிலே குறுக்கும் நெடுக்குமாய் இரத்தம் கனன்ற செங்கோடுகள்.

திடுக்கிட்டு எழுந்தமர்ந்தாள் அவள். அடுத்த வீட்டுக் குழந்தைதான் அழுது கொண்டிருந்தது. இன்னும் இரண்டொரு மாதத்தில் அவளது உம்மாவுக்கும் குழந்தை கிடைத்துவிடும். உம்மும்மா இல்லை. இனி குழந்தையின் வேலைகளும் வீட்டு வேலைகளும் அவள் தலையில்தான்.

இப்பொழுது அடிக்கடி அவள் ஆசிரியர்களின் கண்டனத்துக்கு ஆளாகி வருகிறாள். கொடுக்கின்ற பயிற்சிகளைப் பூரணப் படுத்தாமலேயே அடுத்தநாள் பாடசாலைக்குப் போகவேண்டிய இக்கட்டு.

எல்லாவற்றையும் விட அவளுக்குப் பெரிய பிரச்சினை இன்றோ நாளையோ அடுத்தமாதமோ அவள் ‘பெரிய மனிசியாகி விடப் போகிறாள்’ என்பதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரிய மனிசியானாப் பொறகு எனத்துக்கன் படிக்கிய? வேலவெட்டிய பழகிக்கொண்டு ஊட்டுக்குள்ள ஒழுக்கமா நில்லு"

வாப்பா இப்படித்தான் சொல்லப் போகிறார் என்பதில் அவளுக்கு எந்தவித சந்தேகமுமே இருக்கவில்லை. அதை யாரால்தான் தடுத்து நிறுத்த முடியும்!

ஸில்மியா மறுபக்கம் புரண்டு சுருண்டு படுத்தாள். வாப்பாவின் குறட்டை ஒலியும் லேசாக மிதந்து வந்தது.

எப்படியும் பன்னிரண்டு மணி நகர்ந்திருக்க வேண்டும். தெருநாய்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் குரைத்தன. வாகனமொன்றின் சத்தம். பொலீஸ் ஜீப்பாகத்தான் இருக்க வேண்டும்.

உம்மாவின் குழந்தை, உம்மும்மாவின் சுகவீனம், பெரிய மனிசியாகப் போதல்.... இந்த மூன்றும் சுற்றிச்சுற்றி அவளையும் சுழல வைத்தன. அந்தச் சுழற்சியிலிருந்து சமநிலைக்கு வர இயலாதபடி எங்கோ அவள் மிதந்து போனாள். இரண்டு மணிநேர துக்கமா, மயக்கமா தெரியவில்லை.

"உம்மோவ்... உம்மோவ்... ஏன்டகழுத்த நெசுக்கப் போ... உம்மோவ் உம்மோவ் என்னைக் கொல்லப்போற கொல்லப்போற... உம்.. மோ.. வ"

இருளையும் கடுந்தூக்கத்தையும் கிழித்துக் கொண்டெழுந்த ஸில்மியாவின் பயங்கரக் கதறல்.

விழுந்தடித்துக் கொண்டு உம்மாவும் வாப்பாவும் ஓடோடி வந்தனர். விளக்கெல்லாம் ஒளிர்ந்தன.

"எனத்தியன் மகள் எழும்பு எழும்பு மகேள்" உம்மா உடலைக் குலுக்கி எழுப்ப முயற்சித்தாள்.

அவள் மெல்லமெல்ல கண்திறந்த போது, உம்மாவும் முகத்துக்கு தண்ணீர் தெளித்தபடி.... வாப்பாவும் நின்றனர்.

அவள் மெல்லிய உள்நடுக்கத்திலிருந்து விடுபட்டபோது உடலெங்கும் வேர்வையால் தோய்ந்து போயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனத்தியன் மகள் மனாக்கண்டா?" வாப்பா கேட்டார்.

"ஓ... ஓஓ மூனு பிசாசி ஏன்ட கழுத்த நெசுக்க கைய நீட்டிக்கொணு வந்த... எனக்குப் பயம் உம்மா" அவள் திக்கித் தடுமாறினாள்.

"சரிசரி இப்பொண்டுமில்ல அதுதான் செல்லிய படுக்கச் செல்லே ஓதி நெஞ்சில ஊதிக்கொண்டு படுக்கோணும்" என்றவாறு வாப்பா காம்பராவுக்குப் போய்விட்டார்.

உம்மா ஸில்மியாவின் அருகே பாயில் படுத்துக் கொண்டாள்.

அவளுக்குத் தூக்கமே வரவில்லை. உம்மாவின் குழந்தை... உம்மும்மாவின் நோய்... பெரிய மனிசியாகுதல்.... இவை அவளது தூக்கத்தை தூக்கி வீசிவிட்டு.... அவளைச் சுற்றிச் சூழத் தொடங்கிவிட்டன.

(வீரகேசரி 17.05.1998)

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரத்தாய்

"உம்மட மகள்தானே நீ"

அஸ்ரா அதிர்ந்து போனாள். அதை மறந்து விடத்தான் நினைத்தாள். அது மீண்டும் மீண்டும் புனர்ஜென்மமெடுத்து அவளை அல்லாட வைத்தது.

கொம்யூட்டர் டுடே, பெண்... சஞ்சிகைகளின் தாள்கள் காற்றுக்கு படபடத்தன. எதிலுமே கருத்தூன்ற முடியவில்லை அவளால்!

கொம்யூட்டர் படிக்கும் அளவுக்கு அறிவு வளர்ந்துள்ள போதும், ஒரு சின்ன விஷயத்தை ஜீரணித்துக் கொள்ள முடியாதபடி இவர்களது மனம் ஏன் இவ்வளவு இறுகிப் போயுள்ளதென்று அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

பத்துப் பன்னிரண்டாண்டுகள் ஒன்றாகப் படித்தவர்கள்... ஒரே மண்ணில் புரண்டு விளையாடியவர்கள்... என்ன செய்வது!

அஸ்ரா வசதியான குடும்பமொன்றில் செல்வாக்கான சூழலில் பிறந்தவளல்ல. அது அவள் குற்றமா என்ன?

வசதியும் செல்வாக்குமிக்க குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஷிபானுக்கும் அவளுக்குமிடையில் ஒரு நெருக்கம். அவ்வளவுதான்.

சிரித்துக் கதைத்துக் கலகலப்பாகப் பழகுவது அவளது இயல்பு. இதுதான் குற்றம்.

மாஜீதா, ரஸ்மியா, ஷம்ஷாத் இவர்களெல்லாம் விரும்பியோ விரும்பாமலோ ரிஸ்னா தலைமையில் ஒன்றுகூடி விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொருவரால் விரும்பப்படும் தகுதி தங்களுக்குத்தான் உண்டென்பதே அவர்கள் வாதிக்காத வாதம்.

"உம்மட மகள்தானே நீ" இவ்வளவு காலமும் அவளை நோக்கி, இப்படி யாரும் விரல் நீட்டவில்லை. ஒருவேளை தங்களுக்குள் கதைத்திருக்கலாம்.

எது எப்படியிருந்தாலும் இனி அஸ்ரா தனியாகத்தான் கொம்யூட்டர் வகுப்புக்குப் போக வேண்டியிருக்கும். இது அவளுக்குப் பிரச்சினை அல்ல.

தனியே போய்வந்தால், அதை வைத்தே இன்னொரு புயலைக் கிளப்பி விடுவார்கள். போகாமல் விட்டால் அதைவிடப் பெரிய வெற்றியும் அவர்களுக்கிருக்க முடியாது.

"எனத்தியன் மகள் ஒரே யோசின" மகளின் நிலைப்பாட்டை நீண்ட நேரமாக அவதானித்த அவளது உம்மா பாயிஸா கேட்டாள்.

"ஒண்டுமில்லும்மா" சொல்வதா விடுவதா என்று அவளுக்கு விளங்கவில்லை. உம்மாவிடம் சொல்லாவிட்டால் வேறு யாரிடம் சொல்வது?

"எனத்தியாலும் கரச்சலா?" உம்மா விடுவதாக இல்லை.

"கிளாஸுக்கு போற ரிஸ்னாங்க என்னோட கோவம்" ஒருவாறு வெளிக்கக்கினாள் அஸ்ரா.

"நெனச்ச நெனச்ச... அப்படி எனத்த சரி ஈக்குமெண்டு... ம்... படிச்சவளியள் தான்... மத்தவங்க நல்லாஈக்கப் புரியமில்ல" ஓர் உணர்ச்சி வேகம் பாயிஸாவின் முகத்தில்.

தன்னுடைய மகளும் சரிக்குச் சமமாய் மற்றைய பிள்ளைகளோடு படிப்பு... விளையாட்டு... கலைநிகழ்ச்சியென்று மேலே மேலே வரும்போது இந்தப்பயம் அவளுக்கும் ஏற்படத்தான் செய்தது.

ஒதுங்கிப் போகாமலும் ஒதுங்க விடாமலும் கவனமாக அஸ்ராவை முன்னெடுத்துச் சென்றாள் அவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இதியள கணக்கெடுக்கவாண மகள்... இவளியளுக்குப் பயந்து போற வாரத்த நிப்பாட்டத் தேவில்ல. பொறந்து வளந்த ஊரில் ஏத்துக்கன் பயப்புடுகிய”

உம்மாவின் வார்த்தைகள் அவளது உச்சந்தலையில் நீரூற்றாய்ப் பொழிந்தது. உம்மா சொன்னால் அதற்கு மேல் என்ன? வாப்பாவிடம் கேட்கவே தேவையில்லை. குடும்பத்துக்கொரு பிள்ளையல்லவா?

“நான் இதியள கணக்கெடுக்கல்லுமா.... உம்மட மகள்தானே நீயென்டு சொன்னதுதான் எனக்கு கவல.”

பாயிஸா அதிர்ந்து போனாள்.

“உம்மட மகள்தானே நீ” மீண்டும் மீண்டும் அவளுக்குள் எதிரொலித்தது.

“உம்மட மகளெண்டு அவளியள் சொல்லோணுமா... எல்லாருக்கும் தெரீந்தானே” தனது தாக்கத்தைக் காட்டிக் கொள்ளாமல் இப்படி லேசாகச் சொல்லிச் சிரித்தாள் பாயிஸா.

தன்னைக் காட்டி தனது பிள்ளையை வழி கெடுத்து விடுவார்களே என்ற கவனத்தோடுதான் அஸ்ராவை கண்ணும் கருத்துமாக வளர்த்தாள். துணிவையும் அஞ்சாமையையும் தாய்ப்பாலாக ஊட்டி மகளை முன்தள்ளினாள். சுதந்திரத்துடன் கூடிய கட்டுப்பாடு என்றும் அவளுக்கிருந்தது.

“நீ ஒண்டுக்கும் யோசிக்காதே மகள்” உம்மா மேல் விசாரணை ஒன்றும் செய்யாமல் புரிந்துணர்வோடு விசயத்தை அணுகிது அஸ்ராவுக்கு பெரும் திருப்தியாக-விருந்தது.

அஸ்ரா முன்னறையில் தூங்கினாள். அவளது வாப்பாவும் வந்த களைப்பில் தூங்கிவிட்டார். பாயிஸாவுக்கு தூக்கம்வர மறுத்து அடம்பிடித்தது.

மகள் சொன்ன விடயத்தால் அவள் தாக்கப்பட்டது உண்மையென்றாலும் அதைக்காட்டிக் கொள்ளாமல் சமாளித்து விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்மட மகள்தானே நீ" இதன் உள்ளர்த்தத்தை இவ்வளவு காலத்துக்குப் பின்பும் மகள் தெரிந்து வைத்திருக்க மாட்டாளென்று எதிர்பார்க்க முடியாதுதான். அப்படித் தெரிந்திருந்ததால் தானே அவள் வேதனையால் சுருண்டு போயிருக்கிறாள்.

'மகளட மொகத்த இனி எப்படியன் பாக்கிய' பாயிஸா தனக்குள்ளே கேட்டுக் கொண்டாள்.

மனந்திறந்து மகளோடு இந்த இருபதாண்டு பழமை வாய்ந்த கதையை சொல்லித் தீர்க்க வேண்டிய நிலை. ஒரு தெளிவை ஏற்படுத்த இதைத்தவிர வேறெது வழி? மற்றப்படி தாயும் மகளும் கதைக்கக்கூடிய கதையா இது.

பாயிஸாவுக்கு கல்யாண ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. இந்த அவசரத்துக்குக் காரணம் இல்லாமல் போகவில்லை. குடும்பத்துக்கு அவப்பெயர் வந்துவிடக் கூடாதென்ற அக்கறைதான்.

"எனத்தியன் இப்பிடி அவசரம் புடிச்சீக்கிய" ஒரு கட்டத்தில் இப்படிக் கேட்டுவிட்டாள் அவள்.

"வாயப் பொத்துடீ... பெத்துவளத்த எங்களுக்கு நல்லமொறக்கி பாத்து செஞ்சிவெக்கத் தெரீம்... எங்கட மானம் மருவாரிய இல்லாமாக்கப் போறா நீ..." வீடே அதிரக் கத்தினார் வாப்பா.

அவள் அப்படியே அடங்கிப் போய்விட்டாள். அந்தக் கணம் முதல் கண்ணீரும் சோறுமே அவளுக்கு வாழ்க்கையாகிப் போய்விட்டது.

மூன்று வருடமாக அவளுக்கும் ரபியுதீனுக்குமிடையே மெல்லிய தொடர்பு வளர்ந்து வந்தது.

இதையறிந்துதான் விளங்கியும் விளங்காமலும்அவளது படிப்புக்கு முற்றுப்புள்ளியிட்டார்கள். ஆனாலும் தொடர்பு முறிந்துவிடவில்லை.

குறிப்பிட்ட நேரங்களில் ஜன்னலுக்கருகில் நின்றும் வேலிக்குப் பின்னாலும் தரிசனம் கிடைக்கவே செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோவொரு சந்தர்ப்பத்தில் அரும்பிய உறவு, ரபியுதீன் பெருநாள் விளையாட்டுப் போட்டியில் ஊரைச் சுற்றி ஓடும் போட்டியில் முதலிடம் பெற்று எல்லோரது பெருமதிப்பைப் பெறுவதோடு இறுகிப்போய்விட்டது.

"எங்கட பரம்பரேல இப்படியான கூத்து இதுக்கு முந்தி நடந்தில்ல.... மம்மகாதர் லெப்ப குடும்பமெண்ட மருவாரி இன்டகிமீக்கி... ம்... ஒன்ட மகள நல்லாக் கவனிச்சிக்கோ"

வாப்பா இப்படி அடிக்கடி கர்ச்சிக்கும் போதெல்லாம் உம்மா நடுநடுங்கிப் போய்விடுவாள்.

"எனத்தியன்டீ மாப்பிளப் பெய்தியம் புடிச்சீக்கா.... ஒனக்கு நெனச்சமாதிரி ஆட உடுகியல்ல"

உம்மா வேறு பசாசாக உருவெடுத்து ஆடினாள்.

இதற்கு மத்தியில்தான்...

யார் யாரோ வந்தார்கள் போனார்கள். வீடு திருத்த வேலைகள்... சாந்து சாயம் பூசுதல் நடந்தேறின. உறவினர், அயலவர்களெல்லாம் வந்துபோனார்கள். மா இடித்தார்கள்... பலகாரம் சுட்டார்கள்.

இரண்டொரு நாளில் லைட்மோல் வந்தது. வீடு வளவெல்லாம் மின் விளக்கலங்காரம், ஒலி பெருக்கிகள் பாடின.

விருந்து வேடிக்கையோடு மாப்பிள்ளை வந்தார். அவளுக்கு கறுப்பா சிவப்பா என்பது கூடத் தெரியவில்லை. அவளை யார் பார்த்தாலென்ன பார்க்காவிட்டாலென்ன கிளிக்குட்டிதான்.

அவள் கண்களை இறுக மூடியபடி 'ஜோடின'யில் அமர்ந்திருந்தாள்.

சவடி கட்டும்போது தவிர்க்க முடியாமல் கண்கள் கசிந்தன. மனம் விம்மித் தணிந்தது. எப்படியோ கட்டுப்படுத்திக் கொண்டாள். அதையெல்லாம் உடைத்துக் கொண்டு ரபியுதீனின் உருவம்...

"எனக்கேல நான் போறல்ல"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக இக்கட்டான கட்டத்தில் மணவறைக்குள் போகாமல் அடம்பிடித்தாள்.

என்ன செய்வதென்று புரியாமல் எல்லோரும் தடுமாறிப் போனார்கள்.

"மகேள் அல்லாட நஸீபுப்படிதான் எல்லாம் நடக்கிய... எனத்தசரி நலவொன்டீக்கும்...." பெரியம்மா தலையைத் தடவி இங்கிதமாகப் புத்தி கூறினாள்.

சாச்சி, மாமி, மதினிமார்களெல்லாம் சூழ்ந்து நின்றனர். சிவந்து போன கண்களை உம்மா அடிக்கடி துடைத்துக் கொண்டார்.

"சரி நான் போறன்"

அந்த நேரச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு ஒரு முடிவுக்கு வந்தாள்.

அறைக்குள் வந்தவளுக்கு கண்களைக் கழற்றி வீச வேண்டும்போலிருந்தது. அவளது கணவனின் லட்சணம் அப்படி.

இரண்டு மூன்று நாட்களாக அந்தக் காம்பராவுக்குள் நடந்த போராட்டங்கள் அவளுக்கும் அந்த மனிதனுக்கும் மாத்திரந்தான் தெரிந்திருக்கும்.

ஊர் வழக்கப்படி அடுத்தடுத்த நாட்களில் பெண்பார்க்க வருவது வழக்கம். அப்படி வந்த ஜுலைனா கொண்டுவந்த தகவல், பாயிஸாவை அதள பாதாளத்திலிருந்து தூக்கி நிறுத்தியது போலிருந்தது.

ஜுலைனா அடிக்கடி வந்து போனாள்.

அன்று அதிகாலை ஊரெல்லாம் பரபரத்தது.

"பாயிஸா பாஞ்சி பெய்த்தாம்"

எல்லோருக்குமே பாடம் புகட்டிவிட்டு அவள் ரபியுதீனுடன் புறப்பட்டுவிட்டாள். கார்கள் பறந்தன. தேடுதல் தொடர்ந்தது. யாராலுமே கண்டுபிடிக்க முடியவில்லை. தங்களது முயற்சியைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிட்ட நிலையில் அனுராதபுரத்தில் ஒரு சிற்றூரில் இருக்கிறார்களாமென்ற செய்தி காற்றோடு கலந்தது.

அவமானப்பட்டுப்போன புதியமாப்பிள்ளை போனவர் போனவர்தான். அதன் பின்பு அந்தப் பக்கம் தலை காட்டவேயில்லை.

சில காலத்தின் பின் வயிற்றுச் சுமையோடு ஊரோடு வந்து ஒன்றிவிட்டார்கள் அவர்கள். இனி யாருக்குத்தான் கவலை!

அன்று முதல் 'பாஞ்சிபோன பாயிஸா' என்றால்தான் எவருக்கும் அவளைத் தெரியும்.

வழமைபோல் காலை விடிந்தது.

ஏதோவொரு எ.ஃ.ப்.எம். பாடிக் கொண்டிருந்தது.

அஸ்ரா தயாராகிக் கொண்டிருந்தாள்.

மகளின் முகத்தில் எப்படி விழிப்பது!

"உம்மட மகள்தானே நீ"

இது இரவு முழுவதும் ஓயாத அலையை அவளுக்குள் எழுப்பிக் கொண்டிருந்தது.

எதையும் மகளுக்கு ஒளித்து மறைத்து பாயிஸா நடந்து கொண்டதில்லை.

"ஒங்களாலதான் எனக்கும் இந்தக் கெட்டபேரு"

இப்படி அஸ்ரா எந்தக் கணத்திலாவது சொல்வாளென்றால், அதைத் தாங்கும் சக்தி மாத்திரம் அவளுக்கிருக்கவில்லை.

அஸ்ராவின் செருப்பொலி கேட்டது. கொலோன் மணம் பரவியது.

"உம்மா"

"சாப்பாடு போட்டீக்கி" குசுனிக்குள்ளிருந்து சொன்னாள்.

மகளின் முகத்தில் என்றுமில்லாத மலர்ச்சியைக் கண்டுகொண்ட போது பாயிஸாவுக்கு ஏதோவொரு பூரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்மா"

"அஸ்ரா"

உம்மாவின் கையை இறுகப் பற்றிக் கொண்டாள் அஸ்ரா.

"அந்தக் காலத்திலயே நீங்க தைரியமான பொம்பிளயும்மா.... நீங்க எனக்கு உம்மவாக கெடச்சது நான் செஞ்ச பாக்கியமும்மா"

அஸ்ராவா பேசுகிறாள்? அவளுக்கு வார்த்தைகளே வரவில்லை. மகளை இறுக அணைத்துக் கொண்டாள்.

"கிளாஸுக்கு நேரமாகீட்டும்மா"

மகளுக்கு விடைகொடுத்தாள் பாயிஸா.

அஸ்ரா நிமிர்ந்து நடைபோட்டாள்.

(ஆதவன் 04.02.2001)

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி சொல்லும் நேரம்

"ஹாஜீ.... ஹாஜீ..."

இரண்டு மூன்று முறை அழைப்பு விடுத்தும் ஹாஜி வரவில்லை. பதிலாக இளைய மகனே வந்து எட்டிப் பார்த்தான்.

"இன்டக்கும் சரி வராதுபோல" என்று அலுத்துக் கொண்டபடியே சகபாடியைப் பார்த்தான் ஃபர்ஷத்.

அதீகின் முகமும் அழுது வடிந்தது.

"புள்ள... வாப்ப நிக்கியா?" ஃபர்ஷத் கேட்டான்.

"எனத்தியன் விஷயம்?"

ஏதோ வாப்பா சார்பாக விடயத்தை நிறைவேற்றி வைக்கப் போவது போல் கேட்டான் மகன்.

"எங்கட மீலாது விழா விஷயமா வாப்பவ பாக்க வந்த"

"மெய்யா.... வாப்ப கொழும்புக்குப் பெய்த்தேன்" இது செலவு விஷயம் என்பது வாப்பாவின் மகனுக்குப் புரிந்துவிட்டது போலும்.

"அப்ப நாங்க தேடீட்டு போனென்டு செல்லுங்கொ" அதீக் பிரஸ்தாபித்தான்.

"சரி செல்லியன்."

கேற்றை இழுத்து மூடிவிட்டு இருவரும் ரோட்டுக்கு இறங்கினர். கொஞ்ச நேரம் மௌனமாக நடந்தனர் இருவரும்.

ஊர் கலகலத்துக் கொண்டிருந்தது. ஆங்காங்கே மீலாத் விழா தொடர்பான பச்சை பெனர்கள் கண்ணைப் பறித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இரண்டே நாள்தான் விழாவுக்கு. பெரும்பாலும் ஏற்பாடுகள் பூர்த்தியென்ற நிலை.

அன்று மத்ரஸா மண்டபத்தில் விழா தொடர்பான மஷூராக் கூட்டம் நடைபெற்றது. சிறுவர்களுக்கு இஸ்லாமிய போதனைகளையும் வழிமுறைகளையும் மனப்பதிவாக்க இத்தகைய விழாக்களும் உதவும் என்ற வகையில் மௌலவி விளக்கமளித்தார். அவர் புதிதாகத்தான் அங்கு நியமிக்கப்பட்டிருந்தார். அவரது கைவண்ணத்தைக் காட்டி ஊருக்குள் எடுத்த எடுப்பிலேயே ஒரு நல்ல பெயரை வாங்கிக் கொள்வதும் அவரது உள்நோக்கமாக இருக்கலாம்.

வாலிபர்கள், படித்தவர்கள், நலன்விரும்பிகள் என்று பல தரத்தவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

செலவுகளைச் சிலர் சுயவிருப்பின் பேரில் ஏற்றுக் கொண்டனர். இன்னும் சிலர் பணமாக அந்தச் சந்தர்ப்பத்திலேயே கையளித்தனர்.

அஜ்மல் ஹாஜியின் முறை அது.

"நீங்க மொதலாம் பரிச பொறுப்பெடுத்தாச் சரி ஹாஜி" செயலாளர் லிஸ்டைக் கையில் வைத்துக் கொண்டு எதிர்பார்ப்பை வெளிப்படுத்தினார்.

"மொதலாம் பரிசெண்டா?" மேல் விபரம் கோரினார்.

"பதினைஞ்சி மொதலாம் பரிசு. ஒன்றுக்கு நூத்தம்பதுருவ மட்டில பொறுமதியாக் குடுக்கோணும்."

அவரது மனக்கணனி வேலை செய்தது.

"ஆ.... சரி நான் ஆயிரம் ரூவத் தாரனே"

"எனத்தியன் ஹாஜி நீங்க..." இடையில் குறுக்கிட்டார் இன்னொருவர்.

"இப்ப பிஸ்னஸியள் மிச்சம் மோசம்... இன்ஷா அல்லா அடுத்த வருஷம் பாப்பமே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆ... அப்ப ஸட்பிகேட்ட ஓங்கட பேருக்கு போடியன். கிட்டடத்தட்ட அந்தக் கணக்குத்தான் வரும்" செயலாளர் விடயத்தை ஒப்பேற்றினார்.

"ஒவ்வொருத்தரும் பொருந்தின ஹக்க அனுப்புங்கொ" முடியுந்தருவாயில் தலைவர் விசேட அறிவித்தல் விடுத்தார்.

கூட்டம் மகிழ்வோடு நிறைவு பெற்றது.

அஜ்மல் ஹாஜி தலைவரை நெருங்கினார்.

"இங்க எனக்கு ஆயிரம் வேல.... தாரச்சரி கடக்கனுப்புங்கொ... நான் குடுக்கியன்" என்று தலைவரின் காதில் நெருங்கி குசுகுசுத்தார்.

போஸ்டர், ஹேண்ட்பில், அழைப்பிதழ், சான்றிதழ் முதலான அச்சு வேலைகளெல்லாம் ஃபர்ஷத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பொறுப்புதாரிகள் தங்கள் காரியங்களில் கண்ணும் கருத்துமாக இயங்கினர்.

"ஃபர்ஷத் இன்னம் ரெண்டுநாள் தானீக்கி. ஸெடிபிகேட் வந்தாத்தானே எழுதி வெக்கேலும்" செயலாளர் ஞாபகமூட்டினார்.

சான்றிதழ் அச்சிட்டுக் கிடந்தது. பணத்தைக் கட்டியல்லவா எடுக்கவேண்டும்?

முதன் முறையாக ஹாஜியைத் தேடி அவரது கடைக்குச் சென்றபோது "ஹாஜியார் ஊட்டுக்குப் பெய்த்த... நான் கோல் பண்ணிச் செல்லியன். நீங்க நாளக்கி வாங்கொளே" என்றார்கள்.

'எங்கடாக்கள் இப்பிடித்தான்... மனிசரட முன்னுக்கு அப்பிடித்தாரன், இப்பிடித் தாரனென்டு செல்லுவாங்க.... கால்த் தோல் தேயங்காட்டீம் திரிஞ்சாலும் கெடக்கியல்ல' தனக்குள்ளே சொல்லிக் கொண்டான் ஃபர்ஷத்.

இரண்டு நாள் கழித்து இரண்டாம் முறையாக ஹாஜியின் கடைப்படியை மிதித்தான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஹாஜி அவசரமா மையத்தூடொன்டுக்குப் போன. வரச்செல்லே ராவாகும். வந்தொடனே நான் செல்லியன்”

அவனுக்கு அலுத்துப் போய்விட்டது. இப்படியான விஷயங்களில் நிறைய அனுபவம் அவனுக்குண்டு. சொல்லுக்கும் மனசுக்கும் சம்பந்தமில்லாதவர்களோடு எல்லாம் கஷ்டந்தான்.

மூன்றாம் முறை வீட்டுக்கே போவதென்று தீர்மானித்தான். தனியே போகக் கூச்சப்பட்டுத்தான் சகபாடி அதீக்கையும் அழைத்துக் கொண்டு வெளிக்கிட்டான். அதுவும் கூட பொய்த்துப் போய்விட்டது.

“சரி இப்ப எனத்தியன் செய்யப் போற? பெரிசா சபேல பாரமெடுக்கிய” அமைதியைக் குலைத்து அதீக் கேட்டான்.

“எனக்கென்டா ஒன்டுமே வெளங்கல்ல” நடந்தபடியே ஃபர்ஷத் சொன்னான்.

“அப்பிடிச் செல்லிச் சரிவாரல்ல. நாளக்கி ஸட்பிகேட் எடுத்தாத்தான் எழுதேலும்” யதார்த்தத்தைத் தொட்டான் அதீக்.

“சரி மசான் எப்பிடியோ விழா நடக்கும். எப்பிடிச் சரி சந்தோஷமா நடத்தி முடிக்கோணும். எடேல உட்டிட்டுப் போற பழக்கம் எங்களுக்கிட்டில்லேன்” ஃபர்ஷத் சற்றே உணர்ச்சிவசப்பட்டுச் சொன்னான்.

“கடைசிப் பைணம்தான் ஹாஜியாருக்கிட்டப் போன.... பொது விஷயமென்டாலும் இப்பிடி நாய் மாதிரி திரியேல...” மீண்டும் ஃபர்ஷத் அடித்துச் சொன்னான்.

இருவரும் செயலாளரின் வீட்டை நோக்கி நடந்தனர். அது ஒரு குட்டிக் காரியாலயமாக இயங்கிக் கொண்டிருந்தது.

குறித்த நாளில் மத்ரஸா முற்றவெளி நிரம்பி வழிந்தது. எட்ட நின்று பெண்மணிகளும் தங்கள் குழந்தைச் செல்வங்களின் நிகழ்ச்சிகளைப் பார்த்துப் பரவசமடைந்தனர். அவர்கள் ஒலிபெருக்கியில் தங்களது திறமையை வெளிப்படுத்தி நின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையிலே மௌலவியும் விசேட அழைப்பினரும் மட்டுமல்ல, சில ஆயுள்கால உள்ளூர் பிரமுகர்களும் அமர்ந்திருந்தனர்.

ஃபர்ஷத், அதீக் மற்றும் நண்பர்கள் சிலரும் தங்களது பங்களிப்பை திருப்திகரமாக முடித்த நிலையில் பலா மரத்தடிப் படிக்கட்டில் அமர்ந்திருந்தனர். தூர நின்று நிகழ்ச்சிகளை இரசித்து மகிழ்ந்தனர். தங்களது முயற்சியின் ஒரு வெளிப்பாடல்லவா? மனசுக்குள் மத்தாப்புத்தான்.

இறுதிக் கட்டம்.

செயலாளர் நன்றி சொல்ல எழுந்தார்.

பட்டியல் தொடர்ந்தது.

“சான்றிதழ் அச்சிட்டுத் தந்த பிரின்ஸ் டெக்ஸ் அல்ஹாஜ் அஜ்மல் அவர்களுக்கும் நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.”

ஃபர்ஷாதும் அதீக்கும் ஒரவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

“அஜ்மல் ஹாஜீம் இப்ப பொது விஷயங்களுக்கு குடுக்கிய” பக்கத்திலிருந்த யாரோ தன் சகபாடிகளுக்குச் சொன்னார்.

அதீக் ஃபர்ஷாத்தின் காதுக்குள் சொன்னான். “மசான் நானும் நீயும் ஐநூறு ஐநூறு போட்டு விஷயத்த முடிச்சிட்டோம்... சல்லி எங்கட நன்றி அஜ்மல்ஹாஜிக்கு”

(மல்லிகை - மார்ச் 2005)

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊற்றுக் கண்கள்

"ஒங்களுக்குத் தெரியவா? ஒங்கட கூட்டாளிதானே?"

திடுதிப்பென மனைவி தூக்கிப் போட்ட கேள்வி அவனைத் திக்குமுக்காட வைத்தது. அதனைப் பார்த்து அவளுக்குச் சிரிப்பு வேறு வந்துவிட்டது.

"ஒங்கட கூட்டாளி ஹஸ்ஸானுக்குக் கலியாணம் தீர்ப்பாகீட்டாம்"

"மெய்யா....? எங்கியன்...?

"அந்த ஃபஸ்மினா டீச்சர்... புதிசா ஜொப் கெடச்ச"

"ஆ... அந்த அத்துவாஹிது நானாட மகள்...."

"ஓ... ஓ...."

அவன் சடாரென்று கதிரையில் அமர்ந்து எங்கோ வெறித்தான்.

"எல்லம் பேசிய கதக்கிய.... சும்மாவாலும் செல்லல்லேன்.... ம்...."

"அய்தானே... அவனுக்கெனத்தியன் கொற? டீச்சரொண்டு தான் எடுக்கோணுமென்டா, அதுபோலொன்ட பாக்கியதானே... சும்மா பைத்தியம் வெளாடிய"

"இன்டக்கி எப்படீம் கேக்கோணும் அவனுக்கிட்ட... ம்... பாத்தியா ஓதீட்டாமா?"

"தெரியா... பொண்ணூட்டாரு அப்படித்தானே.... சாட பேசினொடன எல்லம் சரியென்டேன் செல்லிய...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்... எங்கட குடும்பத்திலேம் பஸிந்தான எத்தின பொண்ணீக்கன். யாவாரப் புத்தீல ஓடித்திரீதல்லாம கலியாண யோசின இல்லயென்டேன் நெனச்ச"

"சரி நீங்க போற பயணத்தப் போங்கொ. இன்னம் கொஞ்சம் நானும் விசாரிச்சுப் பாக்கியன். டீச்சரட உம்ம பத்து மணியாகச் செல்லே இவடத்தால கடக்கிப் போற...."

அவன் வெளிப்பட்டுச் சென்றான்.

❖ ❖ ❖

மரைக்க வளவு, ஒசர வளவு, ஓடையடிப் பகுதியில் வாழும் பலநூறு குடும்பங்களைப் பிரதான பாதையோடு இணைக்கும் ஒழுங்கைகள் பள்ளியடியை வந்து சேர்கின்றன. இருபக்கமாகவும் அமைந்துள்ள பஸ்ஹோல்டுகளில் ஒவ்வொரு பஸ்ஸிலிருந்தும் குறைந்தது இரண்டோ மூன்றோ பேர் வந்திறங்கிய வண்ணமேயுள்ளனர். காலை ஐந்து மணி முதல் இரவு பதினொரு மணிவரையில் பள்ளிவாசலுக்கு சனம் வருவதும் போவதும் தான். பள்ளயடியென்றாலே, ஒரு குட்டிப் பஜார்தான்.

ஒரு காலத்தில் இரண்டொரு தேநீர்க் கடைகள் மாத்திரமே இருந்த இடத்தில், இன்று என்ன கடைதான் இல்லையென்று கேட்கத் தோன்றும்.

ஹஸ்ஸானின் வாப்பா சின்ன வயதிலேயே அவன் பெயரில் எக்கவுண்ட் திறந்து காசு போட்டு வந்தார். அவனது படிப்புச் செலவுக்கு எதிர்காலத்தில் உதவட்டுமென்பதே அவரது நோக்கமாயிருந்தது. ஆனால், 'படித்து' முன்னேற வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு வரவில்லை.

பதினெட்டு வயது தாண்டியதும், அவன் செய்த முதல் வேலை, இடிந்து விழும் நிலையிலிருந்த பள்ளியடித் தேநீர்க் கடையை, சேமிப்புப் பணத்தை விடுவித்து வாங்கி எல்லோரது நகைப்புக்கும் ஆளானதுதான்.

அந்தச் சின்னக் கடையை இடித்துத் தகர்த்து நவீன பாணியில் மாற்றியமைத்தான். கண்ணாடிக் கதவுகள் பூட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்யூனிக்கேஷன், ஸீடி, செல்.:.போன் கார்ட், என்று ஒரு புதிய கோணத்தை அறிமுகம் செய்தபோது, சிரித்தவர்களெல்லாம் வியந்து போனார்கள்!

மூன்றுமாதம்செய்துகாட்டினான்.பின்னர்,இன்னொருவனுக்கு கையளித்து மாதாந்த வாடகைக்கு வழிவகுத்துக் கொண்டான்.

சிலநாட்களில் புளியமரத்தடி ரோட்டில் காணித்துண்டு உடைத்து விற்கும் பதாகை விளம்பரம் அவன் கண்ணில் பட்டது.

"அந்தக் கல்லுக்குழீல தாரன் காணி எடுக்கப் போறு"

"சும்மா தந்தாலும் வாண"

இப்படியெல்லாம் சொன்ன போதும், அவன் ஒரு துண்டு எடுக்கவே செய்தான். இரண்டொரு வீடுகள் எழுந்தன. கேள்வி கூடியது. ஒரு சிறிய வீடு கட்ட பௌண்டேஷனும் போட்டு வைத்தான். அதன் பெறுமதி இன்னுமின்னும் உயர்ந்தது. வாங்கிய விலையை விட, மும்மடங்கு வந்தும் "விக்கிய யோசினில்ல" என்று சொல்லிவிட்டான்.

தனது சொந்த வியாபாரத்தை இலகுபடுத்திக் கொள்வதற்காக பைக் ஒன்று வாங்கியவன், இப்பொழுது நான்காவது பைக் மாற்றி ஓடுகிறான். காலப்போக்கில் பைக் புரோக்கராகக் கூட மாறிவிட்டான்.

"பொடியன் விஷயக்காரன்தான்!"

உண்மையாகவே எல்லோரும் பேச ஆரம்பித்தார்கள்.

ஒன்றாகப் படித்த பலரும் திருமணம் செய்துவிட்ட பின்பும், அவன் அதனைப் பிற்படுத்தி வந்ததுகூட, ஒருவித முன்யோசனைதான் என்பது நண்பர்களின் கணிப்பு.

இதற்கிடையில்தான் இந்தக் கலியாணக் கதை.

❖ ❖ ❖

இந்தச் செய்தி கேள்விப்பட்டதிலிருந்தே அவளுக்கு வேறெதுவும் ஓடவில்லை. மாப்பிள்ளையை 'ஊசேத்தி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பிவிட்ட போதும், அவர் மீள வரும் வரையில் அவளுக்குப் பொறுமையில்லை.

பத்துமணிக்கெல்லாம் பள்ளியடிக்குப் பொம்புளைகள் போக ஆரம்பித்துவிட்டார்கள். பகல் சாப்பாட்டுக்குப் பலாக்காய், கறிவகைகள் வாங்கும் பொறுப்பு அவர்களுக்குத்தான்.

பாத்தும்மாத்தாவின் தலைவெளிச்சம் தெரிகிறதாவென்று அடிக்கடி பார்த்துக் கொண்டாள். டீச்சரின் உம்மா அல்லவா? சந்தேகமில்லாமல் விஷயத்தை நாடிப் பிடிக்கலாம்.

'தைரியமான பொடியன்.... நாலு தொழிலும் தெரிஞ்சவன்... டீச்சரெண்டு கண்ணைப் பொத்திக் கொண்டு எடுக்கியா.... சீ.... பச்சக்கெத.... அவனுக்கு ஜாதியா பொண்ணெடுக்கேலும்....'

தனக்குள்ளே அவள் போராடினாள்.

"ஆ! வார.... வார"

தும்புத்தடியோடு விறாந்தைக்கிறங்கி... பாத்தும்மாத்தா நெருங்கியதும் திரும்பி.... தற்செயலாகக் கண்டது போல்....

"எனத்தியன் செய்தி கடக்கிப் போறா?"

"ஓம்... மகள்"

அந்தச் சிரிப்பிலே ஏதோ அர்த்தமிருப்பதை விளங்கி, நடை வேகத்தைக் குறைத்து நின்று பார்த்தாள்.

"நல்ல செய்தியொண்டு கேள்விப்பட்ட... மெய்யா?"

"ஆ... மகள்ட விஷயமா?"

"ஓ.... ஓ.... டீச்சர் மகள்ட..... கேள்விப்பட்டதிலீந்து எனக்குச் செரியான சந்தோஷம்...."

"ஓ பேசிக்கோ நிக்கியதான்"

"நல்ல பொடியன்... நாலு தொழிலும் செய்த... ஊதாரித்தனமுமில்லேன்..."

"கலியாணத்துச் செல்லிய கட்டாயம் வரோணும்... பகலாகீட்டேன்... வாரன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய்யை வாரி ஊற்றிவிட்டுப் பாத்தும்மாத்தா போய்விட்டாள். அவளல்லவா பற்றியெரிகிறாள்.

❖ ❖ ❖

தனது வேலை வெட்டிகளை முடித்துக் கொண்டு ஹஸ்ஸானை எப்படியும் சந்தித்துவிட்டுப் போக வேண்டுமென்று வந்தவனுக்கு நேரப் பொருத்தம் சரியாக அமைந்தது.

வெளியே நின்றது புதுபைக். வேறு யாரும் உள்ளே இருக்கிறார்களோ என்ற சந்தேகத்தை அவனுக்கேற்படுத்தியது. உண்மையில் அங்கு யாரும் இருக்கவில்லை.

"எனத்தியன்டா சேட் மாத்திய மாதிரி பைக் மாத்திய?"

வாய்விட்டுச் சிரித்தான் ஹஸ்ஸான்.

"நேத்துத் தான் எடுத்த"

"அப்ப இருந்தது?"

"எடுத்து ரெண்டு கெழம. வெல வந்த... யெம்பத்தெட்டுக் எடுத்த, நூத்தொண்டுக்கு குடுத்த"

"அப்ப பைக் யாவாரம் நல்லாத்தான் போகுது. நீ கெட்டிக்காரன் தான்டா!"

இருவரும் மாமரத்தடிக்கு வந்தமர்ந்தனர். காற்றுச் சலசலத்தது.

"எனத்தியன் மசான் நின்ட வாக்கில?"

"ஒன்டுமில்ல.... ஒண்ட கலியாணச் செய்தி கேக்கத்தான்"

"எந்த விஷயமன்?"

"அந்த டீச்சர்"

"மெய்தான் மெய்தான்"

அவனால் தாங்கிக் கொள்ளக் கஷ்டமாக இருந்தது.

"பைத்தியமா ஒனக்கு?"

"இப்படித் தான்டா எல்லாரும் கேக்கிய"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஒனக்கு எவளவு நல்லெடுத்தில பஸிந்தான பொண்ணெடுக்கேலும்”

“.......................”

“கூட்டாளிமாரெண்டு நாங்கீக்கிய.... கொஞ்ச மசூரா பண்ணினா கொறஞ்சி போறா?”

“யோசிச்சித்தான் இந்த முடிவுக்கு வந்த”

“ஆ....”

“மாஸம் மாஸம் சம்பளம் வந்து கொண்டீக்கும்”

“டேய் வாழ்க்கயென்டா ஒரு சந்தோஷம் ஈக்கோணும்”

“வருமானம் பல பொக்கத்தாலேம் வந்து கொண்டீந்தா.... வாழ்க்கேல சந்தோஷமும் வந்து கொண்டீக்கும்....”

அவன் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை.

“டேய் மௌத்தாப் போனாலும் பென்ஷன் வரும்டா”

அவன் மௌனித்துப் போனான்.

“நல்ல பொஞ்சாதியப் பாக்க, நல்ல வருமானம் முக்கியமென்டா.... ஒண்டும் செய்யேல”

(மல்லிகை - ஏப்ரல் 2008)

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி மரியாதை....

கருக்கொண்ட மேகங்கள் மழை பொழிந்து கொண்டிருக்கையில் இடையிடையே வானம் குமுறிக் கொட்டுவது போல் அங்கு ஒவ்வொருவரதும் வரவும் பெருமுழக்கமாய் மாறியது.

"ஏன்ட நானக்கு எனத்தியன் நடந்தும்மா. எனக்கேலா... ஏன்ட நானோவ்..." -ஆசிஹா வந்ததும் வராததுமாக தலைவிரிகோலமாய் நெஞ்சிலடித்து தன்நிலை மறந்தாள்.

"ஹஸது புடிச்ச சனம். ஏன்ட புள்ளயக் கண்ணால திண்டு போட்ட" சற்றே ஓய்ந்திருந்த மசிதாத்தா மகளைக் கண்டதும் மீண்டும் ஆரம்பித்து விட்டாள்.

"ஏன்ட நானோவ்... ஏன்ட நானோவ்..." ஆசிஹாவால் அடக்க முடியவில்லை.

வீட்டுக்கொரு ஆண்பிள்ளை... ஸவூதிக்கு தொழிலுக்குப் போய் பல ஆண்டுகள். எதிர்பாராத வேளையில் அவளது மையத்துச் செய்தி வந்து சேர்ந்திருந்தது. மையத்து இல்லாமலேயே அது மையத்து வீடாக மாறியிருந்தது.

"ஏன்ட நானோவ்...."

ஒரு வருட வித்தியாசத்தில் பிறந்து நெருக்கமான பாசத்தோடு வளர்ந்தவர்கள் தான் ஆசிஹாவும் அஸ்லம்கானும்.

"அல்லாட நஸீபு. நாங்கொண்டும் செய்யேல மகள். நீ கவலயெடுக்கவாணா. பிம்மி பிம்மி அழுகியது சரில்ல. இப்பதான் மூணுமாசம் முடிஞ்சீக்கிய."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியும்மா அவளை அமைதிப்படுத்த பெருமுயற்சி எடுத்தாள். ஆசிஹாவுக்கு திருமணமாகி இரண்டு வருடங்கள். கருத்தரிப்பதும் கலைவதுமான பல சந்தர்ப்பங்களைத் தாண்டி இம்முறைதான் மிகச் சிரமப்பட்டு மூன்று மாதத்தை நகர்த்தியிருக்கிறாள். அவளை அரவணைத்து காம்பராவுக்குள் அழைத்துச் செல்வதில் பெரியும்மா எல்லா யுக்திகளையும் பாவித்து வெற்றி கண்டுவிட்டாள்.

கூடவே ஆசிஹாவின் கணவனையும் கூட்டி வந்து காவல் வேலை வேறு கொடுத்துவிட்டாள்.

"அல்லாட நாட்டந்தான்" -அவனாலும் அவ்வளவுதான் சொல்ல முடிந்தது.

றிலாஸின் கைகளைப் பற்றி மார்போடணைத்துக் கொண்டாள். மார்பு விம்மித் தழிந்தது.

கௌரவமானதொரு குடும்பத்தில் அவளுக்கு மாப்பிள்ளை கிடைத்ததென்றால் அதற்கு அஸ்லம்தான் காரணம். ஏணி வைத்தும் எட்டமுடியாத இடத்தில் கல்யாணம் கைகூடியதென்றால் அதற்கு அஸ்லமின் தொழில் துணை நின்றது.

"நானக்கு எனத்தியாம் நடந்த?"

சற்றே நிதானமடைந்த நிலையில் கணவனிடம் விசாரித்தாள்.

"நெஞ்சி வருத்தம் புடிச்சி. ஹொஸ்பிடல்ல எட்மிட் பண்ணி அங்கதான் மௌத்தாகீக்கிய"

தனது கிரகிப்பை இடம்பெயர்த்தான் றிலாஸ்.

'நிக்கிய காலத்தில சம்பாரிச்சிக் கொளோனுமென்டு ராவுபகல் பாக்காம கஷ்டப்படுகிய. டைவர் வேலயெண்டா இனி நெஞ்சிக்கித்தானே பொறுக்கிய' - தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

"மறு கோல் டைமுக்கு வாப்பாங்கூட நீங்களும் போங்கோ. அப்ப வெளப்பமா அறிஞ்சிக் கொளேலும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிஹாவின் ஆலோசனையை அவனும் ஆமோதித்தான்.

❖ ❖ ❖

ராஸிக் நானா இடிந்துபோய் பலா மரத்தடியில் போடப்பட்டிருந்த கதிரைகளிலொன்றில் அமர்ந்திருந்தார்.

மூன்று பிள்ளைகளைப் பெற்றெடுத்த அவர்கள் வாலிபமாகும் வரை வளர்ந்த வீடு அங்கே இருக்கவில்லை. அதற்குப் பதிலாக ஆடம்பரமில்லாத, ஆனால் வனப்பான வீடு காட்சி தந்தது.

அந்தவீடு அமைந்த பிறகுதான் அதற்கேற்ற சுற்றாடலை உருவாக்குவதில் கூட அவர்கள் அக்கறைப்பட்டனர். தனியான இடம் அதற்கு மேலும் கைகொடுத்தது. காற்று கொஞ்சி விளையாடும் ஒரு சிறு பூங்காவாகவே அது மாறியிருந்தது.

"இது சரிவாரல்ல வாப்பா"

ஒருநாள் திடீரென்று அஸ்லம்கான் இப்படி வந்து சொன்னான்.

'இதென்னடா'வென்று மனைவி, பிள்ளைகளும் வந்து சேர்ந்து விட்டார்கள்.

"நான் வெளிநாட்டுக்குப் போகப்போற"

மகிழ்ச்சியும் பயமும் இரண்டறக் கலந்த நிலை எல்லோருக்கும்.

மகனை வெளிநாட்டுக்கனுப்பி பணம் பண்ண வேண்டுமென்று அவர்கள் கனவு காணவில்லை. பெரிய பணத்தேவைகள் கூட அவர்களுக்கு ஏற்படவுமில்லை.

"தங்கச்சிமாரட விஷயமியள் முன்னுக்கு வார... கலியாணமியள் பேசினா, ஊடுவாசல்.... நான தம்பிமாரட தொழில் தொறவியளேம் மனிசரு பாக்கியேன்"

இப்படி அவன் சொல்லிக்கொண்டு போய் தலையை நிமிர்த்தும் போது, தங்கைமார் இருவரும் ஆளுக்கொரு பக்கமாக மெல்ல நழுவிவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகன் சொல்லியது மெய்தான். கொமரு குடுக்கியென்டா லேசான வேலயா இந்தக் காலத்தில" மசிதாத்தா யதார்த்தத்தின் ஆழத்தைத் தொட்டுவிட்டார்.

"சரி மகன் நெனச்சொடனே பொகேலுமா இந்தக் காலத்தில. ஆயிரக் கணக்கில கேக்கியாமேன்" - அவரும் சற்றே விஷயங்களைத் தெரிந்துதான் வைத்திருந்தார்.

"ஓ... வாப்பா... ஒரு கொம்பனிக்கு டைவர்மார் தேவயாம். இருவத்தஞ்சி கெட்டினாப் போகேலுமாம். நாங்க ரெணுமூனு பேரு ஏஜென்ஸிக்கிப் போன" அஸ்லம்தான் மேலும் விளக்கமளித்தான்.

"ம்... இருவத்தஞ்சி முப்பது எங்களயன் மகன் தேடிய" - ராஸிக் நானா புறுபுறுத்தார்.

"அது பிரச்சினில்ல வாப்பா. கூட்டாளிமாரு தாரென்டீக்கி... ரெணுமூணு மாசத்தில குடுக்கேலும்"

"அப்பிடியென்டா இனி அல்லாட காவல்ல ரெடியாகியதானே"

மனைவியின் அங்கீகாரத்தோடு ராஸிக் நானா விருப்பம் தெரிவித்து விட்டார்.

அன்றுமுதல் வீடே கலகலத்தது. ஒவ்வொருநாளும் பிரயாணம் தொடர்பாக ஒவ்வொரு தகவல் வந்துகொண்டிருந்தது.

தங்கைமார் இருவரும் ஆகாயத்தில் மிதந்தனர். எல்லாப் பயமும் பயந்தோடிப் போயிற்று. ஸவூதிப் பணம் வந்து குவிவது போலவும் தங்களது வாழ்க்கை தழைத்தோங்குவது போலவும் கனவுகளில் மிதந்தனர்.

"டீக்கட்... விசா எல்லாம் வந்திட்டு வாப்பா"

இனியென்ன? வழியனுப்புவதற்கான ஆயத்தங்கள் ஆரம்பித்து விட்டன. அஸ்லம் மாத்திரமன்றி அவனது நண்பன் அஷ்கரும் போவது எல்லோருக்குமே இரட்டிப்புச் சந்தோஷம்.

விமானம் மேலெழுந்து பறந்து மறைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைக்கு போலிருந்தாலும் நான்கு வருடங்கள்.

ஆட்டா சத்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தார் ராஸிக் நானா.

அடுத்த மகளாக இருக்க வேண்டும்.

❖ ❖ ❖

எல்லோரும் எதிர்பார்த்திருந்த இளைய மகள் ருக்ஷானாவும் அவள் கணவனும் வந்து சேர்ந்து விட்டார்கள்.

"ஏண்டும்மோ.... நானக்கி எனத்தியன் நடந்த" என்று ஒப்பாரி வைத்தவாறு உம்மாவைக் கட்டியணைத்துக் கொண்டாள்.

யாருக்கு என்ன சமாதானத்தைச் சொல்வது?

அவள் கவலையை அடக்கியடக்கி மெல்ல மெல்ல அழுதாள்.

ருக்ஷானாவுக்கு கல்யாணமாகி இன்னும் நான்கு மாதம்கூட முடியவில்லை.

அஸ்லம்கான் வெளிநாட்டுக்குப் போனதும் ராஸிக் நானா குடும்பத்தில் நடக்கவேண்டிய காரியங்களெல்லாம் மளமளவென்று நடக்க ஆரம்பித்து விட்டன.

"இப்பிடித்தான் மிச்சமா சம்பாரிக்கிய ஆசேல வெளிநாட்டுக்குப் போற... செலவங்க அங்க பெய்த்து கல்யாணம் புடிச்சிக் கொளுகிய.... செலவங்க உம்ம வாப்பவ மறந்துபோற... எதுக்கும் கொஞ்சம் யோசினயா ஈக்கோணும்."

ஒருநாள் விளையாட்டு வாக்கில அம்ஜத் நானா சொன்னது ராசிக் நானாவுக்கு அடிக்கடி ஞாபகம் வரும். அதனால்தான் கடிதம் எழுதும் போதும் கோல் எடுக்கும் போதும் பட்டும் படாமலும் பல விஷயங்களைச் சொல்லி விடுவார்.

"எங்கட ருக்ஷானாட விஷயம் முடிஞ்சா எங்களுக்கு நிம்மதிதான்." ஒருநாள் மசிதாத்தா அபிப்பிராயப் பட்டாள்.

"ஓ... ஓ... பொடியன் ஸௌதிக்குப் போனதில வாரவார விஷயமெல்லாம் ஹைராகிக்கொணு போற... பாவம்... அவனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டு விஷயத்தேம் தங்கச்சிமாரட கலியாணத்தேம் நல்லமாதிரி நடத்தோணுமென்ட ஹாஜத்தோடதானே போன"- ராஸிக் நானா சொன்னார்.

"கல்பு நல்லமென்டா அல்லாவும் லேசாக்கி வெக்கியதானே. இப்பிடி ருக்ஷானாட கலியாணமும் ஹைறாகீட்டு. அவன வரச் சொல்வோம்."

"அத அவன்யோசின பண்ணி முடிவெடுக்கட்டு" பட்டென்று சொல்லிவிட்டார் ராஸிக் நானா.

ருக்ஷானாவின் கல்யாணமும் எதிர்பாரா விதமாகத்தான் நடந்தேறியது. மாப்பிள்ளைக்காரன் அவளை விரும்பியதும் மூத்த மருமகனின் சமூக நிலைப்பாடும் அவனது வேண்டுகோள் நிறைவேறுமென்ற நம்பிக்கையும் அதற்குக் காரணமாயின.

"மகளுக்குக் குடுக்கியத்த குடுங்கோ. தாத்தாக்காரி தம்பிக்கி ஊட்டுப் பங்க எழுதிக் குடுக்கியாம். ஒரு லச்சம் கேக்கியாம்."

மாப்பிள்ளை வீட்டிலிருந்து புரோக்கர் கொண்டுவந்த செய்தி இவ்வளவுதான்.

"மகனுக்கு கோல் பண்ணிச் சொல்லுங்கோ. நல்ல விஷயம் கையுடப்படாது." மசிதாத்தா அவரை இருக்கவிடவில்லை.

"பாவம் அந்தப் பொடியன். போனதிலிருந்து ஒரே செலவுதான். அவன் எப்பிடியெல்லாம் கஷ்டப்படுகியோ தெரிய" பெருமூச்சோடு சொன்னார் ராசிக் நானா.

"சரிசரி அவனுக்கட்டக் கேக்காமநாங்க வேற தாருக்கட்டயன் கேக்கிய? எங்கட புள்ளதானே" அவள் விடுவாளா?

என்னதான் செய்வது!

"விஷயம் நல்லமென்டா சொணக்கிச் சொணக்கீக்காம செஞ்சி போடுக்கோ. கலியாணச் செலவை முந்திப் பாக்கோம்... இன்னும் ஆறு மாசத்தில ஒரு லச்சம் ரூவாவேம் அனுப்பியன். எங்கட மருவாரிய கொறச்சிக் கொளப்படாது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஒரே வார்த்தையில் இப்படிச் சொல்லிவிட்டான். "அல்ஹம்துலில்லா" என்று அல்லாஹ்வுக்குக் சுக்கூர் செய்துகொண்டார் ராஸிக் நானா.

எந்தக் குறைபாடுமின்றி கல்யாணம் சிறப்பாக நடந்தேறியது.

"ஸௌதிச் சல்லிய பொரோசணமாக்கியென்டா அது அந்தப் பொடியன்தான்"

ஊரவர்கள் வாய்விட்டுப் புகழ்பாட ஆரம்பித்து விட்டார்கள். இனி அவனுக்கு வேறு குடும்பப் பொறுப்புக்கள் இல்லையென்பது ஊரறிந்த சங்கதிதான். அதனால்தானோ என்னவோ, மாப்பிள்ளை கேட்கும் படலம்கூட ஆரம்பித்திருந்தது.

'மாப்பிளேடும்ம' என்ற அந்தஸ்தில் மசிதாத்தாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

"நாலு வரிசம் கிட்டவாகிய... பொடியன வரச்சொல்வோமா"- உம்மாவுக்கு அவசரம் பிடித்து விட்டது.

"எங்கட வேல முடிஞ்சொடனே அவனுக்கு வரேலுமா? எளய மருமகனுக்கு ஒருலச்சம் குடுக்கோணும்... அவன் வந்து இங்க தொழில் செய்யேம் சம்பாரிச்சிக் கொண்டே வரோணும்" ராஸிக் நானா நிதானமாகச் சொன்னார்.

ஒரு லட்சம் ரூபாவும் கைக்குவந்து சேரும்வரை ஒரு செப்புக்காசு கூடக் கேட்டுவிடக் கூடாதென்பதில் ராசிக்நானா மிக இறுக்கமாக நின்றார்.

எப்படியோ நான்கு மாதம் நகர்ந்துதான் இருந்தது.

❖ ❖ ❖

"அஸ்லம்கான் மௌத்தாம்"

எதிர்பாராத மையத்துச் செய்தியால் ஊரே குழம்பிப் போய் விட்டது.

'எளய மருமகனுக்குச் சல்லி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுத் துயருக்கு மத்தியில் மசிதாத்தாவின் மனதில் பூதாகரமாக எழுந்து நின்ற கேள்வி இதுதான்.

அழுவதும் விழுவதும் ஓய்ந்த பாடில்லை.

"மையத்தப் பாக்கோணும்... நாங்க மையத்தப் பாக்கோணும்"

தங்கச்சிமார் ஒரே பிடியாக நின்றனர். நாலாண்டாக முகம் காணாத ஆவல் விட்டுவைக்குமா?

ஸவூதியிலிருந்து அஷ்கர் இரண்டாம் முறையாகத் தொடர்பு கொண்டபோது...

மையத்த அனுப்புவதாயின் சொந்தப் பணத்தில் எழுபதினாயிரம் அளவில் செலவாகுமென்றும், அவனது கணக்கில் சுமாராக ஒருலட்சம் பாக்கி இருப்பதாகவும் தெரிவித்திருந்தான்.

இறுதி முடிவெடுப்பது சம்பந்தமாக குடும்பத்தவர்கள் ஆலோசனை செய்து கொண்டிருந்தனர்.

"எவளவு செலவானாலும் செய்யொன்டில்ல... மையத்துக்கு செலவழிக்காத சல்லி எனத்துக்கன்"

சனங்கள் தன்பாட்டில் கருத்துப் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

"மையத்தொண்டானா சீக்கிரமா அடக்கோணும்... சொணங்கச் சொணங்க மையத்துக்கு அதாபுதான்"

துக்கம் விசாரிக்க வந்திருந்த பள்ளி ஹஸ்ரத் சொன்னதைக் கூட ஏற்கும் நிலையில் எல்லோருமிருக்கவில்லை.

எப்படியோ குடும்பத்தவர்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

எதிர்பார்த்திருந்த நேரம் வந்தது. கோலும் வந்தது. ராஸிக் நானா கதைக்கத் தொடங்கினார்.

"மையத்தொண்டானாப் பொறகு சும்மா அதாபு குடுத்து வேலில்ல... மத்தமத்த வேலயள நாங்க இங்க செய்த... நீங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்க மையத்த அடக்குங்கோ... சரியா... ம்... அதோட கணக்குப் பார்த்து ஈக்கிய சல்லிய அனுப்புங்கோ"

"ஆ... சரிசரி அதுதான் நல்லம்" அங்கிருந்து அஷ்கரின் குரல்.

ராஸிக் நானா சுமை இறக்கிய நிலையில் அங்கிருந்து வீட்டுக்கு நடந்தார்.

பள்ளிவாசலில் மறைவான மையத்துக்கு தொழுகை நடாத்தவும், வீட்டில் மூன்றாம் கத்தம் கொடுப்பதற்குமான ஏற்பாடுகள் தீவிரமாக ஆரம்பித்து விட்டன.

(அமுது - மார்ச் 2000)

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தர் வாசம்

அமர்ந்து கொள்வதற்கு ஆசனம் கிடைத்துவிட்டால் காலை ஒன்பது மணிவரையில் பஸ் பிரயாணம் ரம்மியமானது தான்.

மெல்லிய காற்றின் புத்துணர்ச்சியும் விசேடமாக காரியாலயங்களுக்குச் செல்லும் இளம் பெண்களின் விதவிதமான கொலோன் வாசனையும் மனதுக்கு குதூகலம் தரும்.

பஸ் நிரம்பி வழியவில்லை. சனம் குறைவென்று சொல்லவும் இயலாது. ஏறுவதும் இறங்குவதும் சமநிலையான ஒழுங்கில் நடந்துகொண்டிருந்தது. பதினைந்து இருபது கிலோமீற்றர் குறுந்தூரப் பயணம்தான்.

"ரிங்..."

பஸ் மெல்லமெல்ல ஊர்ந்து அடுத்த ஹோல்டில் தரித்தது. இரண்டு மூன்றுபேர் இறங்குகிறார்கள். இரண்டு மூன்றுபேர் ஏறுகிறார்கள்.

பஸ் மீண்டும் புறப்பட்டது.

குப்பென்று முகத்திலறைந்தாற் போல் அத்தர்வாசம் பரவியது. மிகவும் காரமான ஒருவித நறுமணம். எனக்கு சற்றும் ஒத்துக் கொள்ளவில்லை. தலை சுற்றுவது போல் ஒருவித உணர்வு நெஞ்சுக்குள் ஏதோ செய்வது போலவுமிருந்தது.

எனக்கு அத்தர் பிடிக்காது என்பதல்ல எதுவும் அளவுக்கு மீறக்கூடாது தானே. இதை பாவிப்பவர்களல்லவா புரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருந்துவிட்டு எனக்கு அத்தர் வாங்கும் சந்தர்ப்பம் கிட்டுவதுண்டு. ஜெஸ்மின் அத்தர்தான் கேட்டு வாங்குவேன். மல்லிகை மணம் எவருக்கும் சங்கடம் கொடுப்பதில்லையே.

எங்கிருந்து இந்த அத்தர் வாசம் பரவுகிறதென்று பார்த்தபோது, அப்பொழுதுதான் ஏறியிருக்க வேண்டும். முன் ஆசனமொன்றில் அமர்ந்திருந்தார் அவர். தொப்பி - தாடி - ஜுப்பா சகிதம் ஒரு தாயி. நடுத்தர வயது. ஸுன்னத்துக்களை அணுவணுவாகப் பின்பற்றும் ஒருவர்போல் தெரிந்தது.

என்னதான் திண்டாடினாலும் மீண்டும் மீண்டும் இந்தக் காரமான அத்தர்மணம் என்முகத்தில் வந்துவந்து மோதியது. கைப்பையிலிருந்த சித்தாலேப ஞாபகம் வந்தது. தொட்டெடுத்து மூக்கடியில் தடவிக் கொண்டபோது சற்று மாற்றமாக இருந்தது.

பஸ் ஆங்காங்கே நிற்பதும் போவதுமாக...

அந்த மனிதன் கண்ணில் படாமலிருந்தால் நல்லது போலிருந்தது எனக்கு. பஸ்ஸின் இருபக்க ஸீட்களுக்கும் மத்தியில் சனம் ஏறி நெருக்கமாக நின்றால் தெரியாது. எதிர்பார்த்த என்னதான் நடக்கிறது?

'அத்தர் பூசியது நல்ல விஷயந்தான். அதுக்கு இப்பிடிக் குளிச்சுக் கொண்டு வரோணுமா'- என் மனம் எனக்குள் கேள்வி மேல் கேள்வி எழுப்பியது.

எங்கள் வாப்பாவும் இப்படித்தான். அத்தர் பாவிப்பவர்தான். ஒருநாள் உம்மாவுக்கும் வாப்பாவுக்குமிடையே அத்தர் சண்டை வந்துவிட்டது. உம்மா விட்டுக் கொடுக்காத பொம்பிளை.

வாப்பா வெள்ளிக் கிழமைகளில் ஜும்மாவுக்குப் போகும் போது வெள்ளை சள்ளை உடுத்தி அத்தர் கமகமக்கத்தான் புறப்படுவார். மற்றும்படி வியாபாரத்துக்குப் போகும்போது பூசிக் கொள்வார். நிதானத்தோடுதான்.

உம்மா வீட்டைவிட்டு செல்வதென்றால் கல்யாணம் - நிய்யத்து - ஆஸரா என்றுதான் போவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மாவுடைய முகம் எப்பொழுதும் பிரகாசமாகவிருக்கும். எனினும் பௌடர் பூசிக்கொள்வது வழக்கம். அத்தர் குப்பி கண்ணுக்குத் தெரிந்தால் கொஞ்சம் எடுத்துப் பூசிக் கொள்வாள்.

அன்று நிய்யத்து வீட்டுக்குப் போகப் புறப்பட்டுக் கொண்டு அத்தர் பூசியதை வாப்பா கண்டுவிட்டார்.

"கொணுவார கொணுவார அத்தர் குப்பியெல்லாம் டக்கெண்டு முடீத... ம்... இப்பதான் வெளங்கிய" வாப்பா சிரித்துச் சிரித்துச் சொன்னார்.

உம்மாவுக்கு ஒன்றும் கோபம் வரவில்லை.

"பொம்புளயள் அத்தர் பூசப்படாது. ரோட்டால பொகச் செல்லே அந்த மணத்துக்கு ஆம்பிளயள் திரும்பிப் பாத்தா பாவமேன்"

புதிய ஒழுக்கமொன்றைச் சொல்லிக் கொடுத்து பாவ காரியத்திலிருந்து தடுப்பது போன்ற உணர்வு அவருக்கு.

"மெய்யா... ஆம்புளயள் பூசிக்கொண்டு போகச்செல்லே அந்த மணத்துக்கு பொம்புளயள் திரும்பிப்பாத்தா அது பாவமில்லயா?"

வாப்பா இந்த அதிரடியை எதிர்பார்க்கவில்லை. பதில் தயார்நிலையில் இருக்கவுமில்லை. அவர் தனக்குள் பதில் தேடித் தடுமாறினார்.

"அப்ப பௌடர் பூசப்படாது. மணக்கிய சௌக்காரம் பூசப்படாது. வேருக்க வேருக்க அவிஞ்சவிஞ்சி நாத்தத்தோட நிக்கோணும்"

உம்மாவின் இரண்டாவது கேள்விக்கணை வாப்பாவை இன்னுமொருபடி உசுப்பியது.

"போதும் போதும் வாயப் பொத்துங்கோ" என்று சொல்லிவிட்டு வீட்டிலிருந்து வெளியிறங்கிச் சென்றார்.

வாப்பா பாவம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் யாவாரம் தொழில் செய்தாலும் அவர் ஐந்தாம் வகுப்புக்கு மேல் படித்தவரல்ல. உம்மா சோதினை எடுத்து கணக்குப் பாடத்தோடு நாலுபாடம் பாஸ் பண்ணியவரென்றால் கொஞ்சம் விஷயமிருக்கத்தானே வேண்டும்.

"ஓக்.... ஓக்...."

சட்டென்று திரும்பிப் பார்த்தேன். நான் மாத்திரமல்ல. மறு புறம் பின்பக்கமாக அமர்ந்திருந்த ஓர் இளம்பெண் ஓங்காளமிட்டுக் கொண்டிருந்தாள். கூர்ந்து பார்த்தேன். மூன்றுமாதக் கர்ப்பிணி போல் தெரிந்தது. அவளது தாயாக இருக்க வேண்டும். அருகே இருந்தவள் சொப்பிங் பாக்கொன்றைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

"ஓக்.... ஓக்...."

முகத்தை உயர்த்துவதும் தாழ்த்துவதுமாக அவதிப்பட்டாள். முகம் வியர்த்து வேதனை படர்ந்திருந்தது.

வாந்தி வரவில்லை. துவாயொன்றால் மூக்கை மூடி அழுத்திக் கொண்டிருந்தாள்.

அவசர உதவி தேவையா? என்று கேட்டதுபோல் எல்லோரும் தாயையும் மகளையும் பார்த்தபடி இருந்தனர்.

"ஏத்தியோ மணமொண்டடிக்கிய அது இவளுக்குப் புடிக்கல்ல. தலக்குத்தெண்டு செல்லிச் செல்லி நிண்ட" தாய்க்காரி சிங்களத்தில் சொன்னாள்.

"ஓ... ஓ... அது நிக்கிய..." என்று அடுத்த சீட்டில நின்றவன், அந்த மனிதனைக் கைநீட்டிக் காட்டினான் அடுத்தவர்களுக்கு.

என்னதான் செய்ய முடியும்! ஆளை இறக்கிவிடலாமா? எனக்கென்னவோ பிடித்து வெளியே தள்ளினாலும் பாவமில்லைப்போல் பட்டது.

அவருக்கு இதுபற்றி எதுவுமே தெரியவில்லை. பயண வேளையிலும் கூட தன்பாட்டுக்கு தஸ்பை மணிகளை உருட்டி நன்மை தேடிக்கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் ஓடிக்கொண்டிருந்தது. டவுனை அடைய இன்னும் இரண்டொரு கிலோமீற்றர் அளவில் தானிருந்தது.

“இந்த மனிசன் எறங்கட்டும். உடப்படாது. ஆளப் புடிச்சி கொளோணும்” என்று நினைத்தபடியே கூர்ந்து பார்த்தேன்.

இறங்கும் நேரம் நெருங்கிவிட்டதென்பதாலோ என்னவோ, சாக்குக்குள் கையை நுழைத்து அத்தர் குப்பியை வெளியே எடுத்தார். திறந்து குமிழ்முனையை உள்ளங்கையில் உருட்டினார். பின்னர் இரு உள்ளங்கைகளையும் தேய்த்து இருபக்க தாடியையும் மேலிருந்து கீழாக நாலைந்து தடவை அழுத்தித் தடவினார். நாடிக்கு அடியில் விரல்களை விட்டு தாடியை சிலதடவை உருவினார். விட்டாரா? இரு கைகளையும் மாறிமாறி தோளிலிருந்து கீழ்ப்புயம்வரை தேய்த்துத் திருப்தி கண்டார்.

காரமான அத்தர் வாசம் பஸ்ஸினுள் பரவிச் சென்றது.

“ஓக்... ஓக்...” மீண்டும் கர்ப்பிணிப் பெண்.

“சரி சரி ஸ்டாண்டுக்கு வந்திட்ட” யாரோ சொல்வது கேட்டது.

அவர்களுக்கு பெரிய ஆறுதலாக அமைந்து விட்டது போலும். அத்தர்க்காரன் எந்தப் பொறுமையுமில்லாமல் முண்டியடித்துக் கொண்டு முன்பக்கத்தால் இறங்கினான். நான் அவரை நோட்டம் விட்டுக்கொண்டு பின்பக்கத்தால் இறங்கினேன்.

“அஸ்ஸலாமலைக்கும்”

பரஸ்பரம் தெரியவில்லை.

“வாலைக்குமுஸ்ஸலாம்” என்றார் ஏதோ எதிர்பார்ப்புடன்.

“ஒங்களுக்குத் தேவயென்டா அத்தரில குளிச்சுக் கொண்டு ஊடுவாசல்ல நில்லுங்கோ... பஸ்ஸியள்ள நாலு மனிசரும் போறவார. நோயாளியள்... சின்னப்புள்ளயள்... ஆ... எல்லாருக்கும் ஒத்துக்கொள்ளியல்ல இது” நிதானமாகப் பேசவேண்டுமென்று நினைத்தபோதும் வார்த்தைகள் கொஞ்சம் காட்டமாகவே வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அத்தர் பூசியது சுன்னத்தான அமலென்டு ஒங்களுக்குத் தெரியவா" புதிதாக ஏதோ எனக்குச் சொல்லித் தருவதுபோல் நினைப்பு அவருக்கு.

"அத்தர் பூசியது சுன்னத்துதான். இப்பிடியான எடங்கள்ள மத்த மனிசர யோசின பண்ணி நடந்து கொளுகியதும் ஸுன்னத்தான வழிமொறதான். தெரியாட்டி தெரிஞ்சவங்களுக் கிட்ட கேட்டுக்கோங்க..."

அதற்குமேல் அவர் ஒன்றும் பேச முனையவில்லை. உற்று ஊற்றுப் பார்த்துவிட்டுத் திரும்பினார்.

இரண்டொரு அடிதான் வைத்திருப்பார். ஜுப்பா பொக்கற்றுக்குள் கைவிட்டுத் தேடினார். வேறென்ன? அத்தர் குப்பியைத்தான் போலும்!

(ஞானம்- ஆகஸ்ட் 2007)

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பு

"சிவாஜி" படக்காட்சி முடிவுற்றது. மினி தியேட்டர் என்று சொன்னால் அதில் தப்பில்லை.

ரசிகர்கள் திருப்தியோடு வெளியேறிக் கொண்டி-ருந்தார்கள்.

சிலர் ரஜனியின் சின்னச் சின்ன நடிப்புக்களை தமக்குள் இரைமீட்டிப் பார்த்தனர். பலபேர் ஸ்ரேயாவில் கொண்ட மயக்கத்திலிருந்து இன்னுந்தான் விடுபட்டதாக இல்லை.

எல்லாம் ஒரு பதினைந்து இருபது பேருக்குமேல் போகவில்லை. பத்துப்பேர் சேர்ந்தாலே போதுமென்ற நிலையில் படம் ஆரம்பித்து விடும். டிக்கட்காசு ஆக முப்பத ரூபாதான்.

இருபத்தி நான்கு அங்குல பெரிய தெளிவான ரீ. வி. தன்னியக்க ஸீடி பிளேயர்.

வீட்டின் ஓர்அறை சகல வசதிகளோடும் ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தது. வசதியாக அமர்ந்து கொள்ளத்தக்க பிளாஸ்திக் கதிரைகள். ஃபேன் ஓய்வின்றிச் சுழன்று கொண்டிருக்கும். தண்ணீர்ப் போத்தல்கள் வைக்கப்பட்டிருக்கும்.

இதற்குமேல் வாடிக்கையாளர்களுக்கு என்ன வசதிதான் செய்து கொடுக்க வேண்டும்.

அத்தாஸ் நானாவுக்கு அப்படிப் பெரிய வயதென்று ஒன்றும் சொல்ல முடியாது. முப்பத்தைந்து நாற்பதுக்குள்தான்.

ஸவூதிக்கு இரண்டு மூன்று முறை போய்வந்து ஆறேழு வருடத்தைக் கடத்திவிட்டார். வசதியைப் பயன்படுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையில் ஹஜ்ஜும் செய்து கொண்டார். அந்நாட்களில் இப்படிப் போய்வருபவர்கள் நிறையக் காசோடு வருவார்களென்று ஊர் நம்பியது. அது ஓரளவு உண்மையும்தான்.

அந்த எதிர்பார்ப்பின் பின்னணியில் அவரைவிடச் சற்று உயர்ந்த குடும்ப அந்தஸ்தில் திருமணம் சாத்தியமாகியது.

கடையொன்று செய்து பார்த்தார். அது ஆறுமாதத்துக்கு மேல் நீடிக்காமல் தன் கதவுகளை மூடிக் கொண்டது. அத்தோடு விட்டுவிடவில்லை. இன்னும் சின்னச் சின்ன பிஸ்னஸ்களை உப்புப்பார்த்த கதைதான்.

குழந்தைகள் பிறந்து குடும்பச் செலவு உயர்ந்து கொண்டு சென்றதே தவிர, சம்பாதிப்பு சாத்தியப்படவில்லை.

இந்த நிலையில்தான் மினி தியேட்டர் நடாத்துவதில் அவர் இறங்கினார். இத்தகைய மினி தியேட்டர்கள் ஆங்காங்கே இருந்தாலும் சில ஒழுங்கு முறைகளில் அத்தாஸ் நானா கண்டிப்பாக இருந்தார்.

தினசரி இரண்டு காட்சிகள் காண்பித்தாலே ஆயிரம் ரூபா தேறும்.

புதுப் படங்கள் வெளியாகும் போது அதன் ஸீடீக்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய மூலஸ்தனங்களை அவர் தேடிக் கண்டுபிடித்திருந்தார்.

அறையில் அங்குமிங்குமாகக் கிடந்த கதிரைகளை ஒழுங்குபடுத்தி விட்டு வெளியே வரும்போது சிறுவர்கள் சிரித்துக் கதைத்து ஆரவாரத்தோடு வீட்டு முன்னால் போய்க் கொண்டிருந்தனர். திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டல்லவா போனார்கள்! அந்த இடத்தின் பெருமையை அறிந்து வைத்திருந்தார்கள் போலும்.

நேற்று இதே நேரந்தான்....

பன்னிரண்டு பதின்மூன்று மதிக்கத்தக்க சிறுவர் கூட்டமொன்று வீட்டடியில் குழுமிவிட்டது. அத்தாஸ் நானாவுக்கு விஷயம் விளங்கிவிட்டது. ரஜனி ரசிகர்கள் போல் தெரிந்தது. மெல்ல மெல்ல நெருங்கி வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அத்தாஸ் நானா"

"எனத்தியன்டா?"

"எங்களுக்கு படம் காட்டுங்கொளே"

"படிக்கிய பொடியன்மாருக்கு இங்க படம் காட்டியல்லடா"

"அத்தாஸ் நானா நாங்க நாப்பது நாப்பதுருவத் தார"

"அம்பது அம்பதுருவத் தந்தாலும் காட்டியல்லயென்டா காட்டியல்லதான்"

"நாங்க ஒத்தரோடேம் சொல்லியல்ல"

"ஓடுங்கடா இவடத்தால"

குனிந்து சாரத்தை உயர்த்திப் பிடித்து பற்களை நறநறத்துப் பாய்ந்தபோது, பொடியன்கள் பறந்து விட்டார்கள்.

அத்தாஸ் நானா நிமிர்ந்து நின்றார்.

அத்தாஸ் நானாவைத் தேடி அவ்வப்போது பைக்காரர்கள் வந்து ஹோன் அடிப்பார்கள். வாடகைக்கு ஸீடி கொண்டுபோக வருபவர்கள்தான்.

சமகாலத்தில் ஓடிக்கொண்டிருக்கும் படங்களின் பிரதிகளை கடைசிவரை கொடுக்கமாட்டார். கொஞ்சம் பழசுபட்டதாக இருக்க வேண்டும். ஸீடீ கடைகளுக்கு ஏறி இறங்க சிலருக்கு கௌரவம் இடம்கொடுப்பதில்லை. அவர்களுக்கெல்லாம் இவரது சேவை நித்தமும் கிட்டுகிறது. அதன் மூலம் கணிசமான வருமானம் அவருக்கு!

அஸர் தொழுகைக்காக பாங்கோசை கேட்டபோதும், ஒரு சைத்தான் மறதி இடையில் குறுக்கிட்டு, மீண்டும் அந்த ஞாபகம் வந்ததும் ஒரேயடியாக வெளியே பாய்ந்தார். அவ்வல் தக்பீருக்கு தொழுது கொள்ளாவிட்டால் அவருக்குப் பத்தியமில்லை.

தொழுகை முடிந்ததும் அவர் ஓடோடி வீட்டுக்கு வந்துவிட மாட்டார். அமீர் பாச்சாவின் தேநீர்க்கடை வெளிவாங்கில் அமர்ந்து கொள்வார். மாலைக் கலகலப்பு ஆரம்பிக்கும் வேளை அதுதான். அரசியல் மற்றும் ஊர் நடப்புக்களை கதைக்கவென்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலபேர் அங்கு ஒன்றுகூடுவதுண்டு. அதில் அத்தாஸ் நானாவும் கண்டிப்பாகக் கலந்து கொள்வார்.

கதைத்தபடியே அன்றைய பத்திரிகையையும் தட்டிக் கொண்டு போவார். கூடவே பெற்றீஸ், ரோல்ஸென்று ஏதாவது கடித்து பிளேன்ரீயும் அடித்தாரென்றால் ஓர் எழுப்பம் தான்.

ஐந்து மணிக்கெல்லாம் சுடச்சுட பாண் வந்துவிடும். அந்திரஸ்ஸையாவின் சைக்கிள் பாண் பெட்டியோடு வந்துவிட்டால், அத்தாஸ் நானா எழுந்து விடுவார். இரவுச் சாப்பாடு அவருக்குப் பாண்தான்.

பாண் பேக்குடன் ஸித்தி தாத்தாவின் சில்லறைக் கடையில் பருப்பு, சீனி, தேயிலை மற்றும் சாமான்களை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார்.

மொத்தத்தில் இன்று அவருக்கு அதிக செலவில்லை. வருமானம் பரவாயில்லை.

அத்தாஸ் நானா சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை காலங்களில் தான் ஷோ போடுவார்.

"அத்தாஸ் நானா மட்டுந்தான் ஸ்கூல் டைமில படம் காட்டாத மனிசன். புள்ளையள்ட படிப்பு பாழாகியேன்"

இப்படியொரு நல்ல பெயரை அவர் சம்பாதித்து வைத்துள்ளார். கடைசிவரை அதனைக் கெடுத்துக் கொள்ளவும் மாட்டார்.

சில நாட்களில் கொமருகள் கூட வந்து ஆக்கிரமித்து விடுவார்கள். அத்தாஸ் நானா அதைப் பெரிதாக விரும்பவில்லை. இருந்தும் நெருக்கமானவர்கள் குடும்பத்தவர்கள் சம்பந்தப்படும் போது என்ன செய்வது?

அவரது தங்கையின் மகள் மஸீதாவும் மனைவியின் தங்கை ரிஸ்தியாவும்தான் ஒருநாள் விடாப்பிடியாக வந்து நின்று விட்டார்கள். நல்ல படங்களென்று வரும்போது மாதம் ஒருதடவை அவர்களுக்கு ஒதுக்கவேண்டி நேர்ந்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தனியே வருவதில்லை. கூடவே தங்களது கூட்டாளிகளையும் சேர்த்துக்கொண்டு வந்துவிடுவார்கள். அத்தாஸ் நானா ஒதுங்கி விடுவார். மனைவி முழுப்பொறுப்பையும் கையேற்றுக் கொள்வார்.

அவர்களிடம் பணம் வேண்ட முடியுமா என்ன? அதைப் புரிந்து கொண்டதால் மாற்றீடாக எதையாவது கொண்டுவந்து சேர்த்து விடுவார்கள். கடலை, மிக்ஷர், பிஸ்கட்டென்று தாராளமாகப் பரிமாறும்.

"கூட்டாளிமாரோட தாண்டீ படம் பாக்கோணும்"

"ஓடீ ரீவீல எந்த நாளும் படம்போற உம்ம வாப்போட, நான தம்பிமாரோட படம் பாக்கேலுமா.... நாடகமென்டா பாக்கேலும்"

இப்படி அபிப்பிராயங்களைப் பகிர்ந்து கொள்வார்கள்.

நகைச்சுவைக் கட்டங்களைப் பார்த்து வாய்விட்டுச் சிரிப்பார்கள். கதைபற்றி கருத்தாடல் செய்வார்கள்.

விஜய்யா அஜித்தாவென்று சண்டை பிடிப்பார்கள். ஸ்நேகாவின் சிரிப்பையும் த்ரிஷாவின் துடிப்பையும் விதந்து பேசுவார்கள்.

யோசித்தபடி அத்தாஸ் நானா வீட்டை நெருங்குகையில் அங்கே இளைஞர் சிலர் அவருக்காக காத்திருந்தனர்.

"அத்தாஸ் நானா நாங்க சிவாஜி பாக்கோணும்." எல்லா முகங்களிலும் ஆவல் பிரவகித்து நின்றது.

"அதுக்கெனத்தியன் ஒம்பது மணிக்குப் பொறகு போடோமே"- நிதானமாகச் சொன்னார்.

"இன்னேம் ஆறுமணியாகல்லதானே.... ரெண்டு மணித்தியாலத்தில முடிஞ்சேன்"

"செல்லியத்த கேளுங்கொ.... நான் ஒம்பது மணிக்கி முந்திப் போடியல்ல"

"ஒரு நாளக்கேன்... எங்கட ஊடுவாசல் தூரம்... படம் முடிஞ்சி பதினொரு மணிக்கிப் போகேலுமா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் புதுப்புது நியாயங்களை முன்வைத்தார்கள்.

"எனக்கென்டா செய்யேலா"

"நீங்க மட்டுந்தான் இப்பிடிச் செல்லிய... இன்னம் எத்தின எடத்தியல்ல காட்டியன்"

"சரி சரி இனி வேண்டிய எடத்தில பெய்த்துப் பாருங்கொ. நான் வாணான்டா"

ஒரிஜினல் பீஸும், பிசகில்லாத தொழில் நுட்பமும் இங்குதான் இருக்கும் விஷயமல்லவா அவர்களை இப்படி இழுத்து வந்துள்ளது.

"அத்தாஸ் நானா கோச்சிக் கொளாம இங்கன கொஞ்சம் வாங்கொ"

வாட்டசாட்டமான வாலிபன் ஒருவன் தோள் தொட்டு கொஞ்சம் அப்பக்கமாக நகர்ந்து காதுக்குள் சொன்னான்.

"நாங்க பத்துப்பத்துருவ கூடத்தார" அவர்களின் கடைசித் துரும்பு போலும்.

"பத்தாயிரம் தந்தாலும் இந்த டைமில காட்டியல்ல... ஒம்பது மணிக்குப் பொறகு வாரெண்டா வாங்கொ...."

தீர்க்கமாகச் சொல்லிவிட்டார் அத்தாஸ் நானா.

அதற்குமேல் கெஞ்சுவதில் அர்த்தமில்லையென்று அத்தனை பேருக்கும் விளங்கிவிட்டது போலும்.

"போம்டா போம்... ஊட்டுக்குள்ள பைஸ்கோப் காட்டிய... அதுக்கெடேல நல்ல மனிசராகப் போற"

"பெய்த்திட்டு நாளக்கி வெள்ளணக்கி வாரோம்... சனிக்கெழம தானே...."

அவர்களுக்கு வேறு கதியில்லைத்தான்.

சற்று தள்ளி எதிர்ப்பக்க கடைப்படியில் குந்தியிருந்த அத்துக்கரியும் இஜிலானும் இதையெல்லாம் கவனிக்கத் தவறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு பேரும் ஒரே சுருட்டை மாறிமாறிப் புகைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு வேறு என்னதான் வேலை!

சுருட்டுப்புகை சுருள் சுருளாக மேலெழுந்து பதிந்து பரவிக் கொண்டிருந்தது.

"அத்தாஸ் நானா உசிரு போனாலும் பாங்கு சொல்லிய டைமில படம்காட்டியல்ல. பொடியன்மாரு ஏசிஏசிப்போறானியள்.... ஸ்கூல் டைமிலேம் காட்டியல்ல. அப்படித்தானீக்கோணும். மச்சான்... இங்க தா சுருட்ட"

"ஓ மச்சான் பைஸ்கோப் காட்டிச் சம்பாரிச்சாலும் ஹறாமாச் சம்பாரிக்கியல்ல... ஓ... அப்படித்தானீக்கோணும்"

'மஸ்து' ஏறஏற இருவரும் வேறொரு உலகத்திலே சஞ்சரிக்கத் தொடங்கினார்கள்.

இனி அவர்களது பேச்சுவார்த்தைகளெல்லாம் போவோர் வருவோருக்கு நல்ல பொழுது போக்குத்தான்.

(தாயகம்- ஜனவரி 2008)

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழை மரங்கள்

அல்லாடிக் கொண்டிருந்த மரீனாவின் கல்யாணப்பேச்சு அல்லாஹ்வின் கிருபையால் ஸ்திரமாகியிருந்தது. இருபத்தாறு வயதிலாவது காரியம் சரிப்பட்டு வந்ததையிட்டு இர்ஃபான் நானா தம்பதிக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அவள் பெரிய அழகியோ, அவர்கள் பெரிய வசதி படைத்தவர்களோ அல்லர்.

“எங்களுக்கு ரெண்டு காம்பராவெண்டாலும் குத்தமில்ல. சொந்தமான ஊட்டு வசதி செஞ்சிதாங்கொ. எங்களுக்கிட்டேம் இல்ல. ஒங்களுக்கிட்டேம் இல்ல. நாளக்கி புள்ளகுட்டி கஷ்டப்படுகியத்தப் பாக்கேல.” மாப்பிள்ளையின் வாப்பா நியாயமான வேண்டுகோள் விடுத்தார்.

“அத நாங்க எப்பிடிச்சரி செஞ்சிதார. முன்னுக்கீக்கிய காணித்துண்டு பத்துப் பேர்ச்சஸ் எங்கடதான். நாங்க அடித்தாளமும் போட்டீக்கி. ரெண்டு காம்பரா கெட்டிக்கொளாம கலியாணத்துக்கு டேட் தாரல்ல. அன்ன சரியா” இர்ஃபான் நானா உறுதிபட வாக்களித்து விட்டார்.

அவருக்கு வேறு பெண்பிள்ளைகள் இருக்கவில்லை. வளர்ந்துவரும் இரு ஆண்பிள்ளைகள் உள்ளார்கள். அதனால் பிரச்சினையில்லாத விஷயமென்றுதான் மாப்பிள்ளை வீட்டார் சம்மதித்துள்ளனர்.

“சரி இப்ப பாத்துப் பாத்தீந்து சரிவாரல்ல. கொஞ்சம் கொஞ்சமா ஊட்டு வேலயத் தொடங்கோணும். அடித்தாளம் போட்டு ரெண்டு வருஷமாகீட்டு. அதயாவது செஞ்சி வெச்சது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவளவு லேசன். இல்லாட்டி அதுக்கும் ஒரு கணக்குப் போற" இர்ஃபான் நானா மனைவியைப் பார்த்துச் சொன்னார்.

"முந்திமுந்தி பௌண்டேஷனுக்கு மண் நெறக்கோணுமே பத்து டெக்டர் மட்டுந் தேவப்படும். அந்த டைமில பாஸ் சென்னது எனக்கு நெனவு. ஈக்கிய சல்லிக்கி முந்தி அதச் செய்யோம்." மனைவி தனது விருப்பத்தைத் தெரிவித்தாள்.

அர்னோலிஸ் அப்புவின் டிரக்டருக்கு ஓடர் கொடுத்து விட்டார்கள். அன்று மாலையே முதலாம் டிரக்டர் மண் வந்தபோது அவர்கள் வியப்படைந்து போனார்கள்.

காணித்துண்டின் இருபக்க வேலிகளோடு வீடுகள் இருந்தன. ஒரு பக்கமாக எட்டடி மண்ரோடு சென்றது. மறுபக்கமாக ஹாஜியாரின் தென்னங்காணி திறந்தபடி கிடந்தது. அந்தப்பகுதிச் சிறார்களுக்கு அதுதான் விளையாட்டு மைதானம்.

"ரோட்டுப் பக்கத்தால போகேலா. காணிப் பக்கத்தால ரிவேஸில எடுத்தா வேலிய கொஞ்சம் ஒடச்சி டெக்டர் அப்பிடியே உள்ளுக்கெடுக்கேலும்." ரைவர் சொன்னான்.

வேலியக் கொஞ்சம் உடைப்பதுதான் நட்டம். மற்றம்படி எந்தப் பாதிப்புமில்லை. தென்னை மரங்களுக்கிடையால் டெக்டரரை லேசாக எடுத்து விடலாம்.

"சரி அப்ப அப்பிடிச் செய்வோம்." என்றார் இர்ஃபான் நானா.

முதல்நாள் ஒரு முறையும், இரண்டாம் நாள் மூன்று முறையும் மண் கொண்டு வந்தபோதும் மூன்று துண்டைத்தான் நிறைக்க முடிந்தது. இன்னும் ஐந்தாறு லோட் தேவைப்படும் போலிருந்தது.

"ஊட்டு வேலய தொடங்கப் போறபோல?" என்றவாறு மாலையில் அந்தப் பக்கமாக வந்தார் ஹாஜியார்.

"ஓ.... கலியாணமெடுக்க ரெண்டு காம்பராவாலும் கட்டித்தரச் செல்லியாங்க ஹாஜியார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அப்பிடியா... கல்லு, மண், சீமெந்து பெய்த்தீக்கிய வெலக்கி லேசி வேலயல்ல...”

“என செய்வன் எப்பிடிச்சரி செய்யோணுமேன்”

“ஓ ஹைராயீக்கும்” ஹாஜியார்வந்த நோக்கை நிறைவு செய்துகொண்டு நகர்ந்தார்.

அவர் கண்வைத்திருந்த காணித்துண்டு, ஒருநாள் இதனை விற்கத்தான் போகிறார்கள், வேண்டிக் கொள்ளலாமென்று உறுதியாக நம்பியிருந்தார் அவர். இதனையும் வாங்கி விட்டாரென்றால் அந்தப்பகுதி முழுவதும் அவர் கைக்கு வந்துவிடும்.

முப்பது வருடத்திற்கு முன்பு இடிந்து விழுந்த ஒரு பழைய வீட்டை வாங்கிக் கொண்டு வந்து காலடி வைத்தவர்தான் அவர். அதனைத் துப்புரவுசெய்து புது வீடு கட்டினார். அக்கம் பக்கமாக கொஞ்சம் கொஞ்சமாக வாங்கி, இன்னொரு வீடு கட்டி மகளுக்குச் சீதனம் கொடுத்தார். இன்னும் இரண்டு கட்டக்கூடியளவு நிலம் பிடித்திருந்தார். அவரது எதிர்பார்ப்பும் தவறிப் போய்விட்ட கவலை அவரை விட்டபாடில்லை.

❖ ❖ ❖

இர்ஃபான் நானாவின் மனைவி பக்கத்து ஊர்க்காரி. நிறைய இனசனம் உள்ளவள். எல்லோரும் தொழில் செய்துகொண்டு வாழ்பவர்கள். வரவுசெலவு வந்தால் கைபோட்டுக் கொள்ளும் தன்மை கொண்டவர்கள்.

“நாளக்கி ஞாயத்துக் கெழும வெளணேமபோம். எல்லாரும் ஊரில நிக்கிய நாளேன். நாங்க பெய்த்துச் சொல்லியதுதான் அவங்களுக்குப் பெரிசு”

“சரி போம். சோம்பர பாக்கப்படாது.”

மனைவியின் யோசனையை அங்கீகரித்து விட்டார் அவர்.

நாளைக்கு மண்கொண்டுவர வேண்டாமென்று அர்னோலிஸ் அப்புவிற்குத் தகவல் கொடுத்துவிட்டு, அடுத்தநாள் சுபஹு தொழுததும் இருவரும் வெளிக்கிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணப் பேச்சின்போது அவளது உம்மாவும் தம்பியும் வந்திருந்ததால் விஷயம் குடும்ப வட்டாரத்தில் நிச்சயம் அறியப்பட்டிருக்கும்.

"ஆ வாங்கொ வாங்கொ கலியானூட்டாரு" போகுமிடமெல்லாம் இவ்வாறான வரவேற்பு ஆரவாரம் நடந்தது.

"மாப்பிள எப்பிடியன்? எனத்தியன் யாவாரம்? நல்லாத் தேடிப் பாத்தா?" இப்படிப் பலவாறான வினவுதல்கள் தொடர்ந்தன.

எவரும் முகம் கோணவில்லை. வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இர்ஃபான் நானாவுக்கு நம்பிக்கை பிறந்து விட்டது. அவர் இதுகாலவரையில் கூட்டம் குடும்பச் சொந்தமென்று எவரிடமும் கைநீட்டியதில்லை. ஆபத்து அந்தரமென்று எவரும் உதவி செய்யவேண்டிய நிலைமைகளும் ஏற்படவில்லை. சின்னத்தொழில் செய்தாலும் சீராக குடும்பத்தை நகர்த்திய பிரகிருதி மட்டுமல்ல நல்லது கெட்டது வரும்போது மற்றவர்களுக்கு தனது பங்களிப்பை நல்கியிருக்கிறார்.

குடும்ப வட்டத்துக்கு அப்பால் நட்பு வட்டாரத்திலும் கூட பலபேரின் முகங்கள் அவர் மனதிலே தோன்றி மறைந்தன. எப்போதும் உதவிசெய்ய எதிர்பார்த்திருப்பவர்கள்.

"அல்ஹம்துலில்லா நான் நெனச்சதப் பாக்க பரக்கத்தாயீக்கி"

"அல்லா எங்கள் கையுடுகியா" அவளும் பூரித்துப் போனாள்.

❖ ❖ ❖

அன்று அவர்கள் வீட்டுக்கு வரும்போது நன்றாக இருட்டிவிட்டது. மகன்மார் இருவரும் சாப்பிட்டுவிட்டு தூங்கியிருந்தனர். உம்மாவும் வாப்பாவும் எங்காவது போய்வந்தால் குடைந்து குடைந்து செய்தி கேட்பவள் மரீனா. இன்று அவளால் கேட்க முடியுமா என்ன? இருந்தும் இவரதும் நடவடிக்கைகளில் தெரிந்த மகிழ்ச்சி அவளுக்குப் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகளைக் கூறத் தவறவில்லை. மரீனா நித்திரைக்குப் போகத் தயாரானாள்.

இடைவிடாது இருவரும் கதைத்துக் கதைத்தே நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

"ஊரு பொறத்திக்குப் பெய்த்தே சொல்லீட்டு வந்திட்டோம். முன்னுத்தூட்டு மனிசனுக்கு சொல்லாட்டிச் சரில்லேன். முப்பது வருஷமா காலமல நிக்கிய நல்ல வசதிக்காரன். எதுக்கும் ஹாஜியாருக்கிட்டேம் வெளணேம் பெய்த்துச் சொல்லுங்கோ" மனைவி வற்புறுத்தி நின்றாள்.

"வசதீக்கிய மனிசன்தான். பேசக்கதக்க நல்லந்தான். ஆனா தாருக்காலும் ஒதவி செஞ்சென்டு நானென்டா கேள்விப்பட்டில்ல." இர்ஃபான் நானா தனது விருப்பக் குறைவை வெளிப்படுத்தினார்.

"செல்லிச் செல்லியா மனிசரு ஒதவிசெய்ற? ம்... தாரடாயாலும் கதயால எங்களுக்கு வேலில்ல... நாங்க சொல்லியத சொல்வோம்."

"ஒதவி செய்த எப்பிடிப் போனாலும் எங்கட காணித்துண்ட எப்பிடிச்சரி எடுத்துக் கொளப்பாத்த... எத்தின பைணம் ஆள்போட்டு ஆள்போட்டுப் பேசினன். எங்களுக்கும் ஒ கொமரீக்கி. அவளக் குடுக்கச் செல்லே தேவப்படுமென்டு யோசின பண்ணல்லேன். மத்தவங்க எப்பிடி ஹரப்பாப் போனாலும் குத்தமில்ல. நாங்க நல்லா ஈக்கோணும்... அன்ன அந்த ஜாதி கொளுக"

"ஓ இனி நாங்க விக்கப்போறெண்டு தாருசரி செல்லீக்கும்... சரி சரி அத உடுங்கோ. அவரு கடக்கிப் போக முந்தி நாளக்கி வெளனக்கி எதுக்கும் பெய்த்துச் செல்லுங்கோ"

"ம்... சரி சரி" மனைவியின் நச்சரிப்புத் தாங்க முடியாமல் சம்மதித்தான்.

இரவு பதினொரு மணியாகிவிட்டது. பேசிப்பேசி நேரம் போனதே தெரியவில்லை. ஜன்னலைச் சாத்தச் சென்றபோது நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு மாமரத்திலிருந்து வெளவால்கள் சடசடத்துப் பறந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணக்களைப்பு அவர்களை நிம்மதியாக தூக்கத்தில் ஆழ்த்தியது. சுபஹுக்குச் சொன்ன பாங்குகூட அவர்களின் செவியைத் தட்டவில்லை.

அவர் சுபஹு தொழுதுவிட்டு யாஸீன் ஓதி முடிக்கையில் அவள் கோப்பிக் கோப்பையோடு வந்தாள்.

"ஹாஜியாரும் தொழுதிட்டு வந்தா ஆறுமணியாகம் காட்டீம் ஸ்தோப்பில ஈந்திக்கோ நிக்கிய...." அவள் மீண்டும் ஞாபகமூட்டிவிட்டுச் சென்றாள்.

பொலபொலவென்று விடிந்துகொண்டு வந்தது. இர்பான் நானா ஹாஜியாரைச் சந்திக்க வெளியிறங்கினார்.

அவருக்கு திக்கென்றது. ஒரு கணம் அதிர்ந்துதான் போனார்.

"இங்க வாங்கொ.... கொஞ்சம் ஓடி வாங்கொ" சத்தமிட்டு அழைத்தார் மனைவியை.

என்னவோ ஏதோவொன்று ஓடி வந்தவளுக்கு ஒன்றும் சொல்ல வேண்டிய தேவை இருக்கவல்லை.

நேற்று இருட்டியபின் வந்ததால் கண்களில் படாத காட்சி.

தென்னை மரங்களுக்கிடையிடையே அழகாகக் குழி தோண்டி சின்னச்சின்ன வாழைமரங்கள் நடப்பட்டிருந்தன. இனி அதற்கூடாக டெக்டர் அல்ல சைக்கிள் கூடப் போகமுடியாது.

"அவடத்தால கல்லுமண் கொணு போனென்டு அவங்களுக்கு நட்டமொன்றுமில்ல.... ம்... கல்பில எடமில்ல. இப்ப ரோட்டில் மண்ணக்கொட்டி ஆள்போட்டிழுக்கவாகிய.... இனுமொரு செலவேன்"

அவள் எதுவுமே பேசாமல் கீழே பார்த்தபடி நின்றாள்.

(தாயகம்- டிசம்பர் 2008)

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுதிகாண் காலம்

அவளுக்குத் திருமணமாகி ஆறேழு மாதங்களுக்கு மேல் போகவில்லை. அப்படி அவசரப்பட்டு பிள்ளைகுட்டிகளைப் பெற்று பெரும் குடும்பக்காரியாகிவிட வேண்டுமென்ற ஆவல் அவளுக்கிருக்கவில்லை.

எவ்வளவு விரைவாக கல்யாணம் செய்து கொடுக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக அந்தக் கைங்கரியத்தைச் செய்துவிட வேண்டுமென்பதில் அவளது உம்மா, வாப்பா ஒன்றும் பின் நிற்கவில்லை. அதனைச் சாதித்து நிம்மதிப் பெருமூச்சுவிட அவர்கள் எவ்வளவோ காலமாகக் கடும் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தனர்.

படிப்பு என்று கொஞ்சம் காலத்தை இழுத்தடித்தாள். வேலையென்று இன்னும் கொஞ்சக் காலத்தைக் கடத்தினாள். வேலையும் கிடைத்துவிட்டது. இனி எதைத்தான் சொல்வதென்று அவளுக்குப் புரியவில்லை.

இதற்கிடையில் அவளோடு படித்தவர்கள் ஒன்றாக வேலைக்குச் சென்றவர்களென்று பலரும் திருமண பந்தத்தில் இறங்கிவிட்டனர்.

"தெரீமா பொண் பாக்கவந்தாம், தெரீமா மோதிரம் போட்டாம், தெரீமா கலியாணம் தீர்பாக்கிட்டாம், தெரீமா வாரமாஸம் பொற பதினெட்டில கலியாணமாம்"

இப்படி ஒவ்வொருவரும் ஏதாவதொரு கலியாணச் செய்தியைக் கொண்டுவந்து உம்மா வாப்பாவின் காதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டு நச்சரிப்பார்கள். போதாக்குறைக்குப் பெரியும்மா, மாமி, மதினிமாரென்று சைட்ஸ்போட் வேறு கொடுப்பார்கள்.

தனக்கு எப்படிப்பட்ட கணவன் கிடைக்க வேண்டுமென்று அவளுக்கு கனவுகள்... கற்பனைகள் இல்லாமலில்லை. அதை எப்படிச் சாத்தியமாக்குவதென்ற எண்ணக் கோட்டைகளைக் கட்டியெழுப்பும் போதெல்லாம், கல்யாண அலைகள் எழுந்து மோதி அவற்றை உடைத்துச் சிதைத்து விடும்.

படித்து வேலை செய்து வருவதால், அதே தரத்தில் ஒருவர் கிட்டினால்தான் வாழ்க்கை புரிந்துணர்வோடு அமையுமென்று அவள் எண்ணினாள். இருந்தும் மாப்பிள்ளைப் பஞ்சம் அந்தப் பிராந்தியத்தை வெகுவாகத் தாக்கியிருந்தது.

இப்பொழுதெல்லாம் பொடியன்கள் படிப்பதில் பெரிதாக அக்கறை காட்டுவதில்லை. தேறுகின்ற ஓரிருவருக்குக்கு கடுமையான போட்டி.

பெரும்பாலானவர்கள் மீசை அரும்பியவுடனே தொழிலுக்கு புறப்பட்டு விடுவார்கள். பிச்சைச் சம்பளம் எடுப்பதற்காக கஷ்டப்பட்டு படிக்க வேண்டுமா? என்று கேட்பார்கள். கார் வைத்து ஓடுபவர்களெல்லாம் சோதனை பாஸ் பண்ணியவர்களா? என்றும் கேட்பார்கள்.

ஹறாம் ஹலால் பார்க்காமல் சம்பாதித்து, உம்ரா - ஹஜ்ஜென்று 'சோ' காட்டினால் "அல்லா குடுத்தீக்கி" என்று ஊர் மக்கள் சேர்டிபிகேட் கொடுத்துவிடுவார்கள்.

இப்படிப்பட்ட ஒருவனுக்கு கழுத்தை நீட்டாமலிருப்பதற்குத் தான் அவள் தன்னாலான சகல முயற்சிகளையும் பிரயோகித்தாள். ஆனால் அது முடியாத காரியமென்று அவளுக்கே விளங்கிவிட்டது.

"நல்லோரு விஷயம் வந்தீக்கி மகள். சொந்த யாவாரமாம். நல்ல பொடியனென்டு எல்லாருமே செல்லிய. பாத்துப் பாத்தீந்து வேலில்லேன். நாங்களும் ஏண்டியமட்டும் தேடிப் பாத்ததானே ம்... அப்பிடீம் இப்பிடீம் இருவத்து மூனு வருஷமாகீட்டேன்". உம்மா வழமைபோல் ஒருநாள் சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கொமரு முத்தி கொரங்காக முந்தி' காரியத்தை முடித்துவிட உம்மா துடியாய்த் துடிப்பது அவளுக்குப் புரியாதா என்னா?

"சரிம்மா" என்று சொன்னாளோ இல்லையோ, படு உற்சாகமாக அடுத்தடுத்த கட்டங்கள் ஆரவாரமாக ஆரம்பித்தன.

நாளாந்தம் வேலைக்குப் போகும் அவளைப் பெண் பார்க்க வேண்டிய அவசியமிருக்கவில்லை. ஆனால் அவளுக்கு மாப்பிள்ளை பார்க்க வேண்டிய தேவையிருந்தது.

"…. இல்ல அவருவந்து பாத்திட்டு புரியம் செல்லட்டு. இல்லாட்டி நாளக்கி பிரச்சினவரும்" என்று அவளது உள்மனதை உணர்ந்ததாலோ என்னவோ, குடும்பத்துக்குள் சிலர் விடாப்பிடியாக நின்றனர்.

ஒருநாள் மாப்பிள்ளை வந்து பெண் பார்த்தார். அவளும் மாப்பிள்ளையைப் பார்த்தாள். வெளித் தோற்றப் பாங்கில் பரஸ்பரம் பிடித்துவிட்டது.

அதிக நாள் செல்லவில்லை. அவளுக்குத் திருமணமாகி விட்டது. இனியென்ன கல்லானாலும் கணவன்தானே?

ஒருவருக்கொருவர் இளமையின் வடிகால்களாக மாறிப் போயினர். அன்பும் அரவணைப்பும் அரசோச்சின.

சொந்தமாக பைக் வைத்திருந்தான். அவள் அறிந்தபடி நான்கு பேர் சேர்ந்து கூட்டு வியாபாரமாம். அவ்வப்போது ஆயிரம் ரூபாத்தாள்களை அவள் முன்னே எண்ணிக் கொள்வான்.

"எனத்தியன் மகேள் இப்ப ஆறுமாஸம் பிந்தீட்டேன். புதிய செய்தயொன்டுமில்லயா?"

அடிக்கடி அவளிடம் எல்லோரும் கேட்கும் கேள்வி இது. எல்லோருக்கும் என்ன புதுச் செய்தியைத்தான் அவள் சொல்வாள்! பத்துமாதத்தில் குழந்தையொன்றைப் பெற்றுக் காட்டி, கெட்டித்தனத்தை நிரூபிக்க வேண்டுமென சட்டமா போட்டுவைத்துள்ளார்கள்.

அவள் இதையொரு பிரச்சினையாக எடுத்துக் கொள்ளவேயில்லை. ஆனால் இருபக்கக் குடும்பத்தவர்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல உறவினர்களுக்கும் அறிந்த தெரிந்தவர்களுக்கும் அது ஒரு பிரச்சினையாகவே இருந்தது.

"வீஓஜீ டொக்டருக்கிட்டப் போமா? எதுக்கும் காட்டிப் பாத்தா நல்லந்தானே" அழுத்தம் தாங்க முடியாமல் கணவன் ஒருநாள் கேட்டார்.

"ஒங்களுக்கெனத்தியன் அவசரம்? எனக்கு சோதினயொன்டீக்கி. அது முடியங்காட்டீம் பிந்தியது நல்லம்" அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள்.

முதற் குழந்தையைப் பெற்றுக் காட்டிவிட்டால் அப்புறம் குழந்தையே கிடைக்காவிட்டாலும் எவருக்கும் பிரச்சினையில்லை.

"மகள் எங்கட உஸ்மான் லெப்பேகிட்ட இஸ்ம் குடிச்சா புள்ள தரிச்சியென்டு எல்லாரும் செல்லிய. பள்ளத்தூட்டு பீபிதாத்தட மகளுக்கு ரெண்டுதரும் மூணுமாஸத்தில கலஞ்சாம். அவருக்கிட்ட இஸ்ம் குடிச்சாப் பொறகுதானாம் நின்ட. இப்ப எட்டு மாஸமாம்"

தனக்குள்ளேயே அவள் சிரித்துக் கொண்டாள். கூடவே தனது கூட்டாளி ரசீதாவையும் நினைத்துக் கொண்டாள்.

அவளோடு ஒன்றாகவே படித்து, ஒன்றாகவே முகாமைத்துவ சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டு, தேர்தல் திணைக்களத்தில் கடமையாற்றுபவள். திருமண விடயத்தில் ரசீதாவின் எதிர்பார்ப்புக்கள் ஈடேறவில்லை. ஏதோ கிடைத்ததைப் பெற்றுக் கொண்டு வாழ்வைத் தொடர்ந்தாள்.

தனக்கு திருமணம் நிச்சயமாகியிருக்கும் தகவலைச் சொல்லத் தான் அவள் ரசீதாவை தேடிச் சென்றாள்.

இன்னும் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகவில்லை. கையிலொன்றும் வயிற்றிலொன்றுமாய் அவள்...

"கலியாணம் முடிக்காம ஈந்திக்கேலும்."

இப்படிச் சொல்லுமளவுக்கு அவளது வாழ்வு அர்த்தமற்றுப் போயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரிவார ஆளொன்டல்லடீ" என்று அலுத்துக் கொண்டபடி வயிற்றைத் தடவிச் சாய்ந்தாள்.

"நீ எனத்தியன் செல்லிய ரசீதா?" அவள் கடுங்கவலையோடு கேட்டாள்.

"இனி எதச் செல்லீம் வேலில்லடீ"

ரசீதாவின் கண்கள் கலங்கித் தளும்பின. முகத்தில் ஆயுள் சோகத்துக்கான முன்னுரை எழுதப்பட்டிருந்தது. ஆழ்மூச்சு விட்டபடி நெளிந்தாள்.

"யாவாரம் தொழிலெண்டு ஒன்டும் ஒழுங்கில்ல. ஹறாம் ஒரு நாளேல நூறுருவச் சல்லி கைல காணல்ல. இருந்திட்டொரு நாளக்கி மீன் துண்டொன்டும் கறிசாமானும் கொனுவார. அந்தாளெட உம்ம வாப்பாமாரும் வாரபோறல்ல. எனக்கெண்டாத் தெரிய."

ஆயிரம் முறை மீண்டும் யோசிக்க வேண்டும் போலிருந்தது அவளுக்கு. கல்யாணம் முடிந்தபின் என்ன செய்ய? இனி எப்படியாவது வாழச் சொல்லித்தானே எல்லோரும் சொல்வார்கள். வாழத் தெரியாதவள்... அகங்காரம் பிடித்தவள் என்றெல்லாம் சொல்லக் காத்திருப்பார்கள்.

"புள்ளயள நான் பாத்துக்கொளுகியன். எனக்கு சம்பளம் கெடக்கியதானே...இந்த மனிசன் எனக்கு வாணான்டு ஏலாதமட்டில செல்லிப் பாத்தான். ஒத்தராலும் கணக்கெடுக்கயல்ல." ரசீதா சொல்லிச் சொல்லி அழுதாள்.

"சம்பாதிப்பில்லாம சோத்துமாடு மாதிரி தின்டு தின்டு நிக்கிய. எனத்தசரி கேட்டா மொகத்தில பாஞ்சி கையோங்கிய. ஏன்ட சம்பளத்த கைல குடுத்திரோணும்... அவரு ராஜமாதிரி செலவழிக்கிய" ரசீதா மேலும் சொன்னாள்.

"உட்டுப்போடியது பெரிய வேலயல்ல. ஆனா புள்ளகுட்டீக்கேன்... எப்பிடிச்சரி சேந்துபோ..."

எல்லோரும் இதே மந்திரத்தைத்தான் உச்சாடனம் செய்து கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன்ட பொகுத்தில பொறந்த புள்ளையள் நாளக்கி வாப்பில்லாத புள்ளயளா... ம்.... அத நெனச்சித் தான் நான் தலநஸீபெண்டு பல்லக்கடிச்சிக் கொண்டு நிக்கிய... புள்ளயள் மட்டும் கெடக்காமீந்தா உட்டுப்போட்டு மிச்சம் நாள்..."

ரசீதாவை விட்டுவிட்டு வர அவளது மனம் இடம் கொடுக்கவில்லை. அவளது வாழ்வு பெரும்பாலும் தோல்வியின் பக்கமே சாய்ந்து போயிருந்தது. அதற்குள்ளிருந்து சில படிப்பினைகளை பொறுக்கிக் கொள்ள முடிவதையிட்டு அவள் சிந்தித்தாள்.

ரசீதா அவசரப்பட்டு ஏன் குழந்தைகளைப் பெற்றாள்? என்ற கேள்வியே அவளுக்குள் எழுந்து நின்றது. மறுதலையாக... ஒன்றுக்கும் உதவாத புருஷன்மார், தங்களது பலவீனங்கள் வெளிப்படுவதற்கிடையில் அவசர அவசரமாகக் குழந்தைகளைப் பெற்று உறவுப் பிணைப்பை இறுக்கிக் கொள்ள முனைகிறார்களா? என்றும் எண்ணத் தோன்றியது அவளுக்கு.

அன்று மாமி, மதினிமாரெல்லாம் வந்திருந்தார்கள். எதையெதையோவெல்லாம் கதைத்தார்கள். சாப்பிட்டார்கள். உம்மாவோடு குசுகுசுத்தார்கள். காலை, பகலென்று நகர்ந்து மாலையாகிவிட்டது. இறுதிக்கட்டமாக விஷயத்துக்கு வருவார்களென்று அவளுக்குத் தெரியும். அதைத்தான் எதிர்பார்த்துமிருந்தாள்.

"நாங்க நாளக்கி காலிக்கி பொகப் போற. எங்கட எளய மதனிக்கி புள்ள கெடச்சீக்கேன். அங்க நல்ல டொக்டரொன்டீக்காம். போறவாக்கில காட்டீட்டு வரேலுமேன் மைனி. ஒங்களுக்கும் லீவு நாள்தானே. ம்.... கலியாணம் முடிஞ்சீம் இப்ப எட்டு மாஸமாகீட்டேன்" மதினிக்காரி ஆரம்பித்து வைத்தாள்.

"மெய்தானே இது பாத்துப் பாத்தீக்கிய ஜாதியல்ல. எனத்தியெண்டு பாக்கோணும். ஒங்கட குடும்பத்தில தாருக்காலும் இப்பிடிச் சொணங்கியல்லயெண்டு ஒங்கடும்மவே செல்லிய. எங்கட குடும்பத்திலேம் அப்பிடித்தான். காணிய காணிய மனிசரெல்லாம் ஒரே கேக்கிய" மாமிக்காரி தொடர்ந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்ப காட்டி மருந்துமாயம் செய்யப்போனா எனக்குத்தான் கரச்சல். இன்னம் ரெண்டு மாஸத்தில சோதனயொன்டீக்கி. அது முடிஞ்சி போமெண்டு நான் மச்சனுக்கிட்ட செல்லீக்கி மாமி..." அவள் மெல்லிய சிரிப்போடு சொன்னாள்.

அது அவர்களெல்லோருக்குமே பெரிய சந்தோஷமாக அமைந்துவிட்டது. எடுத்த முயற்சிக்கு பலன் கிட்டிவிட்டதாகப் பூரிப்படைந்தனர். பெருந்திருப்தியோடு விடைபெற்றனர்.

'ரெண்டு வருஷம் இவரோட வாழ்ந்து எப்பிடிப்பட்ட மனிசனெண்டு தெரிஞ்சிக் கொண்டுதான் புள்ளகுட்டி பொறோணும்'

யார்? எவர்? என்னதான் சொன்னாலும் அவளெடுத்த இறுதி முடிவு இதுதான்.

(ஞானம் செப்டம்பர - 2005)

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் சுவடுகள்

இன்று வியாபாரத்தில் அவ்வளவாக அவன் நாட்டம் கொள்ளவில்லை. ஐந்து வருடத்துக்கு முன்பு அவனது வாப்பா மௌத்தாகிப் போன நினைவுநாள் இன்று.

அவன் சென்ற முறை ஊர்போயிருந்தபோது உம்மாவும் அதனை ஞாபகமூட்டினாள்.

"மகன் வாப்பாட வருஷக் கத்தம் வார. நாலஞ்சி பேரக் கூப்பிட்டு ஓதிச்சிப் போட்டா நல்லம்"

"ம்... அதுக்கென்டு நின்டா ஏன்ட யாவாரமெல்லாம் பாழ். நான் போறன். ஏன்ட மாதிரி நான் அங்கசெஞ்சி போடியன்" அவன் சாத்தியமாகக் கூடிய விதமாகப் பார்த்துச் சொன்னான்.

"அது நல்லம் மகன். சும்ம பெருமக்கி மா இடிச்சி வேலில்லேன். அந்த மனிசன் அதியளுக்குப் புரியமுமில்ல" அவள் அதற்கு அங்கீகாரமளித்துவிட்டாள்.

நடந்ததை இரை மீட்டுக் கொண்டுதான் அவன் பள்ளிவாசலை நோக்கி அஸர் தொழ வந்தான். அப்படி யோசித்துக் கொண்டு வரும்போது தான் பள்ளிவாசல் வெளிக்கேற்றடியில் அந்தப் பெண் நின்றாள். நாற்பது வயதுக்குமேல் போகாது என்றாலும் சுமக்க முடியாதபடி முகத்தில் தொங்கிய கவலையும், எந்தவேளையிலும் கந்தலாகத் தயாராகியபடியிருந்த புடவையும் அவள் வயதை இன்னும் ஒரு பத்துக் கூட்டிக் காட்டியது.

அவள் வாய்திறந்து எவரிடமும் எதுவும் கேட்கவில்லை. பார்வை ஒன்றே போதுமே என்று நினைத்தாளோ என்னவோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவாசலுக்கு வருவோரும் போவோரும் அந்தப் பார்வையை ஒரு பொருட்டாக எடுக்கா விட்டாலும் அவனுக்கென்னமோ பொறுக்க முடியவில்லை.

இது ஓர் அபூர்வ காட்சியா என்ன? அவ்வப்போது உள்கேற்றடியிலும் ஏன் உட்பள்ளியிலும் கூட எத்தனைபேர் இடம்பிடித்து துண்டை விரித்து விடுகிறார்கள். கடித அத்தாட்சிகளை காட்சிக்கு வைக்கிறார்கள். யாராவது விசாரித்தால் கதைகதையாக வேறு சொல்கிறார்கள். பாவம் அவள் கேற்றுக்கு வெளியேதான் நிற்க வேண்டியிருந்தது.

அவன் மனம் அல்லாடியது. அதற்கு மத்தியில் தொழுகையை நிறைவேற்றி விட்டான்.

தொழுதுவிட்டு வெளிச்சாலையில் அமர்ந்து யோசித்தான். மாலை நேரத்தில் சில நாட்களில் தான் இப்படி அவனுக்கு ஓய்வு கிட்டும். இன்று அவனாகவே நேரத்தை ஒதுக்கிக் கொண்டான். அவனது சின்ன வியாபாரத்தில் திருப்தி ஏற்படும் கட்டத்தில் அவன் மூட்டையைக் கட்டிவிடுவதும் வழக்கம்தான்.

பொம்மைகள், ஊதுகுழல், விசையில் இயங்கும் கார், விமானம் இத்தகைய விளையாட்டுச் சாமான்கள்தான் அவனுக்குப் பழக்கப்பட்ட வியாபாரம். பெற்றோருடன் வரும் சிறுபிள்ளைகளைக் கண்டால் அவனுக்கு குதூகலம்தான்.

ஆஸ்பத்திரி சந்தி, பஸ் ஸ்டான்ட், மார்க்கட் முன்றல் இப்படி காலநேரம் பார்த்து அவன் ஆஜராகி விடுவான். நடமாடும் கடை என்பதால் பிரச்சினையில்லை.

பிளேன்ரீ, கஞ்சி, ஸர்வத் என்று குடித்துக்குடித்து வியாபாரம் பண்ணுவான். கொள்ளையாகச் சம்பாதிக்க வேண்டுமென்று ஏனோ அவன் எண்ணுவதில்லை.

நாளாந்தச் செலவு போக நூறோ... இருநூறோ தேறினாலும் போதுமென்றே அவன்மனம் சொல்லும்!

பொதுவாக இரண்டுமணி நகரும்போது சனம் வடிந்துவிடும். அதன்பிறகு ஆடைகோடைக்கு வியாபாரம் பட்டாலும் அது அவனுக்குப் பிடிப்பில்லை. எப்படியும் மூன்று மணிக்கு மேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் நிற்பதேயில்லை. சில நாட்களில் பன்னிரண்டு மணிக்கே அவனுக்கு திருப்தியேற்றப்பட்டு விடும். இனியென்ன....

டவுனில் பெரிய வியாபாரிகளோடு அவன் தொடர்பு வைத்திருந்தான். ஐந்து வருடமாக அவன் அவர்களோடு பழகி வருகிறான். உடனுக்குடன் கொடுக்கல் வாங்கல்களை முடித்துக் கொள்வான். எல்லோரும் அவன்மீது நம்பிக்கை வைத்து எவ்வளவு பொருட்களையும் கொடுக்கத் தயாராக இருந்தனர்.

ஆனால் அவன் பெறுவதற்கு தயாராக இருக்கவில்லை. தன்னால் சுமக்க முடிந்தது எவ்வளவென்பதை அவன் தெளிவாகவே அறிந்து வைத்திருந்தான்.

கேற்றுக்கு வெளியே அந்தப்பெண் இன்னுந்தான் நின்று கொண்டிருந்தாள். அவள் தன்கையில் ஒரு தொகை நாணயக்குற்றிகளை வைத்திருப்பதை அவன் வரும்போது கவனிக்கத் தவறவில்லை.

அப்படி சில்லறை போடுவதையே சிலபேர் பெருமிதத்தோடு செய்வதைப் பார்த்து அவன் குறுகிப் போயிருக்கிறான். அவன் யாருக்குமே இப்படி நாணயம் பிச்சை போட விரும்புவதில்லை.

தனி வாழ்க்கை, தெரு வாழ்க்கையென்று கைநீட்டித் திரிபவர்களுக்கு சிலவேளை அது பொருத்தமாக இருக்கலாம். வீடு குடும்பமென்று வாழ்பவர்கள் சுமைதாங்க இயலாமல் வரும்பொழுது பத்து ரூபாவென்றாலும் கொடுக்க வேண்டுமென்றே அவன் விரும்புவான். முடிந்த வரையில் அப்படியே செய்து வருவான். மிகுந்த வெட்கத்தோடு எவரும் காணாதபடியே அவன் அதையும் செய்வான்.

அவனது வாப்பாவிடமிருந்து அவன் பெற்றுக் கொண்ட ஆதர்ஷங்கள் ஒன்றிரண்டல்ல.

விறகுக்கரத்தை நெய்னார் என்றால் தெரியாதவர்களில்லை. ஒரு விறகு மடுவத்தையே அவர் வைத்து நடத்தினார். வீட்டோடு சேர்த்து தகரத்தால் அந்த மடுவம் அமைக்கப்பட்டிருந்தது.

அப்பகுதிக்கு வாராவாரம் றப்பர் குற்றிகளை லொறியில் விநியோகிப்பார்கள், அதை முழத்துண்டுகளாய் அறுத்து...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறகுக் கொள்ளிகளாய்ப் பிளந்து கரத்தையில் அடுக்கி விற்பனைக்கு விடுவார். ஆளில்லாத வேளைகளில் எதையும் அவரே செய்வதற்கு அறிந்தவராயும் தயாராகவும் இருந்தார். அதற்காக ஒன்றும் அவர் வெட்கப்படவில்லை.

அவரது வீடு அமைந்திருந்த இடத்தைப் பொறுத்து அடிக்கடி பிச்சைக்காரர்கள் வந்து தொல்லை கொடுக்க மாட்டார்கள். அப்படி யாரும் வந்துவிட்டால் ஒரு சொட்டுத் தேநீர் என்றாலும் கொடுக்காமல் அனுப்புவதில்லை. இரண்டு வார்த்தை அன்பாகக் கதைக்காமல் விடுவதுமில்லை.

அவர் பள்ளிவாசலுக்கு போகும் சந்தர்ப்பத்தில் முஸாபர் என்று யாரும் வந்து ஒதுங்கியிருந்தால் முடியுமாயின் வீட்டுக்கு அழைத்து வந்து சாப்பாடு போடுவார். இயல்பாக இப்படிச்சில பண்புகள் அவரோடு ஒட்டி உறவாடிக் கொண்டிருந்தன.

"அந்த மனிசன்ட நல்லதனத்துக்கு அல்லா இப்பிடியொரு மாப்பிளய கொணுவந்து சேத்த, லெச்சக்கணக்கு குடுத்தாலும் இப்பிடியொரு மாப்பிள கெடக்கியா.. எல்லாம் அவனவன் தேடிக்கொளுகியதுதான். சல்லி சாமான் மட்டும்மீந்து போத"

அவனது சகோதரியின் கல்யாணத்தைத் தொடர்ந்து ஊரவர்கள் இப்படிக் கதைத்துக் கொண்டது இன்னும் அவனது செவியில் ஒலிப்பது போலிருந்தது.

அவன் பள்ளிச் சாலையிலிருந்து எழுந்தான். அந்தப் பெண்ணோடு கொஞ்சம் கதைத்தால் நல்லது போல் பட்டது. சனநடமாட்டம் குறைவாக இருந்தது அவனுக்கு வாய்ப்பாய் அமைந்தது.

"நீங்க எங்கீந்தன் வந்த...?" இதமாக அவன் விசாரித்தான்.

அவளது முகத்திலே மெல்லிய மகிழ்ச்சி படர்ந்தது.

கண்டும் காணாதபடி போவோருக்கு மத்தியிலே இப்படித் தேவையுடன் இந்தப் பையன் விசாரிக்கிறானே என்ற பெருமிதம் அவளுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்க அகதியள். பத்து வருஷமாகீட்டு இந்தப் பொக்கத்துக்கு வந்து. மிச்சம் கஷ்டத்தோட வாழிய. இப்படி கைநீட்டித் திரியப் புரியமில்ல"

ஏதோ முக்கிய பிரச்சினை மனதிலே அடியூண்டுவது அவனுக்கு விளங்கி விட்டது.

"சொல்லுங்கோ" அவன் உற்சாகம் கொடுத்துக் கேட்டான்.

"எங்கட மகன் ஒரு சோதின பாஸ். இன்னுமொரு சோதின எடுக்க சல்லி கொஞ்சம் தேவ. இருநூறு ரூபாமட்டில. அவனொரு தொழில் செஞ்சா... அல்லாட காவல்ல எங்களுக்கு கஷ்டமில்ல"

"மெய்தான்... மெய்தான்"

அவனது மனம் துரிதமாக வேலை செய்தது.

"இதச்சென்னா ஒத்தராலும் நம்பியல்ல மகன்... ம்... தம்பி கேட்டதுக்காக செல்லிய. மொகத்தப் பார்த்துக்கொண்டு பொய் செல்லேலுமா"

அவன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். நாளாந்த லாபமாக இருநூற்றி சொச்சம் ரூபாதான் அன்று தேறியது.

வாப்பாவின் நினைவாக நூறு ரூபாவுக்கு மூன்று சாப்பாட்டுப் பார்ஸலோடு யாஸீன் ஓதி விடுவதென்றே எண்ணியிருந்தான்.

அவன் அங்குமிங்கும் பார்த்தான். எவரும் தன்னைக் கவனிக்கக் கூடாதென்பதே அவனது எதிர்பார்ப்பு.

"இந்தாங்க"

இருநூறு ரூபாவையும் எடுத்துச் சுருட்டி நீட்டினான்.

அதிஷ்டச் சீட்டொன்று விழுந்தது போலிருந்தது அவளுக்கு. மகிழ்ச்சி உச்ச எல்லையைத் தொட்டு நின்றது.

"யா அல்லா... தொடர்ந்தும் இப்படிக் கைநீட்ட வைக்காதே இவங்க வாழ்க்கய பரக்கத்தாக்கிவை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் கைவைத்து அந்தப் பள்ளிவாசலைப் பார்த்து பிரார்த்தித்தான். யாருக்கும் எதுவும் கொடுக்கும் போது இப்படி துஆ செய்துகொண்டே கொடுக்க வேண்டுமென்று வாப்பா சொன்னதை நினைவு கூர்ந்தான்.

"அல்லா ஒங்கள நல்லா வைக்கோணும் மகன்"

அதைவிட மேலாக அவளால் வேறென்னதான் சொல்ல இருக்கிறது!

இரவுச் சாப்பாட்டுக்காக அவனது பையில் ஆக இருபதே ரூபாதான் இருந்தது.

ஏதாவது சாப்பிட்டு சமாளிக்க வேண்டியதுதான்.

எதிரே அப்பக்கடை அவன் கண்களில் பட்டது.

(வீரகேசரி - 06.01.2002)

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது மனிதன்

வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுதுவிட்டு வெளியிறங்கி-னால் ஏதாவதொரு நோட்டீஸ் யாராவது பகிர்ந்து கொண்டிருப்பார்கள்.

அனீஸ் ஹாஜி காரைத் திறந்த போது போகிற போக்கில் சிறுவனொருவன் காருக்குள் நோட்டீஸொன்றைப் போட்டுவிட்டு பறந்துவிட்டான். அதனை மடித்து பொக்கற்றுக்குள் போட்டுக் கொண்டு காரைச் செலுத்தினார்.

வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு மேல்மாடியில் ஹாயாக ஓய்வெடுக்கும் வேளையில்தான் அந்த நோட்டீஸின் ஞாபகம் வந்தது. எங்காவது ஒரு பள்ளிவாசலில் கந்தூரி அல்லது ஏதாவதொரு விளையாட்டுச் சங்கம் நடாத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி, இப்படி ஏதோவொன்றென்ற நினைப்போடு நோட்டீஸை விரித்தபோது 'மாபெரும் கட்டிடத் திறப்பு விழாவும் - பரிசளிப்பும்' என்று தெரிந்தது.

அதுகூட அவரை ஒன்றும் செய்து விடவில்லை. 'நல்ல விஷயம்' என்றே மனம் சொன்னது. தொடர்ந்து வாசித்தபோது பிரதம விருந்தினராக மாவட்ட மந்திரி வருவதாகவும் பெயர் குறிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தபோதே ஹாஜியாருக்கு சூடெடுத்தது.

மாவட்ட மந்திரி அவருடைய கட்சிக்காரர். தேர்தலின் போது ஊரில் வேலைசெய்த முதன்மைப் பொறுப்பாளர். அவருக்குத் தெரியாமல் மந்திரி வருவதா? தனக்குள் சிரித்துக் கொண்டார் அனீஸ் ஹாஜி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கிளிங் கிளிங்" தொலைபேசி அழைத்தது.

"நான் ஜப்பாரு பேசிய. இதியளுக்கு எடம் குடுக்கேல ஹாஜி. ஒங்கட மொகத்தில குத்திய மாதிரி வேல... மந்திரிக்கெதிரா வேல செஞ்சிட்டு மந்திரியக் கொணுவரப் போறாம்"

"ஜப்பாரு... எங்களோடு வந்து கதச்சி மந்திரியக் கொணுவாரெண்டா பிரச்சின இல்ல... ஊரு விஷயத்துக்கு நாங்க எப்பேம் ஸபோட், அது வேறு விஷயம். இது 'ஒங்கட மந்திரிய நாங்க கொணுவாரெண்டு காட்ட' ரெடியாகிய போலீக்கி"

"எடங்கொடுக்கவாணா ஹாஜி. எங்கட மந்திரி வாரெண்டா அந்த மேடேல நீங்க நிக்கோணும். இல்லாட்டி இதூப்பொறகு இலக்ஷன் வேலயளுக்கு என்னக் கூப்பிடவாணா. அவங்கட சல்லிப் வர எங்களுக்கு காட்டவார... ம்..."

கோபக் கொதிப்போடு ஜப்பாரு தொலைபேசித் தொடர்பைத் துண்டித்துக் கொண்டான்.

இப்படி எத்தனைபேர் கட்சிக்காகவும் மந்திரியின் வெற்றிக்காகவும் இரவு, பகல் பாராது பாடுபட்டார்கள். சொந்தப் பணத்தைச் செலவிட்டார்கள். அடிதடிக்கு ஆளானார்கள் பொய்க்குற்றச் சாட்டுப்போட்டு கம்பிஎண்ண வைத்தார்கள். இத்தனைக்கும் பின் ஈட்டிய வெற்றியில் யாரோ சுகம் அனுபவிப்பதா?

அனீஸ்ஹாஜி கைபேசி எண்களைச் சுழற்றினார்.

"ஆ... அனீஸ் ஹாஜி கதக்கிய. மந்திரி நிக்கியா?"

"கொழும்பிலிருந்து இன்னேம் வரல்ல"

"கட்டாயம் சந்திக்கோணும். வந்தொடனே ஒரு கோல் தாங்கோ"

"சரி ஹாஜி"

நிகழ்ச்சிக்குக் குறுக்கே நிற்காமல் அணுகு முறையை மாற்றியமைக்கு முகமாக மந்திரியைச் சந்தித்து விஷயத்தைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு படுத்துவதென்று அனீஸ்ஹாஜியும் ஆதரவாளர்களும் தீர்மானித்தனர்.

❖ ❖ ❖

மந்திரியின் காரியாலயத்தில் அனீஸ்ஹாஜி யென்றால் அறியாதவர்களில்லை. அவர் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியதுமில்லை. அப்படியொரு கௌரவம்.

"ஹாஜி ஒங்களத்தான்"

ஹாஜியின் தலைமையில் மூவர் உள்ளே புகுந்தனர். மந்திரி கைகுலுக்கி சிரித்து வரவேற்றார்.

"என்ன விஷயம்?" மந்திரிதான் கேட்டார்.

மந்திரி இருக்கும் சூழ்நிலையில் நேரத்தை வீணாக்குவது நல்லதாகப்படவில்லை.

"எங்கட ஊருக்கு நீங்க ஒரு ஃபங்சனுக்கு வாரெண்டு கேள்விப்பட்ட" அனீஸ் ஹாஜிதான் கேட்டார்.

"ம்... ம்..." என்றபடியே அவன் செயலாளரைப் பார்க்க, டயறியைப் புரட்டியவர், நாள்.... நேரமெல்லாம் உறுதிப் படுத்தினார்.

"பொது விஷயந்தான். ஆனா, இத ஏற்பாடு பண்ணியவங்க எங்களுக்கெதிரா வேல செஞ்சவங்க ஸேர்...." முந்திக்கொண்டு ஜப்பாரு சொன்னான்.

மந்திரி ஒருவிதமாகச் சிரித்தார்.

"தாரு கூப்பிட்டாலும் நீங்களியள் ஒரு சொல் சொல்லாம நான்வாரா" இப்படிச் சொல்வாரென்ற பூரணநம்பிக்கை மூவருக்கும்.

"இலக்ஷன் முடிஞ்சா இந்தக் கட்சி கிட்சியெல்லாம் பாக்கப்படாது. எல்லாரேம் மதிக்கோணும். இப்ப நானொரு பொது மனிசன். ம்..." இப்படி மந்திரியார் திருவாய் மலர்ந்தருளினார்.

அதற்குமேல் என்னதான் பேச இருக்கிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுதான் நல்லது ஸேர். வாங்கோ"

மந்திரிக்குப் புரிந்ததோ இல்லையோ மூவரும் விடைபெற்றுக் கொண்டு வெளியேறினர்.

காரில் ஏறும்வரை எவரும் எந்த அபிப்பிராயத்தையும் பரிமாறிக் கொள்ளவில்லை.

கார் விரைந்தது.

"மோதிரம் போட்டு வரவேற்பாங்க. புரியாணிச் சாப்பாடு குடுப்பாங்க. கொஞ்ச நாளேல வட்டீம் மொதலுமா பொரோசன மெடுப்பாங்க. வோட்டு வந்தா பழயபடி மறுபக்கம்" ஜப்பாரு மனக்கக்கிஷத்தை கொட்டினான்.

அனீஸ் ஹாஜியார் எதுவும் பேச முடியவில்லை. இன்று நேற்றா என்ன? கடந்த முப்பது வருஷமாக இந்த அரசியலில் அவர்பெற்ற அனுபவங்கள் அனந்தம். தொடர்ந்தும் இந்த அரசியலை எப்படிக் கொண்டுபோவதென்று தீர்க்கமாக யோசித்து முடிவுக்கு வரவேண்டும் போலிருந்தது.

❖ ❖ ❖

ஊர் விழாக்கோலம் பூண்டிருந்தது.

குர்ஆன் பள்ளிக்கூட புதுக்கட்டிடத் திறப்பு விழாவும், பரிசளிப்பு விழாவும் பிரமாண்டமான ஏற்பாடுகளோடு அன்று நடக்கவிருந்தது.

பேண்ட் வாத்தியங்கள் ஒலித்தன, பட்டாசு வெடிகள் முழங்கின. 'ஜயவேவா' அதிர்ந்தது. மெல்லிய ஸலவாத்தும் கேட்டது.

மாலை மரியாதைகள் சகிதம் மந்திரி பிரதானிகள் பவனிவந்தனர். குத்தூஸ் ஹாஜி மந்திரிக்கு மிக நெருக்கமாக நடந்தார். கெமராக்களும் வீடியோக்களும் அவரது முக்கியத்துவத்தை பதிவு செய்து கொண்டிருந்தன.

"நூறு ஸஹன் புரியாணி, இந்த மனிசனுக்கு சல்லியப்பத்தி கணக்கேயில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவைத்து இன்புற்றவர்கள் சான்றிதழ் வழங்கினர்.

"ம்... இலக்ஷன் காலத்தில ஒரொரு நாளும் நாலஞ்சி புசலெண்டு ஆக்கிப்போட்ட... இதெல்லாம் செய்தியா"

அவரது ஆதரவாளரொருவர் மேலும் அழுத்தம் கொடுத்தார்.

சாப்பாட்டின் பின்பே விழா ஆரம்பமாகியது.

மேடையிலே பிரமுகர்கள் வரிசையாக அமர்ந்திருந்தனர்.

மந்திரி பேச எழுந்தபோது கரகோஷம் ஒரு பக்கம், பட்டாசு வெடி மறுபக்கம்.

"ஒங்கட அன்புக்கும், ஆதரவுக்கும் நன்றி. மதக்கல்வி அபிவிருத்தி மிக முக்கியமானது. கட்டிடத் திறப்பும், திறமைக்கு வெகுமதியும் ஒன்றாக இங்கு நடைபெறுகிறது. எதிர்காலத்தில் கல்விக்கும் இந்தப் பிரதேசத்தின் சகல வளர்ச்சிக்கும் நிச்சயம் உதவுவேன். என்னைப் பிரதம விருந்தினராக அழைத்தமைக்கு விசேடமாக குத்தூஸ் ஹாஜியாருக்கும் மகிழ்ச்சி தெரிவிக்கிறேன்"

மந்திரியின் இக்கூற்றை வரவேற்று எழுந்த கைதட்டல் ஓய்வதற்கு எவ்வளவு நேரமெடுத்ததோ தெரியவில்லை.

மொத்தத்தில் அன்று எல்லோருக்குமே பெரு மகிழ்ச்சிதான்.

❖ ❖ ❖

மீண்டும் தேர்தல் வந்துவிட்டது.

சுவரொட்டிகள், அலங்காரங்கள், பஜரோக்கள், விஞ்ஞாபன விநியோகங்கள், வாக்குறுதிப் பட்டியல்கள் கிராமங்களுக்குள்ளும், ஒழுங்கைகளுக்குள்ளும் ஏன் ஒவ்வொரு குடிசைகளுக்குள்ளும் பிரவேசித்துக் கொண்டிருந்தன.

குத்தூஸ் ஹாஜியார் வழமைபோல் களத்தில் இறங்கி விட்டார். அவரது வாகனங்கள் ஒன்றுவிடாமல் ஓடித்திரிந்தன. வீடு காரியாலயமாகியது. முற்றத்தில் தகரக் கூடாரம் வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்துவிட்டது. இருபத்தி நான்கு மணிநேரம் ஆதரவாளர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர்.

ஆளும்கட்சி ஆதரவாளர் அனீஸ்ஹாஜி தன்பரிவாரங்களோடு இன்னும் குதிக்கவில்லை.

அன்று முதன்முதலாக பஜரோ அவரது வீட்டின் முன் வந்து நின்றது. மந்திரிதான் தன் சகாக்களோடு வந்திறங்கினார்.

அனீஸ்ஹாஜி மகிழ்ச்சியோடு கைகுலுக்கி வரவேற்றார். குளிர்பானம் பரிமாறப்பட்டது.

"இலக்ஷன் வந்தீக்கி, வழக்கம்போல ஒங்கட ஸபோட் தேவ" என்றபடி மந்திரி கலகலத்தார்.

"ஏண்ட ஸபோட் என்டக்கும் ஒங்களுக்குத்தான்... ஒங்கட கட்சிக்கித்தான்" அமைதியாகச் சொன்னார் அனீஸ் ஹாஜி.

"ஒங்கட மட்டுமல்ல ஊரட ஸபோட்டேம் எடுத்துத்தரோணும்" மீண்டும் மந்திரி.

"ஸேர் இலக்ஷனென்ட பேரில நாங்கநாங்க சண்டபுடிச்சி வேலில்ல... அதனால் பொது மனிசனா நின்டு ஊருக்கு சேவ செய்ய நான் முடிவு பண்ணீட்டன்"

ஹாஜி சொன்னதைக் கேட்டு ஜப்பாரு, மந்திரியின் முகத்தைப் பார்த்தபடியே தலையை மேலும் கீழும் ஆட்டினான்.

மந்திரியின் முகத்தில் இருள்படர ஆரம்பித்தது.

(தினக்குரல் 10.02.2002)

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸாலிஹான புள்ள....

மீன்குழம்பு விட்ட தேங்காய்ச் சம்பலுடன் இடியப்பம் சாப்பிடுவதென்றால் அப்துல் க.்.ப்பாருக்கு அதற்குமேல் ஒன்றும் தேவையில்லை. கூடவே மனைவி மரியம் பீபி போட்டுக் கொடுத்த இஞ்சிப் பிளேன்ரீ அவரை இன்னுமொருபடி மேலெழுப்பியது.

அன்று சனிக்கிழமை என்பதும் அவருக்கு சட்டென்று ஞாபகம் வந்தது. மகனின் நினைப்பு அவரை மொய்த்துக் கொண்டது.

"மமராதி... இங்கவா மகன்"

"எனத்தியன் வாப்பா" என்றபடி எங்கிருந்தோ ஓடிவந்த வாப்பாவை அணைத்து நின்றான்.

"இண்டக்கி சனிக்கிழம... வௌாடிக்கொண்டு திரியாம... வக்துக்கு தொழப்போகோணும்... வௌங்கினா..."

"ஓ வாப்பா"

பீப் பீப் அடித்தபடி சைதுஹஸன் நைன்டி பைக்கில் வந்து நின்றான். ஹெண்டலில் தொங்கிய ஹெல்மெட்டை எடுத்து நீட்டினான்.

தொப்பிக்கி மேலால் அதனை அணிந்து கொண்டு பின்னால் ஏறி, மகனுக்கும் மனைவிக்குமாகக் கையசைத்துக் கொண்டு விடைபெற்றார். அப்துல் க.்.ப்பார் வழக்கமாக இந்த நேரத்தில் தான் கடைக்குப் புறப்படுவார். இனி மாலை ஐந்தாறு மணிக்குப் பின்புதான் வந்துசேர்வார்.

❖ ❖ ❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மமராதி அங்கே போவதும் இங்கே வருவதுமாக நின்றான். அந்த இடத்தைச் சுற்றிச்சுற்றி வந்தான். அந்த வீட்டின் மதிலுக்கு மேலெழுந்து வெளிப்புறமாகக் கவிழ்ந்து படர்ந்திருந்த கொய்யா மரம் அவனைக் காந்தப் புலமாய் ஈர்த்து நின்றது. மெல்லிய இளம் பச்சையும் மஞ்சளும் கலந்த கொய்யாக் கனிகள் இடையிடையே தொங்கிக் கொண்டிருந்தன.

மதிலுக்கு மேலால் மரத்துக்கேறி விடுவதொன்றும் அவனுக்குப் பெரிய விஷயமல்ல. கையும் மெய்யுமாய்ப் பிடிபடஅவன் விரும்பவில்லை. ஒரே கல்லெறியில் விழுத்துகின்ற நம்பிக்கையும் அவனுக்கில்லை. அதே நேரத்தில் மறுபக்கக் கூரையில்தான் கற்கள் போய் விழுமென்பதும் சர்வநிச்சயம். எப்படியோ அவனுக்கு 'பேரக்கா' சாப்பிட வேண்டும். அவ்வளவு தான்.

அவன் நாலைந்து அளவான கற்கள் பொறுக்கிக் கொண்டான். சரமாறியாக எல்லாக் கற்களையும் எறிவது... கொய்யாக்கனி விழுந்தாலென்ன விழாவிட்டாலென்ன, கூரையில் கற்கள் விழுந்து வீட்டுக்காரர் வெளிப்பாயும் போது ஓடுவதைத்தவிர வேறென்னதான் செய்ய?

இலக்குப் பார்த்து எறிந்த மூன்றாவதோ நான்காவதோ கல்லில் கொய்யாப் பழமொன்று விழுந்துவிட்டது.

வீட்டுக்குள்ளிருந்து "தாரண்டா கல்லடிக்கிய?" என்ற சத்தமும் படாரென்ற கதவு விரிப்பும் கேட்பதற்கிடையில் அவன் நூறு மீற்றருக்கப்பால் பறந்து விட்டான். இனி எப்படி அவனைப் பிடிப்பது! படிக்கட்டொன்றில் அமர்ந்தபடி பேரக்கா சாப்பிட ஆரம்பித்தான் மமராதி.

❖ ❖ ❖

தன்னைவிட ஒரு வகுப்புக்குறைய தரம் ஐந்தில் படிக்கும் இரண்டு சிறுவர்கள் இறப்பர் ஃபுட்போல் ஒன்றோடு வருவது மமராதியின் கண்களில் பட்டுவிட்டது.

"டேய் ஃபுட்போலடிக்கோமா?"

"எங்கியன்?"

"எடமா இல்லாத வாவா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மமராதி இருவரையும் அழைத்துக் கொண்டு ஒற்றையடிப் பாதையொன்றுக்குள் ஏறினாள்.

ஃபுட்போலோட மூன்றுபேரையும் கண்டபோது, அங்குமிங்கும் நின்ற சிறுவர்களும் படிப்படியாகச் சேர்ந்து கொண்டனர்.

விளையாட்டு மைதானம் இல்லாத ஊரென்றால் பிள்ளைகளுக்கு ஊரே விளையாட்டு மைதானம்தான். கொஞ்சம் இடவசதியானதும் நிழற்பாங்கானதுமான இடத்திற்கு வந்து நின்றான் மமராதி. எல்லைகள் வகுக்கப்பட்டு ஆரவாரத்தோடு விளையாட்டு ஆரம்பமாகியது.

"டேய் தாரண்டா இவடத்துக்கு வெளாடவந்த...? ஒங்கட உம்மவாப்பாட காணியோ! போங்கொடா இவடத்தால" அந்த வீட்டுப் பொம்புளை எட்டிப்பார்த்து ஒரு கத்துக் கத்தினாள்.

ஒரு கணம் எல்லோரும் ஸ்தம்பித்து நின்றனர். அந்த அமைதியை தனக்கு வெற்றியாகக் கருதி பொம்புளை உள்ளே போய்விட்டாள்.

"அடிப்போம்டா"

எதிர்ப்பை நிராகரித்துவிட்டு மீண்டும் தயாராகினர். விளையாட்டு களைகட்டியது. இரு குழுவினரும் தலா ஒருகோல் போட்டுவிட்டனர்.

"எனத்தியன் ஒரு பைனம் சென்னாக் கேக்கியல்லியா...? கொழந்தயளுக்காலும் கொஞ்சம் படுக்க வழில்லேன் இந்த ஹத்திக்கரயால"

வீட்டுப் பொம்புளையின் இரண்டாவது எத்தனம் திரும்பவும் அவர்களை அமைதிப்படுத்தியது. அங்குமிங்குமாக நின்றவர்கள் மெல்ல மெல்ல மமராதியை நெருங்கினர். அந்த வீட்டில் இந்த நேரத்தில் எந்த ஆம்பிளைகளும் இல்லையென்பது அவனுக்கு நன்கு தெரிந்து விட்டது. அவன் தனிந்த குரலில் எல்லோருக்கும் ஓர் அறிவுறுத்தல் வழங்கினான்.

குழந்தை நித்திரையான நேரத்தில் சமையல் வேலைகளை முடித்துக் கொள்ள முனைந்தவளுக்கு பொடியன்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டால் குழந்தை எழுந்துவிட்டமை கடும் கடுப்பைக் கொடுத்தது.

இனிக் கலைந்து போய்விடுவார்களென்ற நம்பிக்கையோடு உள்ளே சென்றாள் அவள். மீண்டும் விளையாட்டு பெரும் சத்தத்தோடு ஆரம்பித்தது.

"டேய் மமராதி, நீதான் ஊருப்புள்ளயெல்லாம் இவடத்துக்கு கூட்டிக்கொணுவார. பெரிய மனிசன். நாங்க வாரா ஓன்ட ஊட்டுக்கட்டக் கூத்தட"

"ஹொா... ஹொா... ஹொா..." என்று புதுவிதமாக ஓசையெழுப்பி நையாண்டி செய்துகொண்டு எல்லோரும் மறுபக்கமாக ஓடித்தப்பிவிட்டனர்.

"புள்ளகுட்டி வளத்தீக்கிய பஸந்து. மத்த மனிசருக்கு கரச்சல் குடுத்துக்கொண்டு... அநியாயம் செஞ்சிக்கொண்டு திரீதது உம்ம வாப்பாவுக்குத் தெரியவேன்" ஆத்திரம் பொறுக்க முடியாமல் தன்னந்தனியாக நின்று கத்தினாள்.

❖ ❖ ❖

"வாடா தண்ணி குடிக்கோம்"

கப்பிக் கிணற்றில் வாளி தொங்கிக் கொண்டிருந்தது.

கிணற்றருகே நெடிதுயர்ந்த இரண்டொரு பாக்கு மரங்கள் காணப்பட்டன.

ஒவ்வொருவராக தண்ணீர் அள்ளி ஊற்ற அடுத்தவர்கள் இருகைகளையும் கூப்பி நீர் பருகித் தாகம் தீர்த்தனர்.

கடைசிஆள் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்தான்.

பாக்கு மரத்திற்கு முதுகைக் கொடுத்து சாய்ந்து நின்றான் மமராதி. இந்த மரத்தில்தான் கிணற்றுக் கயிற்றின் மறு அந்தம் கட்டப்பட்டிருந்தது.

"டேய் தண்ணி குடிச்சி முடிஞ்சா"

"ஓ... ஓ..."

"அப்ப வாளிய தொங்குடு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் பிறப்பித்த ஆணைக்கேற்ப அவனும் தொங்கவிட்டான். எவருக்கும் விளங்காமல் பாக்குமரத்தில் கட்டியிருந்த கயிற்றின் மறு நுனியை மெல்ல அவிழ்த்து விட்டான். வாளி கயிறெல்லாம் வேகவேகமாய் ஓடி கிணற்றுக்குள்ளே தொப்பென்று விழுந்து விட்டது.

எல்லோருக்கும் சிரிப்புத்தான்.

"இன்னவா... பாளிய கெணத்துக்குள்ள போட்டிட்டோவ்" எவனோ ஒருவன் சத்தமிட்டான்.

அது வீட்டுக்காரருக்குக் கேட்டதோ இல்லையோ, எல்லோருக்கும் ஒரே ஓட்டமாக தடதடவென ஓடி ஒளிந்து விட்டார்கள். வீட்டுக்காரர் வாளியையும் கயிற்றையும் வெளியெடுக்க ரொம்பத்தான் கஷ்டப்படப் போகிறார்கள். அந்தளவுக்கு கிணறு ஆழமானது.

❖ ❖ ❖

சாரத்தை சரிசெய்து மீண்டும் உடுக்கும் போது அவனது இடுப்பிலே தொங்கிய கெடபொல்லை மமராதி கண்டுவிட்டான்.

"டேய் கெடபொல்லக் கொஞ்சம் தாவேடா"

"ஏளடா நான் போகப்போற" அவன் மறுத்தான்.

"இங்க தாடா கொஞ்சம்" ஒரேயடியாக இடுப்பை அழுத்தி இழுத்தெடுத்துக் கொண்டான்.

"இப்பதாண்டா அம்ஜத்துக்கிட்ட பத்துருவக்கு வாங்கிக் கொணுவார" ஆசைப்பாட்டோடு அவன் சொன்னான்.

"நான் அடிச்சிப் பாத்திட்டு நாளக்கித் தாரனே"

"ஆவ்டா... நான் நாளக்கி ஒனக்குத் தாரன்"

"ஏத்தியன்டா ஒரு நாளக்கித்தானே"

"ஏலடா" என்று அவன் பாய்ந்து பிடித்தான்.

அடுத்த கணம் கையைப் பொத்தி அவன் கன்னத்திலே குத்தினான் ஒரு குத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம். மமராதியின் சண்டித்தனத்துக்குப் பயந்து, கண்ணீர் வழிய அவன் பின்வாங்கினான்.

அவனுக்கு அடித்தது பற்றியோ அவனது கெடபொல்லைக் கவர்ந்து கொண்டது பற்றியோ மமராதி ஒன்றும் அலட்டிக் கொள்ளவில்லை.

கற்களைப் பொறுக்கிப் பொறுக்கி காகம், குருவி, அணில்களென்று அடித்துக் கொண்டிருந்தான். இவனது கல்வீச்சுக்கு கலைந்து பறந்தன, ஓடினவே தவிர எதுவும் அடிபட்டு விழவில்லை. ஏதாவதொன்றை எப்படியாவது வீழ்த்துவதே அவனது வேட்கையாக இருந்தது.

இயலாமை வெறியாக மாறிவரும் கட்டத்தில்தான் அந்த வேலிக்கு மேலே சேவலொன்று நிற்பதைக் கண்டான். அது யாரோ ஒரு வீட்டாருடையதென்பது அவனுக்குத் தெரியாத சங்கதியல்ல. அடுத்த கணம் செட்டைகளை அடித்து கிக்கிக் சத்தம் போட்டபடி துடிதுடித்து விழுந்தது சேவல்.

வீட்டுக்காரர் வெளியே பாய்ந்தார். அங்கே மமராதி மாத்திரமே கெட்டப்பலும் கையுமாக நின்றான்.

"நீயாடா சாவலுக்கு அடிச்ச... ஏத்துக்கன்டா இப்பிடி அநியாயம் செய்த"

"நானல்லவா" என்றபடி எதுவுமே தனக்குத் தெரியாத வாக்கில் நடந்து கொண்டிருந்தான்.

"தாரட ஹராங்குட்டியோ தெரிய. நாசமாப் போகோணும்..." சேவலின் முதுகைத் தடவியபடி சபிக்கத் தொடங்கினாள் ஐசும்மா.

❖ ❖ ❖

கடையிலிருந்து அப்துல் கஃப்பார் வந்துசேரும் போது மஃரிபுக்கு பாங்கு சொல்லியாகி விட்டது. ஃபிளாஸ்கிலிருந்து கோப்பி ஊற்றிக் கொடுத்தாள் மனைவி. அவருக்கு கதைக்க நேரமில்லை. அவசரமாகப் பள்ளிவாசலுக்குப் புறப்பட்டார். இருந்தும் இமாம் ஜமாஅத்தைப் பிடிக்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுழுச் செய்துகொண்டு உள்ளே செல்லும்போது வெளிப் பள்ளிப் பக்கவாட்டில் ஃ.லீம் வாசிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அன்று மஹல்லா நாளாக இருக்க வேண்டும்.

விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் அமர்ந்திருந்தார்கள். அதிலே இரண்டு மூன்று சிறுவர்கள் வெள்ளைத் தொப்பி, ஜூப்பாக்களோடு அழகாக அமர்ந்து காது கொடுத்துக் கொண்டிருந்தனர். கூர்ந்து பார்த்தார் அப்துல் க.ஃப்பார். என்ன சந்தோஷம். அவரது மகன் மமராதி அதில் ஒருவனாக...

"யா அல்லாஹ். இப்பிடிப்பட்ட ஸாலிஹான புள்ளய எனக்கு தந்தீக்காயே... ஒனக்கு எல்லாப் புகழும்" என்று கையேந்தி சுக்கூர் செய்து முகத்தில் தேய்த்தபடி தொழுகைக்குத் தயாரானார் அப்துல் க.ஃப்பார்.

(தினகரன் 04.02.2007)

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு வரம்

அடுப்பில் தண்ணீர் வைத்துவிட்டு அஸர் தொழுதால் தொழுது முடியும்போது தண்ணீர் தமதமவென்று கொதிக்கத் தொடங்கிவிடும்.

தொழுத கையோடு ஒரு கோப்பைக் கோப்பி குடிக்காவிட்டால் அஸீன தாத்தாவுக்கு வேறெதுமே ஓடாது.

"இந்தாங்கொ கோப்பி ஆறமுந்திக் குடீங்கொ... நான் நல்ல தண்ணி ஒரு கொடம் எடுத்துக்கொணு வாரன்"

கிழவனுக்கு கோப்பி கொடுத்துவிட்டு பதிலுக்குக் காத்திராமல் குடத்தோடு வெளியிறங்கினாள் அஸீன தாத்தா.

"சீக்கிரம் வா செய்னம்பு"

இரண்டு வீடு தள்ளி, வெளியே நின்று ஒரு பாட்டம் கத்திவிட்டு, ஆட்டுக்குட்டிகளின் கூத்தை ரசித்துக் கொண்டிருந்தாள்.

"வாங்க போம்" செய்னம்பு வந்துவிட்டாள்.

இருவரும் தார் றோட்டைக் கடந்து, புச்சோரூட்டு முடுக்கால் பள்ளத்து றோட்டுக்கு இறங்கினர்.

வயலும் தென்னந் தோட்டமுமான உயிர்ப்புள்ள பிரதேசம்தான் அது. அங்கு காலாற கொஞ்சத்தூரம் நடப்பதே சுகானுபவம்தான்.

"இது தாரன் அஸீனும்மே சின்னக் கடயொண்டு போட்டீக்கி?"

"பொடி அப்புட காணீக்குள்ள தாராலும் வந்து கடபோடியன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாரேடி அந்த மீசக்காரன் சிரிக்கியத்த"

"அவனுக்கு ஒன்னத் திட்டமாயீக்கும்"

"சீ... அவன்ட மீசயப் பாகோணேன்"

"ஒனக்குத் தெரியவா செய்தி.... இவன் பொடி அப்புட மகளோட நல்லமாமேன்"

அஸீனும்மா சொன்ன விடயத்தை செய்னம்புவால் நம்பமுடியவில்லை.

"இவன் சும்ம ரஸ்தியாதுக் காரனொன்டு போல.... மல்காந்தியாம் கடபோட்டுக் குடுத்தீக்கிய"

"அப்ப உம்ம வாப்ப பாக்க கேக்கியல்லயாமா?"

"அதியள் எனத்த செய்யவன் இப்ப"

பேச்சோடு பேச்சாக அஸீனும்மவும் செய்னம்பும் அர்னோலிஸ் அப்புவின் கிணற்றண்டை வந்துவிட்டார்கள்.

பைப் லைன் வந்த பின்பும் பழக்க தோசம் இவர்களை விட்டுவிடவில்லை. இந்தக் கிணற்றுத் தண்ணீர் குடித்தால்தான் திருப்தி.

தண்ணீர் அள்ளிக் கொண்டு இருவரும் வெளிக்கிட்டனர்.

"மல்காந்திய சின்னத்திலீந்தே எங்களுக்குத் தெரிமேன். உம்மோட கீரக்கட்டு, தேங்கா எடுத்துக்கொண்டு எங்கட அசலுக்கு வாரேன்"

"ஓடீ அவளுக்கு நடக்கியதெல்லாம் சும்ம பைஸ்கோப்பில நடக்கியமாதிரி.... பாவம்"

அஸீனும்மாவால் ஜீரணித்துக் கொள்ள இயலவில்லை.

❖ ❖ ❖

மல்காந்தி மொங்கலிதிஸ்ஸ பாடசாலையில்தான் படித்தாள். சுறுசுறுப்பும் அழகும் நிரம்பியவள் அவள்.

படிப்பில் அவள் சாதாரணமாகவிருந்தாலும் ஏனைய விடயங்களில் மிகவும் முன்னுக்கு நின்று பிரகாசித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாந்தம் வெசாக் பெரஹரா நடக்கும்போது அதிலே அவள் சுளகு நடனம் ஆடிக் கொண்டு போகும் அழகே தனி. பாடசாலை மேடைகளிலும் அவளது நடனங்கள் அவ்வப்போது அரங்கேறும்.

மல்காந்தியின் வளர்ச்சியும் கால ஓட்டமும் கண்ணுக்குத் தெரியவில்லை.

அவள் ஏ.எல். படித்துக் கொண்டிருந்தாள்.

❖ ❖ ❖

"மல்காந்தி ஆமிக்காரனோட பாஞ்சி பெய்த்தாம்"

ஊரெல்லாம் இந்தச் செய்தி பரவியது.

கண்ணீர் விட்டு கதறி அழுத அலிஸ் அக்காவை செய்னம்பும் பக்கத்திலிருந்து தேற்றிக் கொண்டிருந்தாள்.

"கரச்சல் போட்டுக் கொள வாண. எங்களுக்கு நீ மட்டும்தான் புள்ள. படிச்சி முன்னுக்கு வாவெண்டு எத்தின தரம் சென்னன். கேட்டா அவள்" அலிஸ் அக்கா தலையில் கையடித்துக் கதறினாள்.

"ஆமிக்காரனோட போனதுதான் எனக்கு மனவருத்தம். இந்த சண்டைக்காலத்தில.... ம்.... ஒரு நாளைக்கி எத்தின சாவு வாரன்... மண்ட காஞ்சவள்" பொடிஅப்பு பொருமி வெடித்தார்.

ஒரு வருடத்துக்கு மேல் செல்லவில்லை. மல்காந்தி வந்திருப்பதாகச் செய்தி பரவியது. உண்மைதான். வாயும் வயிறுமாக வந்திருந்தாள். அந்நிலையில் அவளோடு பொருத முடியுமா என்ன?

"எங்கட புள்ளயேன் பொகுத்து பாரத்தால லேசாகோணேன்" அலிஸ் அக்கா மகளை நியாயப்படுத்தி வரவேற்றுக் கொண்டாள்.

மல்காந்திக்கு அழகான ஆண் குழந்தை கிடைத்தது. அண்டை அயலவர்கள் போய்ப்பார்த்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமிக்காரன் அவ்வப்போது வந்து போய்க் கொண்டிருந்தான். குழந்தை கிடைத்ததற்கும், அவனுக்கு வடபகுதிக்கு இடமாற்றம் கிடைத்ததற்கும் சரியாகவிருந்தது. யுத்தப் பிரதேசத்தில் செயலாற்றுவதை ஆமிக்காரர்களால் தவிர்ப்பது சுலபமான விடயமல்ல.

பையனுக்கு ஒரு வருடம் கழிந்து இரண்டாம் வருடம் நடந்து கொண்டிருந்தது.

ஆமிக்காரர்களுக்கு இப்பொழுதெல்லாம் நீண்ட இடைவெளிக்குப் பிறகே லீவு வழங்கப்படுகிறது போலும்.

"வராட்டீம் பிரச்சினில்ல. உசிரப் பாதுகாத்துக் கொண்டாச் சரி"

மல்காந்தி கணவனோடு தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் போதெல்லாம் இதைத்தான் சொல்லி வந்தாள்.

ஒருநாள் வரக்கூடாத செய்தி வந்தேவிட்டது. தாக்குதலொன்றின் போது அவன் மரணமடைந்திருந்தான்.

"நானும் சாகிய நானும் சாகிய.... ரெண்டு வருஷத்து புள்ளய உட்டிட்டு பெய்திட்டாரே" மல்காந்தி தலைவிரி கோலமாய்க் கத்தினாள்.

அவளை எவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

"ஆச்சி" என்று ஒரு கட்டத்தில் செய்னம்புவை கட்டிப்பிடித்தபடி கத்தினாள்.

"பாவம்.... இவளுக்கு கொஞ்ச நாளாக் கரச்சலேதான்" தலையைத் தடவியபடி கூடியிருந்தவர்களோடு சொல்லிக் கவலைப்பட்டாள், அஸீனும்மா.

சகல மரியாதைகளோடும் சவப்பெட்டி வந்து சேர்ந்தது. இறுதிக்கிரியைகளும் செவ்வனே நிறைவேறியது.

மல்காந்தி எலும்பும் தோலுமாக மாறிக்கொண்டு வந்தாள். இப்படியே ஓராண்டு கழிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனின் முதலாண்டு நினைவை விஸ்தாரமாகக் கொண்டாடினாள்.

எப்பொழுதும் கவலையில் விழுந்து கிடப்பதில் அர்த்தமில்லையென்றும், இனி பையனை ஒழுங்காக வளர்க்க வேண்டுமென்றும் பலரும் ஆலோசனை வழங்கினார்கள்.

எத்தனை நாளைக்குத்தான் அவளும் இப்படியென்று இருக்க முடியும்.

அவளது மனப்பாங்கில் மாற்றங்கள் அரும்பத் தொடங்கின.

அவளது பெற்றாரால் தான் என்ன செய்ய முடியும்! அவர்களும் இயலாத வயதுக்கு வந்துவிட்டார்கள்.

❖ ❖ ❖

அஸீனும்மாவின் மாப்பிள்ளை கிழவர் இன்னும் எழுந்த-பாடில்லை. கோப்பிக் கோப்பை காலியாக அருகே கிடந்தது.

"ம்.... இன்னேம் கட்டில்ல"

"ஆ... நலதண்ணி கொணந்தா?" என்றவாறு எழுந்தமர்ந்தார்.

இன்னும் சிறிது நேரத்தில் பேரப்பிள்ளைகளைப் பார்க்க மாலை உலாப் போவார். அவ்வப்போது பொடி அப்புவையும் போய்ப் பார்ப்பார். இருவரும் நல்ல சிநேகிதம்.

அஸீனும்மா கட்டிலில் வந்தமர்ந்து கொண்டாள். ஏதோ ஒரு விசயம் இருப்பதுபோல் அவருக்குப்பட்டது.

"இந்தப் பள்ளத்து ரோட்டில தாரன் சின்னோரு கடபோட்டீக்கிய?" அவள் கதையைக் கிளறினாள்.

"பொடி அப்பு வீட்டு முன்னுக்கா?"

"ஓ... ஓ...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆ... அவனத்தானே இப்ப மல்காந்தி கிட்ட வாக்கிக்கோ நிக்கிய" கிழவர் உறுதிபடச் சொன்னார்.

"கத்தமே பொறவு.... அவள் ஆமிக்காரனோட கூட்டாளியாகிக் கலியாணம் புடிச்சிட்டு... ம்... அவன் செத்த டைமில அழுத அழுக நெனவீக்கா... ம்... மனிச ஜாதி"

இவ்வளவு காலத்துக்கும் அவளுக்கு மல்காந்தி மீது இவ்வளவு வெறுப்பும் கோபமும் ஏற்பட்டதேயில்லை.

"அ... அதப்பாக்க அவனக் கலியாணம் முடிச்சிக் கொளேலன்" அவளது சந்தேகத்தை எழுப்பினாள்.

கிழவனின் முதுகுத் தண்டு நிமிர்ந்தது. அர்த்தபுஷ்டியோடு சிரித்தார்.

"ஆமிக்காரன்ட சம்பளம் அப்பிடியே அவளுக்குக் கெடக்கியாம். ரெஜிஸ்டர் பண்ணி இன்னுமொரு கலியாணம் புடிச்சா அது இல்லாப் போறாம்... வெளங்கினா?"

அஸீனும்மாவுக்கு விஷயம் விளங்கிவிட்டது.

சிரிப்பை அடக்க முடியவில்லை. கூடவே கிழவனும் சேர்ந்து சிரிக்கத் தொடங்கிவிட்டார்.

(மல்லிகை ஜுலை - 2004)

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியவர்கள்

எதிரெதிரே முகம் பார்த்தபடி ஒவ்வொன்றும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்ட தலா ஐந்து கூறுகளைக் கொண்ட இரண்டு கட்டிடங்கள்.

அதற்கிடையே பொது முற்றம். நடமாட்டத்திற்கான பாதையும் அதுதான். மழைக் காலங்களில் கூரை நீர் பாய்ந்தோடும் வாய்க்காலும் கூட.

தோட்டப் பக்க லயன்கள் போல் அமைந்திருந்தாலும் அமைவிடம் சற்றே வசதியானது. அதற்குள் பத்துக் குடும்பங்கள் அடக்கம். மிகமிகப் பழைய கூரை, சுவர்கள்.

'முடுக்கூடு' என்று யாராவது சொன்னால் அது இந்த இடத்தைத்தான் குறிக்கும். இங்கு பிறந்து வாழ்ந்த பலர், இன்று பேர் சொல்லும்படியாகப் பல இடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இப்போதுள்ள குடும்பங்களைப் பார்க்கையில் காதர்ஸா குடும்பத்தினரே நீண்ட காலத்துக்குரியவர்கள். அவரது வாப்பா வழியால் கிடைத்த வீட்டிலேயே இன்னும் மனைவி மக்களோடு வாழ்ந்து வருகிறார். அவருக்கு அறுபது வயது நெருங்கியும் எந்த முன்னேற்றத்தையும் இதுவரை காணவில்லையென்பதே உண்மை.

காதர்ஸாவுக்கென்றொரு தொழிலில்லை. மனைவி மகா கெட்டிக்காரி. இன்றுவரை நின்று பிடித்து வருகிறாள். அந்தப் பகுதியில் எல்லோருக்குமே மைமூனா தேவை. சடங்கு, சாமத்தியம், கல்யாணமென்று எது வந்தாலும் அங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளிருப்பாள். அவளுடைய யோசனையும் வழிகாட்டலும் இருக்கும்.

காதர்ஸா ஒருவித புராஜல் பேர்வழி. எல்லோருக்கும் நண்பன். நாளாந்தம் செலவைத் தேடிக் கொள்வார். மாலை ஐந்து மணி நகரும் போது, பாவாஸா லேகியம் ஒரு உருண்டை போடாவிட்டால் கையும் ஓடாது காலும் ஓடாது. வீட்டில் ஏதாவதிருந்தால் சாப்பிட்டுவிட்டுப் படுக்கையில் புரண்டுவிடுவார். அது மைமூனாவைத் தவிர வேறு எவருக்கும் விளங்கவும்மாட்டாது.

இதற்கிடையில் சொல்வார்த்தை கேட்காமல் வளர்ந்து விட்ட அவர்களது மகனுக்கு இருபத்தொரு வயது. ஓதல் - படிப்பு என்று ஒன்றும் உருப்படியில்லை. எங்காவது கடையில் சேர்த்துவிட்டால் இரண்டொரு நாளில் ஓடி வந்து விடுவான்.

இப்பொழுது கொஞ்ச நாட்களாக அவனுக்கு ஏதோவொரு வகையில் புத்தி வந்திருப்பதாகவே மைமூனாவுக்குத் தோன்றியது. ஏதோ வேலை என்றபடி காலையில் போய்விடுவான். மாலையில் இருநூறு முன்னூறு ரூபாவோடு வருவான். அவனுக்கென்று பிரத்தியேகமான தேவையென்று ஒன்றுமில்லை. பஸ் செலவுக்கு வைத்துக் கொண்டு மற்றதை உம்மாவின் கையில் கொடுத்து விடுவான்.

"மைமூனா இப்பொங்கட மகன் ஜாதியெனா?" ஒரு நாள் அடுத்த வீட்டு அஸ்மியா ஆரம்பித்தாள்.

"பேசாமிரீ கண்ணூறு படாம. இப்பதான் அவனுக்கு சாட புத்தி வந்தீக்கி?" அதற்குமேல் பேசவிடாமல் இடைநிறுத்தி விட்டாள் மைமூனா.

மகனின் ஒழுங்கான நடவடிக்கையை உறுதிப்படுத்திக் கொண்டு, இப்பொழுது நாளாந்தம் நூறு ரூபா சீட்டுக் கூடப் பிடித்து வருகிறாள்.

இப்படியிருக்கும் போது தான் இடி விழுந்தது போல் அந்தச் செய்தி வந்தது அன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“காதர்ஸாட மகன பொலிஸால புடிச்சி” வாய்க்கு வாய் வந்த செய்தி. மைமூனா துடிதுடித்துப் போனாள். எவரிடம் எங்கே விசாரிப்பதென்றே அவளுக்குத் தெரியவில்லை.

“மாத்தறே பஸ்டாண்டில வெச்சி புடிச்சீக்கி”

ஏதோ வேலையென்று ஒவ்வொரு நாளும் மாத்தறைக்குப் போய்வரும் விஷயம் மட்டுமே அவளுக்குத் தெரியும். மேல் விபரங்களை அவள் கேட்பதுண்டு. அவன் சொன்னால்தானே.

“பாருங்கொளே வந்த வருத்த. கொஞ்ச நாளா ஒரு கரச்சலில்லாமீந்த. மனிசரு கண்ணால திண்டு போட்ட... ம்.... இந்த மனிசனும் எங்க தொலைஞ்சோ தெரிய”

சூழநின்று எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தனரே தவிர, எப்படி உதவுவதென்று அவர்களுக்குத் தெரியவில்லை.

“இது.... கஞ்சா பார்சலோடயாம் புடிச்சீக்கிய” யாரோ இருவர் சைக்கிளில் வந்து போவதோடு இந்த மோசமான செய்தியும் பரவியது.

“ஒன்ட ஒம்பதாக்கிப் பேசுவாங்க. அவனுக்கு கஞ்சாவேம் தெரிய அபினேம் தெரிய. வெளப்பமில்லாதவன்.”

மைமூனா சொல்வது உண்மைதான். அவனுக்கு அப்படியெல்லாம் ஒன்றும் தெரியாது. பெரும் பணம் தேடும் நோக்கமும் கிடையாது.

“இப்ப எப்பிடிச்சரி பொடியன பேராபிக்கோணும். எதுக்கும் ச.ஃ.ப்ராஸ் தொரேக்கிட்ட செல்லிப் பாக்கியது நல்லம். அவரு பொலிஸோட நல்ல தெறமாம். பாத்துப் பாத்து நிண்டு சரிவாரல்ல. வா போம். பொலிஸ்காரனியள் போட்டு அடிக்கியாயீக்கும். பாவமேன்”

சுட்டெரிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாது இருவரும் நடந்தனர்.

ச.ஃ.ப்ராஸ் தொர ஊர்ல பிரபலமானவர். இரண்டு தடவை இலக்ஷனில் நின்று பிரதேச சபைக்குத் தெரிவானவரும் கூட, லாப நட்டம் பார்க்காமல் ஊருக்குச் சேவை செய்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ அவசரமான காரியமென்பதைப் புரிந்து கொண்டு கேற்றைத் திறந்து விட்டனர்.

"தொர ஏன்ட மகன மாத்தறேல பொலிஸால புடிச்சீக்காம் ஒங்களுக்கு நன்ம கெடக்கும்.... அவன் படிப்பில்லாதவன்.... எப்படிச் சரி எடுத்துத் தாங்கொ தொர.... எங்களுக்கு செலவழிக்க சல்லீமில்ல ஆள்களுமில்ல" இடைநிறுத்தாது மைமூனா சொல்லிக் கொண்டிருந்தாள்.

"ஆ... நானும் கேள்விப்பட்ட... ம்... இதில நானெப்பிடியன் தல போடிய.... இது கஞ்சா கேஸ்.... இந்தக் காலத்தில இதியளுக்கு சமா இல்ல. நல்ல விசயங்களுக்குத் தான் நான் முன்னுக்காகிய"

"அப்பிடிச் செல்லவாண தொர.... எங்களுக்கு தாரனீக்கிய?" மீண்டும் மைமூனா அழ ஆரம்பித்தாள்..."

"இது மிச்சம் தூரம் பொகாது. உடுவாங்க போலீக்கி.... கொஞ்ச நேரம் பொறுத்துக்கோங்கொ. அந்திபட்டே பாக்கோம்"

அவருக்கு விளங்காதா என்ன? இப்படி எத்தனை பிடிபட்டு விடுபட்டிருக்கிறார்கள். ஏதோவொரு ஊகத்தில் நம்பிக்கையூட்டினார்.

அவருடைய பேச்சிலிருந்து இதை அவ்வளவு பாரதூரமாக எடுக்கத் தேவையில்லையென அஸ்மியாவுக்குத் தோன்றியது.

"செல்லியது வெளங்கல்லயா... மகன் வாரொன்டும். வாங்க போம்..."

மைமூனாவைக் கூட்டிக் கொண்டு அங்கிருந்து வெளிப்பட்டாள் அஸ்மியா.

ஆங்காங்கே இரண்டு மூன்று பேர் கூடிக் கூடிக் கதைப்பது தெரிந்தது. எல்லோரும் இதைக் கதைப்பதாகவே மைமூனா எண்ணினாள்.

அவர்கள் வரும்போது முடுக்கூட்டு முற்றத்தில் மோட்டார் பைக்கொண்டு நின்றது. அதனைச் சூழ்ந்து கொண்டு எல்லோரும் கதை கேட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டசாட்டமான அந்த இரண்டு பொடியன்களும் யாரென்று தெரியவில்லை. அவர்களது நடை உடை பாவனைகள் உயர்ந்த தன்மையை வெளிப்படுத்தின.

"ஆ... இதுதான் அவன்ட உம்மா" யாரோ அறிமுகப்படுத்தினார்கள்.

அவன் சிரித்துவிட்டுச் சொன்னான்.

"நீங்க ஒண்டும் யோசிக்க வாண... மகன் அந்தியாகச் செல்லே வார"

அவளது கல்பு இப்பொழுது தான் நேராகியது. ச∴ப்ராஸ் தொரயும் அப்படித்தானே சொன்னார்.

பைக்கை வெட்டித் திருப்பி சிரித்துக் கொண்டே அவர்கள் பறந்தனர்.

"தாரன் புள்ள அது...?" மைமூனாதான் கேட்டாள்.

"ஒங்கட மகனோட இவங்க பேசிக்கோ நிக்கியத்த நான் எத்தினயே பைணம் கண்டீக்கி. பயப்புடத் தேவில்ல மைமூன தாத்தா." மகனின் வயது பொடியன் ஒருவன் தான் அவன்.

"மைமூன தாத்தா வாங்கொ... சோறு ரெண்டு மணிய வாயில போடோம்" பாத்துமுத்துவின் அழைப்பு.

மைமூனாவை எவருமே கைவிடவில்லை. அவரது துயரத்தில் பங்குபோட்டுக் கொண்டனர். துன்பம் நேர்கிற போதுதான் உண்மையாக அன்பும் ஆதரவும் வெளிப்படுமென்பதை முடுக்கூடும் உறுதிப்படுத்தத் தவறவில்லை.

ஏதோ அவள் சாப்பிட்டாள். அடிக்கடி மூக்குத் தூள் போட்டுக் கொண்டாள். கொடுத்த கோப்பியைக் குடித்தாள். என்னதான் செய்தாலும் மகனைக் காணும் வரை அவளுக்கு நிம்மதியில்லை.

ஆறு மணி பிந்தி வரும் காதர்ஸா அன்று நேர காலத்தோடு வந்திருந்தார். ஆனால் வழமை போல லேகியம் விழுங்கத் தவறவில்லையென்பதை சிவப்பு சுருண்ட கண்கள் கூறின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனத்தியன் மகன்ட செய்தி...?" வந்ததும் வராததுமாக யாரோ வாயைக் கிளறினர்.

"கஞ்சா யாவரியள்ட வேல. படிப்பில்லாத இவனைப் போல பொடியனியள ஸெட் பண்ணி... குடுக்கியத்த செல்லிய எடத்துக்கு கொணுபோற... வெளங்கினா.... சும்மவல்ல. இருநூறு முன்னூறு கையில குடுக்கிய... எங்களுக்கு தெரியாத ஜாதியா.. புடிபட்டா பகா குடுத்து பேராபிக்கிய... ஒடனே பெய்த்தானியலாம் கூட்டிக் கொணுவர..."

காதர்ஸாவுக்குக் கொஞ்சம் 'மஸ்து' ஏறியிருந்தாலும் தெளிவாகவே சொல்லிவிட்டார். பலரதும் கண்கள் அப்போது தான் திறந்து கொண்டன.

"பெரியவங்க.... ஆனா பொல்லாதவங்க.... பொல்லாதவங்க. ஆனா பெரியவங்க... நாங்க... ஹி... ஹி.... சோத்து மாடுக..." ஆணியடித்தாற் போல இன்னும் ஒருபடி மேலாகச் சொன்னார்.

"ஆ... வாங்கொ உள்ளுக்கு..."

அதற்கு மேல் குழம்ப விடாமல் மைமூனா உள்ளே அழைத்துச் சென்றாள்.

அந்தப் 'பெரியவங்க' யாரென்று ஒரு சிலராவது இனித் தேடத் தான் போகிறார்கள்.

(தாயகம்- மார்ச் 2011)

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி சொல்லும் நேரம்



திக்குவல்லை கமால்

தென்னிலங்கை வாழ் முஸ்லிம் மக்களின் வாழ்வை பண்பாட்டுக் கோலங்களுடன் பிரதிபலிப்பது திக்குவல்லை கமாலின் கதைகளின் சிறப்பம்சமாகும்.

அவரது இடைவிடாத முயற்சியின் காரணமாக, இலங்கைத் தமிழ் சிறுகதைப் பரப்பில் தனக்கென ஓரிடத்தை தக்க வைத்துள்ளார்.

கதைக் கருக்கள் சமூக - கலாசாரப் பின்புலத்தில் தோற்றம் பெற்றாலும், அவை வெளிப்படுத்தும் செய்தி முழு மனித குலத்திற்குமானதாக அமைய வேண்டுமென்பதில் மிக்க கவனமாக இருந்து வருபவர்.

அதனை 'நன்றி சொல்லும் நேரம்' என்ற பத்தாவது சிறுகதை நூல் மூலம் மேலும் ஒரு தடவை உறுதிப்படுத்தியுள்ளார்.

கமாலின் கதைகள் வாழும் கதைகள்.

-மீரான்-

Fareedha Publication,
104, Atulugama, Bandaragama,
Sri Lanka.

ISBN 978-955-7301-01-3

Price: 300/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org